

கல்கி
KALKI
3.6.1962
30
காசு

அருமையான பொருள்களுக்கு உரிமையான இடமெதுவோ அங்கே...

ஆதரவுக்கு ஆதரவான அன்னைக்கு ஆதரவு: டால்டா





'ஆடி வரும் தேனே' என அள்ளி யணைத்து ஆரமுதூட்டத் தேடி வரும் உறவு... அன்னை! அவள் தருவதெல்லாம் உயர்வு... அறுசுவை உணவு ... எல்லாம் ஆசைக்கினியவை ... டால்டா வனஸ்பதியினால் சமைத்தவை! தரத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களாலான டால்டா ... சுகாதார முறைப்படி ஸீலிட்ட டப்பாக்களிலே புதுமையோடு வரும் தூய்மையான டால்டா ... வளரும் கண்மணிகளுக்கு வேண்டிய வைட்டமின்கள் அடங்கிய வனஸ்பதி ... எந்த நாளும் நம்மவர்க்கே சொந்தமன்றோ ...

டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

DL. 79-X52 T!



*** எந்நேரத்திலும்
எவ்விடத்திலும் ***
எச்சந்தர்ப்பத்திலும்


அழகு மலர்ந்து மணம் வீச
ரெமி
பவுடர்
Aykan

சுபகிருது, வைகாசி 21 — கல்கி — ஜூன், 3, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட்டின் விலை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு தரமும் உயர்வு என்ற கருத்து பற்பலரிடம் உண்டு. இது எப்போதுமேயோ, எல்லா விஷயங்களிலுமேயோ உண்மையாகிவிடுவதில்லை. ஏனென்றால், அத்தகைய விலையில் மிகப் பெரும் பங்கு பற்பலவான வரிகளுக்கே போய்ச் சேருகின்றன.

புகையிலையின் வரலாறு... 10



பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—37.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 710 TM

Grants' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 44

நடுத்தரக் குடும்பத்தினரின் சேமிப்பு

நகர்ப்புறங்களில் வசிக்கும் மத்தியதரக் குடும்பங்கள் சேமிப்பு செய்யும் விதங்களையும் போக்குகளையும் கண்டறியத் திட்டக் கமிஷனுடைய உதவியுடன் திருச்சி நேஷனல் கல்லூரியின் திட்ட அரங்கம் ஓர் ஆராய்ச்சியை நடத்தியது. திருச்சி — ஸ்ரீரங்கம் வட்டாரத்திலுள்ள சுமார் முந்நூறு குடும்பங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப் பட்டன. மத்தியதரக் குடும்பங்கள் எவை என்பதற்கு நிச்சயமான லட்சணம் சொல்லப்படா விட்டாலும், மாதம் 150-லிருந்து 600 ரூபாய் வரையில் வருமானம் உள்ள குடும்பங்களே பொறுக்கி யெடுக்கப்பட்டு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இதன் விளைவாகக் கிடைத்த செய்திகள், அதிர்ச்சி விளைவிக்கக் கூடியவை அல்ல; உண்மையை எடுத்துக் கூறுகின்றன.

முந்நூறு குடும்பங்களில் 190 குடும்பங்கள் மட்டுமே சேமிப்பு செய்கின்றனர், மற்றவர்களால் சேமிப்பு செய்ய முடிவதில்லை. இந்த 190 குடும்பங்களிலும், சொந்த வீடு வைத்துக் கொண்டிருக்கும் 49 குடும்பங்களும், (அதனால் வீட்டு வாடகை மிச்சம்) போக்குவரத்துக்காகச் சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகன வசதியுடைய 125 குடும்பங்களும் (இதனால் போக்குவரத்துச் செலவு குறைவு) சேமிப்பு அதிகம் செய்கின்றன; மற்றக் குடும்பங்கள் அந்த அளவுக்குச் செய்வதில்லை. இவ்வாறு ஓராண்டில் சேமிப்பு செய்யப்படும் தொகையின் அளவு குடும்பம் ஒன்றுக்குச் சராசரி 350 ரூபாய். சொந்த வீடு இல்லாமல் வாடகை கொடுக்க வேண்டி யிருந்தால், அல்லது சொந்தமாக வாகன வசதியில்லாது பணச் செலவு செய்ய வேண்டியிருந்தால் இந்தச் சேமிப்பு செய்திருக்க முடியாது என்பது இதிலிருந்து பெறப்படுகிறது.

'உங்களைச் சேமிப்பு செய்யத் தூண்டுவது எது?' என்று ஒரு கேள்வியை ஆராய்ச்சி யாளர்கள் குடும்பத் தலைவர்களைக் கேட்டார்களாம். 'இது என்ன அசட்டுக் கேள்வி? குழந்தைகளின் படிப்புக்கு, பெண்ணின் கலியாணத்துக்கு,—இது தெரியாதா?'—இப்படித் தான் அநேகம் பேர் பதில் சொன்னார்களாம். சிலர் மட்டும் சற்றுக் காரசாரமாகவே, "தாங்க முடியாத வரிகளின் சுமை - எங்களை அழுக்கும்போது, எங்கள் சொத்தெல்லாம் நஷ்டஈடு கொடுக்கப்படாமலே பறிமுதல் ஆகக்கூடும் என்ற பீதி உள்ளபோது, சேமிப்புக்கு உற்சாகம் இருக்குமா?" என்று சொன்னார்களாம். கேள்வி கேட்ட முந்நூறு குடும்பங் களில் ஒருவராவது ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றிக்காகச் சிறிது சேமிப்பு செய்ய வேண்டியது அவசியம்தான் என்று கருத்தளவில் கூடச் சொல்லவில்லையாம். இதை மிக வருத்தத்துடன் ஆராய்ச்சி அறிக்கை தெரிவிக்கிறது. எதற்காக ஆராய்ச்சியாளர்கள் வருந்த வேண்டும் என்றுதான் விளங்கவில்லை.

சேமிப்பு செய்வதை அதிகரிக்க வகை ஏதாவது இருக்கிறதா என்பதற்கு, கோயில் உற்சவ காலங்களிலே செலவழிக்கப்படும் தொகையை மிச்சம் பிடித்தால் ஒரு குடும்பத் துக்குச் சுமார் ரூபாய் 25 முதல் 30 வரையில் மிச்சப்படுத்தலாம் என்று ஆலோசனையும் இவ்வறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் நோக்கில் தெய்வ காரி யங்களுக்குச் செய்யப்படும் செலவு அனாவசியமான செலவு என்ற எண்ணம் போலும்!

திட்டக் கமிஷனிடமிருந்து பண உதவி பெற்று நடத்தப்பட்டாலும் ஆராய்ச்சி என்று தொடங்கப்படும் வேலை, அதிலும் கல்லூரி மாணவர்கள் ஈடுபட்டுள்ள வேலை, ஆராய்ச்சி மனப்பான்மையுடனேயே நடத்தப்பட வேண்டும்.

மொத்தத்தில் நடுத்தரக் குடும்பங்களின் தற்காலப் பொருளாதார நிலைமைக்கு இந்த அறிக்கை ஒரு விளக்கம்.

தும்பை விட்டு வாலைப் பிடி!

நாட்டின் வெளி நாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தை எப்படிப் பெருக்குவது என்று அல்லும் பகலுமாகச் சிந்தித்த அரசினர் ஓர் அபூர்வமான முடிவுக்கு வந்திருக்கின்றனர். நாட்டில் உற்பத்தியாகும் முக்கியமான எல்லாப் பொருள்களின் மீதும் இரண்டு சதவீதம் ஒரு ''செஸ்'' (உப வரி) விதித்து, அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, ஏற்றுமதி வியாபாரத்தில் உண்டாகும் நஷ்டத்தை ஈடு செய்யப் போகிறார்களாம். ஏற்றுமதி இலாகாவுக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ள அமைச்சர் திரு மனுபாய் ஷா அவர்களின் அரிய யோசனை இது.

இதன் பொருள் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நமது ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலை அதிகமாக இருப்பதால், வெளி நாட்டுச் சந்தைகளில் விலை போகவில்லை. என்ன விலைக்கு விற்க முடியுமோ, அந்த விலைக்கு விற்றால் நஷ்டம் ஏற்படுகிறது. நஷ்டப்பட்டுக் கொண்டாவது விற்பானேன் என்றால் அன்னியச் செலாவணி சம்பாதிப்பதற்காக, வெளி நாட்டு விற்பனை அத்தியாவசியமாகிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்காகக் குறிப்பிட்ட அந்தப் பொருள்களின் உள் நாட்டு விலையை உயர்த்துவது ஒரு வழி. இப்படித்தான் சர்க்கரைத் தொழிலில் ஏற்றுமதி நடந்து வருகிறது. இப்படி எவ்வளவு காலம் செய்ய முடியும்? அதற்காகத் தான் எல்லாப் பொருள்கள் மீதும் சமமாக இரண்டு சதவீதம் 'செஸ்' விதித்து ஏற்றுமதியாகும் பொருள்களில் ஏற்படும் நஷ்டத்தைச் சரிக்கட்ட உத்தேசித்திருக்கிறது. இதனால் அத்தியாவசியப் பொருள்கள் விலை ஏற்கனவே உயர்ந்திருப்பது போதாதென்று இனி இன்னும் அதிகமாகும்!

இந்த ஏற்றுமதி உபரி வரி மூலம் 25 அல்லது 30 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதியைப் பெருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 25 அல்லது 30 கோடி ரூபாய்களை நமது மக்கள் அதிக விலையாகக் கொடுப்பார்கள்.

நமது காங்கிரஸ் அரசாங்கத்தின் ஏற்றுமதிப் பெருக்கம் தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கும் கதையாகத் தான் இருக்கிறது. வெளி நாட்டுச் சந்தைகளிலும் லாபகரமாக விற்பனை செய்யும்படியான குறைந்த விலையில் நம் நாட்டில் ஏன் உற்பத்தி நடைபெறவில்லை என்பதை அல்லவா ஆராய்ந்து பார்க்க வேண்டும்? ஆனால் அப்படிச் செய்யாமல் அரை குறை வைத்தியத்தில் நோயின் மூலகாரணத்துக்கு மருந்து தராமல் புற அடையாளத்தை மட்டும் தீர்க்க முற்படுவது போல், ஏற்றுமதி பெருகவில்லையா, ''போடு ஒரு தனி வரி'' என்கிறது காங்கிரஸ் அரசாங்கம்.

என்ன சேதி?

பாட புத்தக வினியோகம்

பள்ளிச் சிறுவர்களுக்குப் பாட புத்தகங்களைத் தாங்களே அச்சிட்டு வெளியிடுவதுடன், வெளியிட்ட புத்தகங்களைத் தங்கள் அனுமதி பெற்ற புத்தகக் கடைக்காரர்கள் மூலமே வினியோகம் செய்யச் சென்னை அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதைப் பற்றிப் பரவலாகப் புத்தக வியாபாரிகள் கவலை கொண்டிருக்கிறார்கள்.


திருச்சி மாவட்டத்திலுள்ள புத்தக வியாபாரிகள் பீதி அடைந்துள்ளார்கள். அவர்கள் பீதிக்குக் காரணம் இரண்டு. அவர்கள் பிழைப்புக்கு இது உலை வைக்கிறது. புத்தக விற்பனை மூலம் வியாபாரிகளுக்குக் கிடைக்கும் கமிஷனை (பெரும்பாலும் இது 15 சதவீதம் இருக்கும்) கொண்டு அவர்கள் ஜீவித்து வருகின்றனர். அரசாங்கம் வெளியிடும் பாட புத்தகங்களின் மீது இந்தக் கமிஷன் கொடுக்கப்படுமா என்பது அவர்கள் கவலை. உற்பத்தி விலை அதிகமாகிறது என்று சொல்லி (அரசாங்கம் அச்சடித்தால் மலிவாக இருக்குமா!) கமிஷன் இல்லை என்பார்களோ? சர்க்காரின் அனுமதி பெற்ற கடைக்காரர்களாக இருப்பதற்கு ஏதாவது பிரத்தியேகத் தகுதி யோக்கியதாம்சங்கள் உண்டா? 'லைசென்சு'கள் ஏதேனும் பெற வேண்டுமா என்பவை அவர்கள் கவலை. உரலில் அகப்பட்டுக் கொண்டால் உலக்கைக்குப் பயப்படலாமா? அரசாங்கத்தின் அதிகாரம் இன்னின்ன துறைகளில் தான் பிரவேசிக்கலாம் என்ற வரம்புகள் இல்லாத சூழ்நிலையில், எது நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரிகள்

நோயாளியில்லாத ஆஸ்பத்திரி உண்டாக்குவது கஷ்டம் என்று,

கிணறு வெட்டப் பூதம்!


சோஷலிஸக் கிணறு வெட்டப்படுகிறது!
எஞ்சினியர்கள்: காங்கிரஸ் அண்டு கோ
PK


"ஒரு சில துளிகளைத்தானே பிழிந்து எடுத்துக்கொள்கிறேன். இதற்கேன் இவ்வளவு கூப்பாடு?"
மறைமுக வரிகள்
Rasi

டாக்டரே இல்லாத ஆஸ்பத்திரிகளைப் பஞ்சாப் சர்க்கார் சிருஷ்டித்தார்கள் போலும்!

பஞ்சாபில் தொண்ணூறு ஆஸ்பத்திரிகள் டாக்டர்களே இல்லாமல் 61-62 ஆண்டில் ஆறு மாதங்களுக்கு மேலாக வேலை செய்திருக்கின்றன என்று பஞ்சாப் ராஜ்ய சுகாதார மந்திரி மேல்சபையில் கூறியிருக்கிறார்!

இத்தனை ஆஸ்பத்திரிகள் திறக்கப்பட்டன என்று ஏழை மக்களுக்குப் புள்ளி விவரக் கணக்கைச் சொல்லி வோட்டுச் சேகரிப்பதற்காகச் செய்யும் காரியங்கள், எதில் போய் முடியும் என்பதற்கு மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்தி ஒரு நல்ல அத்தாட்சி!

மந்திரியின் அதிர்ச்சிகள்

புது மந்திரி திரு பூவராகனுக்குச் சமீபத்தில் புது மாதிரியான அனுபவம் ஏற்பட்டிருக்கிறது.

அவர் முன்னறிவிப்பு ஏதுமின்றிச் சூலூர் பஞ்சாயத்து ஆபீசுக்குப் போனார். ஒரே ஒரு உத்தியோகஸ்தரைத் தவிர ஆபீசில் வேறு ஒருவரையும் காணவில்லை!

அந்தப் பஞ்சாயத்து ஆபீஸில் கிராம மக்களுக்கு விநியோகம் செய்வதற்காகச் சர்க்கார் அனுப்பும் பிரசார இலக்கியங்கள் ஒரு மூலையில் தூசி படிந்து குப்பையாகக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டாராம்!

காங்கிரஸ் ஆட்சியில் கிராமப் பஞ்சாயத்துக்கள் 'புது விழிப்பு'ப் பெற்றுப் பிரமாதமாக வேலை செய்கின்றன என்று பெருமை அடித்துக் கொள்கிறார்கள். உண்மை நிலை என்னவென்பதை இப்போது மந்திரி புரிந்து கொண்டிருப்பார்!

அடுத்தாற்போல் கலங்கல் என்ற கிராமத்தில் கம்பளி நூல் தயாரிப்பு நிலையத்துக்குப் போனாராம்! அங்கும் ஆளில்லை! அங்கிருக்கும் உத்தியோகஸ்தர் மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் கோவைக்குச் சென்றிருப்பதாகச் செய்தி கிடைத்ததாம்!

பின்னர் கோவை நகரில் ராஜா தெருவிலுள்ள ரிஜிஸ்தர் ஆபீசுக்குப் போனால் ஆபீஸ் மூடப்பட்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டிருக்கிறார். மே 12 முதல் ஆபீஸ் தாற்காலிகமாக வேறு ஓர் இடத்துக்கு மாற்றப்பட்டிருப்பதாக ஓர் அறிவிப்பு அங்கு ஒட்டப்பட்டிருப்பதைப் பார்த்தாராம்.

இத்தகைய அனுபவங்கள் மந்திரிக்கு ஒரு நாளில் ஏற்பட்டது பத்திரிகையில் பெரும் செய்தியாக வருகிறது. ஆனால் பொது மக்கள் இத்தகைய விஷயங்களை நூற்றுக் கணக்கில் அன்றாடம் அனுபவித்து வருகிறார்கள்!

திரு சஞ்சீவி ரெட்டியின் அனுபவம்

சென்னை மந்திரிக்கு இப்படி அதிர்ச்சி ஏற்பட்டதென்றால், ஆந்திர முதன் மந்திரி திரு சஞ்சீவி ரெட்டியார் அனுபவங்களையும் சற்றுப் பார்க்கலாம்.

சமீபத்தில் சித்தூருக்குச் சென்ற மந்திரியாரிடம் ஊர் மக்கள் குடிதண்ணீர் விநியோகம் செய்யும் தொட்டி ஓட்டையாகி அதன் வழியே தண்ணீர் ஒழுகி, பெரும் பகுதி வீணாகிறது என்றும் அதை அடைத்து ரிப்பேர் செய்யும்படி பல முறை கேட்டுக் கொண்டும் யாரும் காதில் போட்டுக் கொள்ளுவதில்லை என்றும் முறையிட்டிருக்கிறார்கள்.

'இந்த ஒரு சின்ன வசதி கூடச் செய்யத் தெரியவில்லையா?' என்று முதன் மந்திரி கோபமுற்று யார் இதற்குப் பொறுப்பாளி என்று விசாரித்திருக்கிறார்.

'இதை ரிப்பேர் செய்யப் புகுந்தால் 70,000 ரூபாய் பிடிக்கும்' என்று அதிகாரிகள் சொல்லி யிருக்கிறார்கள்.

தொட்டி கட்டவே 70,000 ரூபாய் தான் பிடித்திருக்கிறது. ஆனால் அதற்கு ரிப்பேர் செய்ய ரூபாய் 70,000 தேவை.

இது எப்பொழுதிலிருந்து இம்மாதிரி ஒழுகுகிறது என்று கேட்டதில், கட்டி முடித்து, தண்ணீர் நிரப்ப ஆரம்பித்த நாளிலிருந்தே இம்மாதிரி ஒழுகுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே 70,000 ரூபாய் செலவில் தொட்டியைக் கட்டிய கண்டிராக்டர், அதனை மேற்பார்வை செய்த என்ஜினீயர்கள் யாவருக்கும் இதில் பொறுப்புண்டு என்பதை அறிந்தபோது முதன் மந்திரியின் அதிர்ச்சி தாங்க முடியாததாகி விட்டதாம்!

பொது மக்கள் பணம் எப்படி வீண் விரயம் செய்யப்படுகிறது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

இப்போது அதனை இடித்துத் தள்ளி மீண்டும் புதிய தொட்டி கட்ட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேலாகலாம்!

அந்தப் பகுதியில் ஆசாரிய ரங்காவின் தேர்தல் பிரச்னை இருக்கிறபடியால் தொட்டி விரைவில் கட்டி முடித்துத் தரப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இது முனிஸிபாலிடியின் யோகம்.

திருப்பூர் மக்கள் அடைந்த யோகம் சித்தூர் மக்களுக்கும் ஏற்படலாம்!

பெருமன்றத்தின் முதல் விழா

சென்ற வாரம் சென்னையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது! யாருக்கும் மனக் கசப்பை உண்டாக்காமல் ஒரு பெரிய எழுத்தாளர் மகாநாடு நடந்து முடிந்தது.

நாலு எழுத்தாளர்கள் கூடினால் அதில் மன வேறுபாடுகள் விளையாமல் இராது. அதிலும் நானூறு பேர் கூடி ஒரு மகாநாடு நடத்தினால் சொல்லவே வேண்டாம். ஆனால் இந்தத் தடவை மகாநாட்டில் அம்மாதிரி ஒன்றும் நிகழாததோடு, பலப்பல புதிய விஷயங்களை எழுத்தாளர் உணரும் வகையிலும் அவர்கள் மன நிறைவோடு செல்லும் வகையிலும் அமைந்திருந்தது!

மே 19-ந் தேதி மாலை டாக்டர் ஹுமாயூன் கபீர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். திரு அழ. வள்ளியப்பா எழுத்தாளர்களும் டாக்டர் ஸி. டி. தேஷ்முக் போன்ற அறிஞர்களும் நிறைந்த சபையை வரவேற்று இனிய உரை நிகழ்த்தினார்.


டாக்டர் ஹுமாயூன் கபீர் அவர்கள், "பலப்பல மொழிகள், மதங்கள், மனப் போக்குகள் உள்ள நம் நாட்டில் இவர்கள் அனைவரையும் இணைத்துப் பரஸ்பரம் அன்பு கொள்ளச் செய்வது எழுத்தாளர்களின் மகத்தான கடமையாகும்!" என்றார். தலைமை வகித்த பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள் "எழுத்தாளன் தன்னை எவ்வளவுக் கெவ்வளவு பண்புடையவனாக, கனிந்த பரந்த உள்ளம் உள்ளவனாக, அறிவு விலாசம் பெற்றவனாக உயர்த்திக் கொள்கிறானோ எவ்வளவுக்கு அழகும் ஆற்றலும் நிறைந்த சொல்லில் தன்னை வெளியிடுவதில் வெற்றி காண்கிறானோ அவ்வளவுக்கு அவன் சிறந்த எழுத்தாளனாகிறான்" என்று அறிவுறுத்தினார்.


மறுநாள் காலையில் எழுத்தாளர் அறிமுகம் தொடங்கியது. எழுத்தாளர் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொள்ள வேண்டியது என்று தீர்மானிக்கப் பட்டது. ஒவ்வொருவரும் தங்கள் சொந்தப் பெயரையும் புனைபெயரையும் எழுதியுள்ள துறைகளைப் பற்றியும் சொல்லிக்கொண்ட போது பட்ட அவஸ்தையும் வெட்கமும் பார்க்க வெகு ரஸமாக இருந்தன.

இதற்குப் பிறகு திரு பி. வி. ராஜமன்னார் தலைமையில், 'பிற மொழிகளில் தமிழ்' என்ற தலைப்பில் நல்ல கருத்தரங்கம் நடைபெற்றது.

---

1. டாக்டர் ஹுமாயூன் கபீர் அவர்களுக்கு திரு வள்ளியப்பா 'பாட்ஜ்' அணிவிக்கிறார். 2. பேராசிரியர் அ. சீநிவாசராகவன் திரு பி. வி. ராஜமன்னார் அவர்களுக்குத் திருக்குறளைப் பரிசாக அளிக்கிறார். 3. திரு சோமுவின் தலைமையில் கவியரங்கம். 4. முதல் நாள் மகாநாட்டில் அ. சீ. ரா. உரை. 5. எழுத்தாளன் - பலர் நோக்கில்: உரைக் கோவை நடைபெறுகிறது. 6. மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் கூட்டத்தில் ஒரு பகுதி.





கன்னட மொழியைப் பற்றிப் பேசிய ஸ்ரீ மாஸ்தி வேங்கடேச அய்யங்கார் பல நூற்றுண்டுகளாக வைணவ பிரபந்தங்கள் கன்னட இலக்கியத்தை எப்படி ஆட்கொண்டு வருகின்றன என்பதை விளக்கி, தற்காலத் தமிழ் இலக்கியங்களான ராஜாஜியின் கதைகளும், கல்கியின் 'அலை ஓசை' போன்ற நூல்களும் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன என்று கூறினுர்.

ஹிந்தி மொழி பற்றிப் பேசிய ஆக்கூர் அனந்தாச்சாரியார் பாரதியார் நூல்கள், கல்கியின் கதைகள் முதலியன ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் ஹிந்தி மொழி பேசுபவர்கள் தமிழிலக்கியத்தில் போதிய அக்கறை செலுத்தவில்லை என்று குறைப்பட்டார்.

அரிசி என்ற சொல்லை அரபு மொழிக்கு வழங்கிய பெருமையே தமிழுடையதுதான் என்று சொல்லி திரு ஹைதர் அலிகான் உருது மொழியில் தமிழின் ஆதிக்கம் எவ்வளவு படர்ந்திருக்கிறது என்று விளக்கினுர்.

திரு ச. ராதா கிருஷ்ண சர்மா என்ற ஆந்திரர், தெலுங்கு இலக்கியத்தைத் தமிழிலக்கியம், எப்படி வளர்த்திருக்கிறது என்பதை உணர்ச்சி மிக்க தமிழில் பலப்பல உதாரணங்களுடன் வெகு அழகாக விளக்கினுர்.

டாக்டர் எஸ். கே. நாயர் மலையாளத்தில் பறைந்தார். அவர் பேச்சு ஆராய்ச்சி பூர்வமாக இருந்ததோடு, நகைச் சுவையும் உணர்ச்சியும் மிகுந்ததாக இருந்தது. பல கருத்துக்களைத் தைரியமாக வெளியிட்டார். தமிழ் இல்லையேல் மலையாளம் ஏது என்று கேட்டார். 'ஒரு மலையாளி, தமிழிலுள்ள சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற தமிழ் இலக்கியங்களைப் பயிலவில்லையாகில் அவன் மலையாளப் பண்டிதனுக மாட்டான், வேண்டுமானுல் மலையாளியாக இருக்கலாம்' என்றுர்!

திரு த. நா. குமாரசுவாமி அவர்கள் வங்காளிகள் மெல்ல மெல்லத் தமிழின் பெருமையை உணர்ந்து பயிலத் தொடங்கியிருக்கிறுர்கள்' என்று குறிப்பிட்டார்.

பிற்பகல் நடந்த கவியரங்கத்துக்குத் திரு சோமு தலைமை வகித்தார். பல கவிஞர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தாலாட்டு பொதுவாகத் தூங்கப் பண்ணுவதற்காகப் பாடப்படுவது. ஆனுல் திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் தாலாட்டு, மக்களை விழிப்படையச் செய்தது!

மாலை ஐந்து மணிக்கு மேல் விமர்சகர், அச்சகத்தார், பதிப்பாளர், பத்திரிகை ஆசிரியர், ரஸிகர் ஆகியோர் எழுத்தாளனை எப்படிப் பார்க்கிறுர்கள் என்பதை விளக்கும் இனிய உரைக்கோவை நடைபெற்றது. திருவாளர்கள் கு. அழகிரிசாமி, ரா. ஸ்ரீ கண்டன், சின்ன அண்ணமலை, கி. வா. ஜ., அ. ச. ஞானசம்பந்தம் முதலியோர் பங்கெடுத்துக் கொண்டு இனிய உரைகள் நிகழ்த்தினர்.

மகாநாட்டில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஐக்கியத்தின் உறுதியை நிலைநாட்டி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று. எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் பிறர் களவு செய்தால் எழுத்தாளர் உரிமையைப் பாதுகாக்க நிதி திரட்ட வேண்டும் என்பது மற்ற தீர்மானம்.

தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு முதலிய பல மாவட்டங்களிலிருந்தும், வடநாட்டிலிருந்தும் பல பிரதிநிதிகள் வந்திருந்து மகாநாட்டைச் சிறப்பித்தார்கள்.

திருவாளர்கள் அகிலன், அழ. வள்ளியப்பா, அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர் தன்னலம் கருதாது எப்பொழுதும் இன்முகத்துடன் சலியாது உழைத்தது பாராட்டுக்குரியது.


ஜய ஜய சங்கரா

பக்தியுடன் எனக்கு ஒருவன் பச்சிலையையோ, புஷ்பத்தையோ, பழத்தையோ, நீரையோ அளித்தாலும்கூட அதனை அளிக்கும் உள்ளத்தின் தூய்மையைப் பாராட்டி நான் அப்பொருளை ஏற்று அருள்புரிகிறேன். —கீதையில் கண்ணன்

4. "காலம் நெருங்கி விட்டது!"

வாசலில் சங்கரனைக் கண்ட பின் தான் அயாசகன் மனைவிக்கு நிம்மதி பிறந்தது. தாருகாவனத்து முனிவர்களின் அகந்தையையே பிடிவாதமாகப் பிச்சை கேட்டுப் பழகிய பரமேசன் இங்கு அன்புப் பிச்சையைப் பெறாது போய் விடுவானா என்ன?

நெல்லிக் கனியைப் பிட்சைப் பாண்டத்தில் போட்டாள் அந்த ஸ்திரீ. கூனிக் குறுகிக் கூசிக் கொண்டு போட்டாள். அந்த ஒரு விநாடியில்தான் அவளுக்குத் தன் ஏழைமை எவ்வளவு கொடியது என்பது தெரிந்தது. தனக்கு என்று எதுவுமே வேண்டாதிருந்து விட



லாம்; தானம் கேட்பவர்களுக்கு அளிக்க ஏதும் இல்லை யென்றால்? சற்று முன் அவள் பெற்ற நிம்மதி அவ்வளவும் அப்போது சிதறிப் பறந்தது.

நெஞ்சைப் பிளக்கும் விம்மலுடன் உள்ளே ஓடி விட்டாள் அவள்.

சங்கரன் அந்த நெல்லிக் கனியைப் பார்த்தான். உள்ளங்கை நெல்லிக் கனி போல் அந்தப் பெண் உள்ளமும் அதில் தெரிந்தது. அந்த ஆமலகப் பழத்தில் ஓர் அமலமான மனமும் தெள்ளெனத் தெரிந்தது. செல்வம் இருப்பவர்கள் செல்வத்தை மட்டும் தானம் செய்வதுண்டு. செல்வமே இல்லாத இவளோ தன் இதயத்தையே அல்லவா பிச்சையாகப் போட்டு விட்டாள்?



உள்ளம் கொள்ளாமல் நிரம்பி வழியும் அன்புச் செல்வத்தை ஸ்தூலமான பொருள் உருவில் வெளிக்காட்ட முடியாமல் அந்தணமாது மனம் குமைந்ததுகண்டு குழந்தை சங்கரனின் இதயம் குழைந்தது. அந்த உருக்கமே அவன் வாயினின்று அமர பாஷைச் சொற்களாகப் பிரவகித்தது. ஆம்! தேவி அளித்த ஞானப் பால் பலனை அளிக்கத் தொடங்கி விட்டது. பால் மணம் மாறாத சின்னஞ்சிறு திருவாய்.பாமணம் கமழ இலக்குமி தேவியைத துதிக்கத் தொடங்கியது. செந்திருவிடம், அவளது திருநோக்கை இந்த ஏழையர்கள் பக்கம் திருப்புமாறு வேண்டினான் சங்கரன்.

விசுவமெல்லாம் உடலாகக் கொண்ட ஜகந்நாதனின் உடலைக் கருவண்டுகளாக மொய்த்துக் கொண்டிருப்பது அவளது நோக்கு. அவளுடைய திருஷ்டி மேலே படுவதால் ஹரியின் அகம் சிலிர்க்கும்; அதற்குப் புற அடையாளமாக அவனது அழகு மேனி முழுவதும் மயிர்க்கூச்சிடும்; மொட்டுக்கள் நிறைந்த தமால விருட்சம் போலத் திகழும். அந்த ரோமாஞ்சனம் மாயவனின் உடலுக்கு ஏனைய அணிகளைவிட அதிகமான அழகைச் செய்யும். 'கண்ணிறைந்த கணவனை இப்படி அணிவித்து அழகு பார்க்கும் அந்த உன் கடைக் கண்ணின் விலாஸங்களை என் பொருட்டு இந்த ஏழையர் மீது செலுத்தலாகாதா!' என்று வேண்டினான் சங்கரன்.

கருங்குவளை மலரை வண்டு ஸ்பரிசிக்கும்போது அம்மலர் ஆட, அந்த ஆட்டத்திலேயே அச்சமுற்று அது மலரினின்று விலகுவதையும் மீண்டும் அதனிடமே படிவதையும் பாலன் சங்கரன் பலமுறை கண்டிருக்கிறான். அதே போலத்தான்—கமலையின் கடாட்சம் கருணாகரனின் கருமேனியைத் தீண்டும் போது அத்தேகத்தில் ஒரு துடிப்பு நேரிடும். உடனே, அநுராகத்துடன் அன்பன் உடலை அண்டிய அவளது கண் வீச்சு வெட்கத்துடன் அங்கிருந்து விலகும். 'அந்தத் திவ்விய திருஷ்டிகளை இந்தத் தரித்திரர்கள் மீது செலுத்தலாகாதா?' என்று பிரார்த்தித்தான் சங்கரன்.

சாதகம் என்பது கவி மரபு கூறும் ஒரு பட்சி. அது கழுத்தில் துவாரமுள்ள புள் என்று சொல்வார்கள். நிலத்திலுள்ள நீரினை அந்தப் பட்சியால் பருக இயலாதாம். நீர்வேட்கையுடன் தவித்தபடி அது பறந்து கொண்டிருக்கும்போது வானிலிருந்து இழியும் மழை நீர் தானாகவே அதன் கண்டத் துவாரத்தின் வழியாக உள் சென்று அதன் தாகத்தை, தாபத்தைத் தீர்க்கும் என்பர். ''அதே போல், உன் கடாட்சம் என்ற மேகம் பொழியும் செல்வ மழையினை வறுமையினால் தாபமுறும் இவர்களுக்கு நீயாகவே தரலாகாதா? முன் பிறப்புக்களில் இவர்கள் தீவினை செய்திருக்கலாம். எனினும் அந்தத் தீயையும் அவித்து, உன்னுடைய கடைக்கண் மேகத்தை இவர்கள் பால் அடித்துக் கொண்டு வரத்தான் கருணை என்ற குளிர்ப் பூங்காற்றும் உன்னிடம் உள்ளதே!' என்றெல்லாம் சமத்காரமாகப் பாடினான் குழந்தை.

சங்கரனின் முன்பு இந்திரை பிரஸன்னமானாள். ''ஐயனே! தீவினைகளைக் கருணையால் மாய்க்கும்படி சொல்கிறாய்! ஆனால் கருணை காரணமாகத் தீவினையாளர் யாவருக்கும் நலனளித்தால் உலகில் அதர்ம சிந்தையை யார் கைவிடுவார்கள்? கருணை வெள்ளத்துக்கு நீதியால் வரம்பு கட்டுவதும் அவசியமாகத் தானே தோன்றுகிறது?'' என்று, தன் பதியும் மோகினி உருவெடுத்து மணந்த உமாபதியைக் கேட்டாள்.

அயன் கையெழுத்தைத் தன் தாள் பட்டு அழிக்கும் சங்கரன் சொன்னான்: ''தெய்வங்களின் நீதி உணர்ச்சியைக் கருணை அடித்துக் கொண்டு போகும் காலமும் உண்டு. மக்களின் கர்ம வினையை அவர்களுடைய அன்பு அடித்துக் கொண்டு போகும் காலமே அது. நெல்லிக் கனியை எனக்கு ஈந்த போது

இந்த வேதியப் பெண்ணின் உள்ளத்தில் சுரந்த அன்பு வெள்ளம் அவனுடைய ஜன்ம ஜன்மாந்திரக் கர்ம வினைகளையும் பிளந்து தள்ளி விடுமே!'' என்றான்.

அவ்வளவுதான்! மகாலட்சுமி உடனே தன் இன்னருளைப் பொருளாகப் பொழிந்தாள். அழகிய ஒரு நெல்லிக்கனி ஈந்த அந்தண மாதின் வீட்டு முற்றத்தில் அழகிய பொன் நெல்லிக் கனிகளை மழையாகப் பொழிந்து தள்ளினாள்.

சு-வர்ணம் என்பது நல்ல வண்ணமுடைய பொன், அழகிய அட்சரம் இரண்டையும் குறிப்பது. முதலில் சங்கரனின் நாவிலிருந்து சுவர்ணமான சொன் மாரி எழுந்தது; அதன் விளைவாகப் பொன் மாரியும் பொழிந்தது.

அறிவினால் அறத்தை நிலை நிறுத்தவே சங்கராவதாரம் நிகழ்ந்தது. எனினும் அன்பின் சக்திக்குக் கட்டுப்பட்டு ஆசாரியர் சில அற்புதங்களையும் நிகழ்த்த நேரிட்டது. நமக்கு அந்த அற்புதங்கள் முக்கியமல்ல; அவற்றுக்கு ஊற்றுக் கண்ணாகிய அன்பே முக்கியம். அற்புதங்கள், அவை நிகழும் வேகத்திலேயே கதா பாத்திரங்களின் நினைவிலிருந்து நழுவியும் விடும்.

இளம் சங்கரனின் இளகிய உள்ளத்தில் கனிந்தெழுந்த திருமகள் துதியே கனகதாராஸ்தவம். கவிதையின் பிறப்பிடமே கருணைதானே? வேடனால் அடியுண்ட கிரௌஞ்ச பட்சியைக் கண்டவுடன் வால்மீகி முனிவரின் திரு உள்ளத்தில் ஏற்பட்ட சோகம்தானே சுலோகமாகி ஆதிகாவியமாகிய ராமாயணத்தைத் தோற்றுவித்தது? ஆதி சங்கரரின் முதல் கிரந்தமும் பரிவு உணர்ச்சியில் தான் பிறந்தது.

எட்டு வயசுக்குள் சகல வேத சாஸ்திரங்களையும், காவியங்களையும் கரைத்துக் குடித்து விட்டான் சங்கரன். குருகுல வாசம் பூர்த்தியாயிற்று. இனி அகத்துக்குத் திரும்ப வேண்டியதுதான்.

அப்போது ஒருநாள் வைகறைப் போதில் அச் சூழலின் அமைதியைக் குலைத்துக் கொண்டு அழுகை ஒலி நெருங்கியது. காலடிக்கே பெரிய செல்வக் குடும்பத் தலைவி ஆரியாம்பிகை, பதியை இழந்த பின் வீட்டையும் வாசலையும் விட்டு முதன் முறையாக வெளி வந்து, வாய் விட்டழுதபடி குருகுலத்துக்குள் பிரவேசித்தாள். தாய்ப் பசுவை நோக்கிச் செல்லும் கன்று போல் அன்னையிடம் ஓடினான் பகபதி. அவனை வாரி அணைத்த ஆரியாம்பிகையின் உடல் எல்லாம் நடுங்கிற்று. அவளை ஆசுவாசப் படுத்திய அந்தணோத்தமர்களிடம் அவள் கூறினாள்: ''நனவெல்லாம் படும் துயரம் போதாதென்று கனவிலும் என்னைக் கதிகலங்க அடிக்கிறான் ஆண்டவன். இன்று விடியற்காலை, என் கண்ணனை குழந்தை காஷாயமும் தண்டமும் தரித்து ஆண்டியாகப் போவது போல, போய்க் கொண்டேயிருப்பது போல ஒரு சொப்பனம்!'' அதைக் கூறும்போதே அவளுடைய உடல் தூக்கிப் போட்டது. விண்ணைப் பார்த்துக் கை கூப்பினாள்: ''என் அப்பனே! இப்போது நான் மீண்டும் என் கண்மணியைக் காணும் இந்த ஆனந்தத்துக்காக இதைப்போல ஆயிரம் துர்ச் சொப்பனம் கூடக் காணலாம். ஆனால் ஒரு போதும் சொப்பனத்தை மெய்யாகமட்டும் ஆக்கிவிடாதே'' என்று உள்ளமுருகி இறைஞ்சினாள். சங்கரனின் இதயம் அப்போது விம்மியது.

குழந்தையுடன் வீடு திரும்பிய பின் பல நாட்களாக இழந்திருந்த மன அமைதியை மீண்டும் பெற்றாள் ஆரியை. அறிவுக் களஞ்சியமாக, சான்றோனாகத் திகழும் மகனைக் காணும் தோறும் ஈன்ற பொழுதில் பெற்றதைவிட அதிக உவப்பு எய்தினாள்; உள்ளம் பூரித்துப் போனாள்.

பூரிப்பு உள்ளத்தில் மட்டும்தான். ஆரியையின் உடல் ஒடுங்கி வந்தது.

ஒரு நாள் ஆல்வாய் புழையில் ஸ்நானம் செய்யப் போன ஆரியை கரையிலேயே மயங்கி விழுந்து விட்டாள். அன்னையைத் தேடிச் சென்ற அருமைக் குமரன் தாயின் நிலையைக் கண்டு துணுக்குற்றான். அவள் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான். 'ஜில்'லென்று முகத்தில் ஏதோ தெறிக்கவே ஆரியை தன் நினைவு பெற்றாள். கமல மொட்டில் கோத்து நிற்கும் நீர்த் துளிகளை அவள் மீது யாரோ விசிறுகிறார்கள். யாரோவா? அவள் முகத்துக்கு நேர் எதிரே, அந்த கமலமொட்டினருகே இன்னொரு கமலம் — சங்கரனின் முகம்; அவனதுமொட்டுநயனங்களிலும் நீர் அரும்பு கட்டியிருக்கிறது! அந்த முகத்தில் ஆயிரமாயிரம் இன்பக் கதைகளைப் படித்தாள் தாய்.



மறு நாள் அன்னையை ஆறு செல்ல மகன் அநுமதிக்கவில்லை. இட்ட பணியைச் செய்யச் சேவகர்கள் காத்திருக்கும் போது.

தானே அன்னைக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற மாத்ரு பக்தியுடன் அவளுக்காக நீர் கொண்டு வரப் புறப்பட்டான். மெல்லிய கரங்கள் தோய்ந்து விடுவதுபோல் பாரம் இழுக்க இரு கைகளிலும் இரண்டு குடங்களை எடுத்துக் கொண்டு தானே ஆற்றுக்குப் புறப்பட்டான். தேவ கங்கையையே ஒரு கலக்குக் கலக்கிய பெருமான் தன்னைத் தேடி வருகிறுனென்றுல் ஆல்வாய் புழைக்கு இவ்வளவு அவ்வளவு என்ரு பெருமை இருக்கும்? இருந்தாலும், பண் பறிந்த தமிழ் மண்ணில் ஓடும் அந்த நதி தன் போக்கையே மாற்றிக் கொண்டு சங்கரன் வீட்டை ஒட்டி ஓட ஆரம்பித்தது.

''அதென்ன அதிசயமோ அம்மா! ஆறு நம் அகத்துப் பக்கமாகவே திரும்பி ஓடுகிறதே!'' என்றுன் குழந்தை சங்கரன் தன் தாயிடம் - ஏதுமறியாதவன்போல்.

ஈசுவராவதார காரியம் தொடங்கவில்லையே; சொற்ப காலத்தில் மானுட வாழ்க்கையை நீத்து விடுவேன் என்று ஈசன் கூறினுனே என்று கலக்கமடைந்தனர் தேவர். பரமனுக்கு அதை நினைவுறுத்த விரும்பினர். அவர்கள் தம் கடமையைச் சரிவரச் செய்கிறுர்களா என்று பார்ப்பதற்காகவே பகவனும் மறந்தாற் போல் ஜாலம் செய்தான். கேட்ட வரத்தைப் பெற்று விட்டோம் என்று அவர்கள் தருக்குறுமலிருக்கவே தான் சொற்ப காலத்தில் திரும்புவேன் என்று அவர்களுக்குக் 'குளிர்' ஊட்டியிருந்தான் அவன்.

தேவர்கள் அனுப்பி வைத்த அகஸ்தியர், நாரதர் முதலிய முனிவரர்கள் தங்கள் அடையாளம் தெரியாதபடி முதிய அந்தண வடிவு தரித்துக் காலடி வந்தார்கள். இறைவன் காலடி பட்ட அப்புண்ணிய பூமியைக் கூசிக் கூசி மிதித்தபடி சங்கரனின் இல்லத்தை வந்தடைந்தனர். அவதார காரியத்தைத் தொடங்கக் காலம் நெருங்கி விட்டது என்று அவனுக்கு நினைவு படுத்தினுர்கள்.

''காலம் நெருங்கி விட்டது'' என்ற வார்த்தைகளை மட்டும் கேட்ட ஆரியை வேறு பொருள் கொண்டாள். விருஷாசலேசன் அற்ப ஆயுள் உள்ள மகனைத் தானே நல்கினுன்? அம்மகனுடைய காலம் நெருங்கி விட்டது என்றுதான் இந்த முதியோர்கள் சொல்கிறுர்களோ என்று எண்ணிக் கலங்கிப் போனுள்.

அருமைக் கணவன் போயாகி விட்டது. ஆருயிர் மகனும் போய், பின்பும் தான் ஜீவித்திருக்க வேண்டுமா?

கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த அன்னையிடம் விஷயம் என்ன என்று கேட்டான், சங்கரன். அவள் அதை எப்படி வியக்தமாகச் சொல்ல முடியும்? திக்கித் திணறியபடி ஒருவாறு கூறி விட்டுக் கோவென்று கதறி அழுதாள்.

உலகிலிருந்து அவன் பிரியக் காலம் வராவிட்டாலும், அவளிடமிருந்து பிரியக் காலம் வந்தே விட்டதல்லவா? எனவே அந்தப் பிரிவை ஏற்க அவளைப் பக்குவப் படுத்த வேண்டுமென்று கருதினுன் சங்கரன்.

அதற்கு ஒரு சமயம் கிடைத்துவிட்டதாகக் கருதிப் பெரிய விஷயமாகப் பேசத் தொடங்கினுன். ''அம்மா, நான் போய் விடுவேனே என்று கவலைப்படுகிருய்? இதற்கு ஏன் விசாரம்? நான் அல்பாயுஸாகத்தான் போவேன் என்று சுவாமியே சொல்லியிருந்தால் அதன் பின் நீ வருந்தி என்ன பயன்? மனிதர்கள் செய்வதை மாற்றலாம். கடவுள் ஆணைக்கு ஏது மாற்று? ஆகவே மனசை இறுக்கிப் பிடித்து வைத்துக்கொள்'' என்றுன். அதற்கும் மேல் பெரிய விஷயங்களைத் தொடர்ந்தான்: ''இதற்கு முன்பு நீ எத்தனையோ பிறவிகள் எடுத்து எத்தனை எத்தனையோ மகவுகளைப் பெற்றெடுத்தாயே! அவர்களுக்கும் உனக்கும் இப்போது என்ன தொடர்பிருக்கிறது? மனித உறவுகளெல்லாமே அழிவடைபவைதானே அம்மா? இது உனக்குத் தெரியாததா? சாசுவதமான ஒரே பொருளுடன் ஏற்படுத்திக்கொள்ளும் தொடர்பு ஒன்றுதானே சாசுவதமானது?''

குளிர்ந்த குரலில் சங்கரன் பேசிய பேச்சு ஆரியையின் இதயத்தை உறைவித்து விட்டது. அவள் பேச்சு மூச்சற்று அமர்ந்திருந்தாள்.

மலர் நாசிகை விரியப் பெருமூச்சுவிட்ட சங்கரன் நிதானமாக, தெளிவாக, வார்த்தை வார்த்தையாக, இன்னிசை போலத் தொடர்ந்து பேசினுன்:

''பெருவெள்ளம் அடிக்கிறது. நீர்ப் பரப்பில் பலப்பல குமிழிகள் தோன்றுகின்றன. அவற்றில் சிற்சில குமிழிகள் சிறிது காலம் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருக்கின்றன. அப்புறம்... இந்தக் குமிழியும் இல்லை, அந்தக் குமிழியும் இல்லை. அவை வெள்ளத்திலேயே கரைந்து விடுகின்றன. அசைவற்ற ஆனந்தத் தேக்கத்தை அசைத்து, மாயை தோற்றுவிக்கும் கால வெள்ளத்தில் உற்பத்தியாகும் குமிழிகள்தாமே நாம்? அந்த ஆனந்தத்திலேயே ஒடுங்கிப் போக வேண்டியவர்கள்தாமே நாம்?''

வாயைப் பிளந்தபடி பிள்ளை பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள், ஆரியை. ஆனுலும் எவ்வளவோ விவேகியான அவளுக்கும் அப்போது

அவன் கூறுவது அர்த்தமாகவில்லை. ஏனைய பாமரப் பிறவிகளைப் போலவே, ''அம்மாவிடம் சொல்லும் வார்த்தை யாடா, இது? 'அப்பாவை விழுங்கி யாச்சு; என்னையும் விழுங்கி விட்டு நீ மட்டும் இருந்து கொண்டிரு' என்கிறாயா? சங்கரா, உன் மனத்தால் நான் போகவேண்டும் என்று எண்ணிக்கொள். உன் வாயால் நான் போக வேண்டும் என்று சொல். அது பலிக்கும். நானும் உன் அப்பாவையே சென்றடைவேன். உனக்குக் கலியாணம், கார்த்திகை செய்து கண் குளிரப் பார்க்கா விட்டாலும்.....'' என்று படபடத்தவளுக்கு அதற்கு மேல் பேச முடியாமல் தொண்டையை அடைத்துக் கொண்டது.

மனத்துக்குள் அன்னை தேக்கிக் கொண்டிருந்த ஆசையை அறிந்ததும் சங்கரனின் உள்ளம் விசித்தது; மறுகணமே ஏனோ மென்முறுவல் செய்து கொண்டது!

அழகுதான்! கலியாணமாமே கலியாணம்! எந்தப் பொருளை அவன் கலியாணம் செய்து கொள்வது? அவனுடைய உருவமே கலியாணம், குணங்களும் கலியாணம். அவனைத் தவிர, அவனுக்குப் புறம்பாக, அவன் இனிமேல் பிரயாசைப்பட்டுச் சேரவேண்டிய, கலியாண வஸ்து என்பதாக ஒன்று எங்கேனும் உண்டா?

மங்கள பாட சுலோகம் ஒன்றை அவன் மனம் முணுமுணுத்தது. அதி கல்யாண ரூபமாகிய பரம்பொருள் — நித்திய கல்யாணத்துடன் கூடிய பராபர வஸ்து — வேண்டுவோருக்கு வரமருளுவதற்காக மானுட உருவெடுத்து வந்தால் அதற்கும் அல்லவா கலியாணம் செய்து வைக்க விரும்புகிறார்கள்? இதில் அதிசயம் என்ன இருக்கிறது? நான்கு வேதங்களையும் நான்கு வாயால் ஓதும் பிரமனே அவனுக்கு வேறாகக் கலியாணியைத் தேடியபோது, இந்த ஆரியாம்பிகை ஏன் விவாகம் பற்றிப் பேச மாட்டாள்?

திருமணத்தைப் பற்றி ஆரியாம்பிகை பேசினாள். சங்கரனோ சிறிதுகாலமாகவே சந்நியாசத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். தேவர்களுக்கு வாக்குக் கொடுத்ததற்கேற்ப, ஞான குருவாக நல்லறம் போதிக்கக் கிளம்ப வேண்டும் என்று தீர்மானம் செய்து விட்டான். மனைவி — மக்கள், வீடு — வாசல் என்று தனி வாழ்வு சிறிதும் இல்லாமல் பிறருக்காகவே வாழும் பெருவாழ்வைத் தொடங்க எண்ணம் கொண்டு விட்டான்.

தாயாரின் உத்தரவில்லாமல் துறவு பூண அவன் விரும்பவில்லை. ஆனால் அவளை எப்படி உத்தரவு தரச் செய்வது? யோசிக்கலானான் சங்கரன்.

''அம்மா! ஸ்நானம் செய்யப் போகலாம் வாயேன்!'' என்றழைத்தான் சங்கரன். வெகு அருகிலேயே தங்களைத் தேடி வந்து ஓடும் ஆற்றில் ஆர அமர ஸ்நானம் செய்வதற்காகத் தாயும் சேயும் போனார்கள்.

ஆற்றில் அமிழ்ந்தான், பாலன். அடுத்த கணம் ''ஆ!'' என்ற அலறல் ஆற்றோட்டத்தின் அரவத்தைப் பிளந்து கொண்டு எழுந்தது.

''என்னடா, சங்கரா, என்ன?'' என்று அதைவிடப் பெரிதாக அலறினாள் கரையிலிருந்த ஆர்யாம்பாள்.

''கால், கால்'' என்றான் சங்கரன், குழறியபடி.

காலைப் பார்த்தால் .... பார்ப்பதாவது? பார்க்க முடியாதபடி அந்தக் காலை...ஒரு முதலையல்லவா கவ்விக் கொண்டிருக்கிறது! அதன் கூரிய பற்கள் சங்கரனின் செம்பட்டு போன்ற மெல்லிய சதையைப் பதம் பார்க்கின்றனவே!

ஆரியாம்பிகைக்கு உடலைக் குலுக்கி விட்டது குலுக்கி! நிலை கொள்ளாமல், செய்வதேதும் தெரியாமல் துடிதுடித்துப் போனாள் அவள். 'கடைசியில் மாமணியைத் தோற்றேவிடப் போகிறோம். அதுவும் இவ்வளவு பயங்கரமான விதத்தில்!'

சங்கரனோ தைனியமாகக் கதறுகிறான்! தன்னை மீட்குமாறு கூவுகிறான்! ஆனால், யார் அவனை மீட்பது? எப்படி மீட்பது? 'நினைத்தாலும், பார்த்தாலும், படித்தாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் அத்தனைக்கும் தித்திக்கும் அரிய சுவைக் கரும்பு' — சிவக்கரும்பு அல்லவா அவன்? அமுதம் ஊறும் அவனது திருப்பாதங்களிலிருந்து முதலையின் பிடிப்பைத் தளர்த்த மானிடரால் முடியுமா? அப்படி முடிந்திருந்தால் அவதார காரியம்தான் நிறைவேறி யிருக்குமா?

சூர்ணா நதிக்கரையில் கூடிவிட்ட ஊர் ஜனங்கள் இதை யெல்லாம் எப்படி அறிய முடியும்? முதலையை விரட்ட எவ்வளவோ முயன்றார்கள். ஆனால், முயன்றாலும் இது முடியாத காரியம் என்று அறியாமலே முயற்சி செய்யாத சிலரும் அங்கு இருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் தாம் சங்கரனின் தாயாதி, பங்காளி மக்கள். காலம் கடந்து பிறந்த இந்தப் பிள்ளை அவர்கள் விரும்பிய எதிர்காலத்திலேயே அல்லவா மண்ணை வாரிப் போட்டு விட்டான்! எனவே இப்போது கரையில் நின்ற அவர்கள் உள்ளூற மகிழ்ச்சி யுற்றாலும் வெளிப் பார்வைக்கு அவனைக் காப்பாற்ற இயலாததற்கு

வருந்துவதாக நடித்தார்கள். பிள்ளை படும் வாதனை போதாதென்று சுற்றத்தாரின் நீசத்தனம் ஆரியையின் நெஞ்சைப் பிளந்தது. பைத்தியம் போல் எங்கோ ஓடினாள்.

"அம்மா, அம்மா, நீயும் போகாதே!" என்று கூக்குரலிட்டான், மகன்.

"ஐயோ, உனக்கு நான் என்ன செய்ய இருக்கிறதடா, என் சங்கரா! நீ சிறிது சிறிதாக.... ஆவதைத் தடுக்க முடியாமல் நான் பார்த்துக் கொண்டே நிற்க வேணுமா?" என்று கேவினாள் ஆரியாம்பிகை.

"நீ என்ன செய்ய இருக்கிறதா? நீ மட்டும் மனம் வைத்தால் இப்போது என்னைக் காப்பாற்ற முடியும்" என்றான் குழந்தை. முதலை பிடித்திருக்கும் வலி கூடத் தெரியாததுபோல் சகஜமாகச் சொன்னான்.

தானாவது அவனைக் காப்பாற்றுவதாவது! அப்படித் தன்னால் கூட அவனைக் காப்பாற்ற முடியுமானால் அதற்காக அவள் என்னதான் செய்ய மாட்டாள்! தன் உயிரை அளிப்பதால் அவன் உயிரை மீட்டுத் தர முடியுமானால் அதற்கும் கூட அல்லவா அவள் சித்தமாக இருந்தாள்? அப்படியிருக்க 'மனம் வைத்தால் காப்பாற்ற முடியும்' என்கிறதே இந்தப் பிள்ளை!

"என்னடா சொல்கிறாய்? அவலமான நான் எப்படிக் கண்ணே, உன்னைக் காப்பாற்றுவது?" என்றாள் ஆரியை.

"நான் மறுபிறப்பு அடைவதற்கு நீ அநுமதி கொடு. நான் காப்பாற்றப்படுவேன்" என்றான் சங்கரன். மறுபடி பிறவாதிருக்க வரம் தருபவன் புனர் ஜன்மம் பெற அன்னையை வரம் கேட்டான்! ஆரியை குழம்பினாள்.

அவன் மறுபிறவி எடுக்க அவள் அநுமதிக்க வேண்டிய அவசியமே தான் இல்லையே! இந்த ராட்சத முதலை எப்படியும் அவனைக் கபளீகரம் செய்யத்தான் போகிறது. அவனுடைய இந்த ஜன்மமும் முடிவடையத்தான் போகிறது. அடுத்த பிறப்பும் தன்னால் ஏற்படுகிறது! ஆகா! சமீபத்தில்தானே அவன் முற்பிறவி, பிற்பிறவிகளைப் பற்றி எல்லாம் சொன்னான்! அவை இவ்வளவு விரைவிலா, இவ்வளவு கொடிய முறையிலா, செயலாக வேண்டும்?

"சங்கரா, நீ பொருள் இல்லாமல் பேச மாட்டாய்! எனக்குத்தான் நீ சொல்வதன் அர்த்தம் புரியவில்லையடா ராஜா! ஏற்கனவே மூடம், அதிலும் இப்போது துக்கத்தில் ஜடமாய்ப் போன எனக்குப் புரியும்படிதான் விளக்கிச் சொல்லேன். நீ மறு பிறவி எடுக்க நான் அநுமதிப்பதிலும் அநுமதிக்காததிலும் என்ன பொருள் இருக்கிறது?" என்று ஆர்வத்துடன் கேட்டாள் ஆரியாம்பிகை.

சங்கரன் ஆரம்பித்தான். அவன் காத்துக் கொண்டிருந்த காலம் நெருங்கிவிட்டதே! (தொடரும்)



கேட்டீர்களா சேதி



செய்தி சேகரன்

"'பொருளாதாரப் புரட்சியைக் கொண்டு வரப் பாடுபடுக' என்று மத்திய சர்க்கார் உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அலகாபாத் ஸ்தல காங்கிரஸ் ஊழியர்களுக்கு வேண்டு கோள் விடுத்தார்."

பொருளாதாரப் புரட்சி நமக்கு எதற்கு? பொருளாதார சுபிட்சத்துக் குப் பாடுபடுக என்று சொல்லக்கூடாதா?

ஃ ஃ ஃ

"லண்டனிலிருந்து பம்பாய்க்கு வந்து கொண்டிருந்த விமானத்தை அது கிளம் பிய பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் கடற்பறவைகளின் கூட்டம் வழிமறித் தன. உடனே விமானத்தைத் திருப்ப வேண்டியதாயிற்று."

தங்களைப் போலவே வானத்தில் பறந்து செல்லும் விமானங்களிடம் பறவைகளுக்குத் துளிக்கூட இனப் பற்று இல்லாததன் காரணம் என்னவாயிருக் கும்? ஒரு வேளை விமானங்கள் பறவை களைப் போல் பறந்தாலும், நினைத்த இடத்தில் கீழே இறங்காமல் தங்களுக் கெனத் தனி இடம் (விமான நிலையம்) ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்ற காரணத்தினால் பறவைகளுக்கு அவை களைப் பிடிக்கவில்லையோ!

ஃ ஃ ஃ

"நாட்டின் ஜனத்தொகையில் சரி சமமாகப் பெண்கள் உள்ளனர். அவர் களுடைய முன்னேற்றத்துக்குச் சங்க டங்கள் அவசியம்."

—பத்திரிகைச் செய்தி

சங்கங்களா, சங்கடங்களா?

ஃ ஃ ஃ

"உலகம் ஆயுதப் போட்டியை விட்டு விட்டு, அமைதிப் போட்டியில் ஈடுபட வேண்டும் என்று அமெரிக்கா வின் படை பலக் குறைப்புத் திட்டக் குழு கருதுகிறது."

ஒரு போட்டி போனால் இன்னொரு போட்டி!

ஃ ஃ ஃ

"ஆடம்பரத்துக்காகப் பெரும் செல வில் நடத்தப்படும் பாராட்டுக் கூட்டங் களை நான் வெறுப்பவன். ஆனால் எனக்கு நடத்தப் பெறும் இந்தப் பாராட்டுக் கூட்டங்களில் கலந்து கொண்ட பின்னர் இக்கூட்டம் அவசியம்தான் என நான் கருதுகிறேன். இதனால் பதவிக்கு வந்த வர்களுக்கு இருக்கும் சுயப் பற்றுக்கள் போய் விடுகின்றன" என்று நமது சென்னை ராஜ்யப் புதிய சபாநாயகர் பாளையங்கோட்டையில் அவருக்குநடந்த வரவேற்புக் கூட்டத்தில் கூறினார்.

உண்மைதான். சுயப் பற்றுக்கள் மறைந்து மாலை மரியாதைப் பற்றுக்கள், வரவேற்புப் பத்திரப் பற்றுக்கள் ஆகியவை அதிகமாகி விடுகின்றனவே!

ஃ ஃ ஃ

"மகிழ்ச்சியாகக் காலம் கழிப்பதற் காக அமைச்சர்கள் உதகமண்டலத்தில் தங்கவில்லை. அம்மாதிரி கருதுவது தவறு. மக்களும் அமைச்சர்கள் செல் லும் இடங்களுக்குச் சென்று அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்வை யிட்டால்தான் அவர்களுக்கு அமைச்சர்களுக்குள்ள இடையூறுகளும் இடுக்கண்களும் தெரிய வரும்" என்று தமிழ் நாட்டு அமைச்சர் திரு பூவ ராகன் கோவையில் கூறினார்.

ரொம்ப நன்றாயிருக்கிறது இவர் பேச்சு! அமைச்சர்கள் செல்லும் இடங் களுக்கெல்லாம் மக்கள் செல்லுவது என் பது எங்கேயாவது நடக்கிற காரியமா? ஒருவேளை அமைச்சர்கள் பேசும் பொதுக் கூட்டங்களுக்கு நிரந்தரக் கூட்டத்தைத் தயார் செய்கிறாரோ இவர்!

ஃ ஃ ஃ

"கலப்புச் செய்யப்பட்ட பொருள் களை இனி வாங்கி விற்பதில்லை என்று கும்பகோணம் வியாபாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள்."

போகட்டும்! இதுவரையில் கலப்படப் பண்டங்களை விற்று வந்ததை ஒப்புக் கொள்ளுகிறார்களே!

ஃ ஃ ஃ

"தமிழ்நாடு விடுதலையடைய அமைதி யான வழியில் போராடுவோம். நமது விடுதலை இயக்கம் தடைப்பட்டால் நாட் டில் ஆயுதப் புரட்சி ஏற்பட்டே தீரும்" என்று காரைக்குடியில் 'நாம் தமிழர்' கட்சிக் கூட்டத்தில் ஒருவர் பேசினார்.

அயல்நாடுகளுக்கெல்லாம் படைக்கல ஒழிப்பு யோசனையை வலியுறுத்தி வரும் நமக்கு உள்ளூரிலேயே ஓர் ஆயுதப் புரட்சி வேண்டியதுதான்!

ஃ ஃ ஃ

"செகண்டரி ஆசிரியர்கள் ரிடை யர் ஆகும் வயது உயரும். ஐம்பத் தைந்திலிருந்து அறுபதாக அதிகரிப்பு."

—சர்க்கார் அறிக்கை

பள்ளி ஆசிரியர்களின் நிலை உயர வில்லை என்று குறை கூறிக் கொண்டிருப்பவர்கள் இந்த அறிக்கையைக் கண்டு திருப்திப் பட்டுக் கொள்ளலாம்! ஏதோ ஒன்று உயர்ந்திருக்கிறதல்லவா?

ஃ ஃ ஃ

''நோயாளிகள் விரைவில் குணமடைய ஆஸ்பத்திரிகளில் இரவு 9 மணி முதல் 9-30 மணி வரையில் மெல்லிசை நிகழ்ச்சிகளைக் கேட்க ஏற்பாடு செய்யலாம்'' என்று ஒரு பிரசங்கி ஒரு விருந்து வைபவத்தில் கூறினார்.

இது நல்ல யோசனை. ரேடியோ சங்கீதத்திலிருந்து தப்புவதற்காகவே நர்ஸிங் ஹோம் போன்ற இடங்களில் தங்க விரும்புகிறவர்களின் கூட்டம் இனி குறைந்து விடும் அல்லவா?

ஃ ஃ ஃ

''என்னை வருமான அதிகாரியாகப் போடட்டும். வரி கொடாமல் டிமிக்கி கொடுப்பவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கிறேன். நிறையக் கள்ளப் பணத்தைப் பிடித்துக் கொடுக்கிறேன்!'' என்று ஒரு எம். எல். ஏ. நடிகர் கூறியிருக்கிறார்.

ஒருவேளை வருமான அதிகாரியாக ஏதாவது ஒரு படத்தில் தம்மைப் போடச் சொல்லுகிறாரோ!

சிந்துநதிக்கரை



இந்தக் கோடை விடுமுறையில் நான் முன்பு விட்டுப் போன உருதுப் படிப்பை மீண்டும் தொடர எண்ணினேன். அதற்குச் சௌகரியமாக என் பால்ய நண்பன் ஜலீல் ஊருக்கு வெளிப்புறத்தில் ஒரு மாவு, நெல் அரைக்கும் மிஷினை நடத்தி வந்தான். நான் உருது கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை என் மனத்துக்குள் விதைத்தவனும், உருது இலக்கியத்தின் எழிற் செல்வங்களை எனக்கு அடிக்கடி உணர்த்தி வந்தவனும் அவன் தான். அவன் உருது பாஷையில் இந்தச் சிறிய வயதுக்குள் அபாரமான பாண்டித்தியம் வாய்ந்தவன். எனக்கும் இக்கோடையைக் கழிக்க வேறு நல்ல வேலைகளும் இல்லை. காலை வேளையில் அந்த மிஷினுக்குச் சென்று விட்டால், இரண்டு மணிக்குச் சாப்பிட வீட்டுக்கு வருவேன். ஊரின் மத்தியப் பகுதியில் ஏராளமான மாவு மில்கள் இருந்தபடியால் கிராமத்து வாடிக்கைக்காரர்களுக்காகவும், முனிசிபல் அநுமதி கிடைக்காத காரணத்தாலும் அவனுடைய மாவு மில் அங்கு நிறுவப்பட்டிருந்தது. பெரும் பாலும் முற்பகல்முழுக்க அங்கே அவ்வளவாகக் கிராக்கிகள் இராது. நாங்கள் உருதுப் படிப்பில் ஈடுபட அது சௌகரியமாக அமைந்தது. இப்படி நான் அவனிடம் சென்றிருந்த நாட்களில் தான் ஒரு நாள் அவன் சுட்டிக் காட்டிய ஜாபருல்லா என்ற கிழவனைச் சந்திக்க நேரிட்டது. வால் வாலாகக் கிழிந்து தொங்கும் சட்டையுடன், மான்





தோலைக் கையில் தைத்துத் தயாரித்த தொப்பி யணிந்து, அடிவானத்துக்கு அப்பாலிருந்து வரும் எதையோ எதிர்பார்ப்பது போன்ற உறுதியும் ஏக்கமும் நிறைந்த கண்களோடு வரும் வயதான கிழவன் அவன். அவன் வயதுக்கு மற்றக் கிழவர்களெல்லாம், கயிற்றுக் கட்டிலின் மீது விழுந்தவாறு, சுருட்டுக் குடித்துக் கொண்டும் வெயில் காய்ந்தவாறும் வம்பளந்து கொண்டிருக்கும் போது, அவன் மட்டும் ஒரு மலை ஜாதி இளைஞனைப்போல் கடுமையாக வேலை செய்து வந்தான். மண்டித் தெருவில், ஈவிரக்கமற்ற பளுவால் நகர மறுக்கும் கை வண்டியை, நெற்றி நரம்புகள் புடைக்கக் கண்கள் ரத்தம் தெறிப்பது போல் சிவக்க, அரும் பாடு பட்டு இழுத்துக் கொண்டு போவதைப் பார்த்திருக்கிறேன்.

தினசரி ஜலீலின் மாவு மில்லுக்குக் காலை ஒன்பது மணிக்கு அரைப்படி கோதுமையை எடுத்துக் கொண்டு அவன் மாவரைத்துச் செல்ல வருவான். அவன் உழைப்பதைக் கண்ட பிறகு தான் அவன் பேரில் எனக்குத் தனி அக்கறை ஏற்பட்டது.

''ஜலீல்! இவனை உனக்கு நன்கு தெரியுமா?'' என்று கேட்டேன்.

''இல்லை, சிவராம். தினசரி ஒரு தடவை நம்ம மிஷினுக்கு வருவான். அதுதான் தெரியும். மற்றப்படி நீயும் நானும் மண்டித் தெருவிலே அவன் வண்டி இழுக்கிறப்போ பார்த்திருக்கோம். அதைத் தவிர புதிசா எனக்கு ஒண்ணும் தெரியாது!''

ஜாபருல்லாவின் உடம்பில் எந்த விசித்திர மான சக்தியோ, பழுதில்லாத ஒரு டைனமோவைப் போல் அவனை ஒழுங்காக இயக்கி வந்தது. அதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்.

ஒரு நாள் உருதுப் பாடத்தில்—நான் பிரைமரி நிலையைத் தாண்டி, நல்ல வாக்கியங்கள் கொண்ட சற்றுக் கடினமான பாடத்தையும் படிக்கும் நிலையிலிருந்தேன். ஒரு முக்கியமான சந்தேகத்தைக் குறித்துச் சர்ச்சை செய்து கொண்டிருக்கும்போது, ஜாபருல்லா காகிதக் கூழ்க் கூடையைத் தோளில் வைத்துக் கொண்டு தலைக்கு மேலே வறண்ட அவனுடைய கிழக் கை உயர்ந்து அதைத் தாங்கிப் பிடித்திருக்க அமைதியாக எங்கள் முன்னால் வந்து நின்றான்.

''என்ன ஜயா, மாவு அரைக்க வேண்டுமா?'' என்று உருதுவில் கேட்ட



வாறு ஜலீல் தன் இருக்கையை விட்டெழுந்து, ஸ்டார்ட்டர் ஸ்விட்சைப் போடச் சென்றான். மாவு அரைத்தானதும், சில்லறையைக் கொடுத்து விட்டும், ஜாபருல்லா எங்கள் எதிரில் அதே ஏக்கம் நிறைந்த கண்களோடு நின்றான். அவன் அதிகமாகப் பேசுவதில்லை. பேசினாலும் கேவி அழுவது போன்ற அவலமான குரலில் நிறுத்தி நிறுத்திப் பேசுவான். இதனால் அவனுக்குச் சித்த ஸ்வாதீனம் இல்லை என்று நன்கு பரிசீலிக்கப்படாத ஒரு மேற்போக்கான வதந்தி உலவியதால், அவனைப் பொருட்படுத்தாமல் ஜலீல் எனக்குப் பாடத்தைப் படித்துக் காட்ட ஆரம்பித்தான். அந்தப் பாடம் நதிகளைப் பற்றிய பாடம். நாங்கள் கங்கையையும் சிந்துவையும் பற்றி வாசித்துக் கொண்டிருந்தோம். ஜாபருல்லா மாவுக் கூடையைக் கீழே வைத்து விட்டு, இரண்டு கைகளையும் ஓர் ஆரம்பப் பள்ளிச் சிறுவன் போல் கட்டிக் கொண்டு அதைக் கேட்க ஆரம்பித்தான். என் படிப்புக்கு அது ஓர் இலேசான தடைபோல் சங்கட உணர்ச்சியை உண்டாக்கிற்று. நிமிர்ந்து அவனைப் பார்த்து, ''தாத்தா என்ன வேண்டும்?'' என்று உருதுவில் கேட்டேன்.

''தம்பி, அந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் கொடு'' என்று கேட்டான். நான் கொடுத்ததும் அந்தப் புத்தகத்தை வாங்கி வாய்விட்டு அந்தப் பாடத்தைப் படிக்க ஆரம்பித்தான். சாதாரணமான வயதானதும் ஏற்படும் சாலேசுவரம் அவனுக்கு இல்லை. நன்றாக நிறுத்தி நிறுத்தி, தெளிவான உருதுவில், உணர்ச்சி வயப்பட்டு அவன் சிந்து நதியைப் பற்றிப் படித்துக் கொண்டு போனான். அவன் குரலில் காணப்படும் கேவலோடு, சோக உணர்ச்சியும் சேர்ந்து கொள்ளவே சிந்து நதியின்

ஓரம்

வையவன்

கனவுகளைச் சங்கீத இசைபோல் எழுப்புவதாக ஜாபருல்லாவின் வயதான குரல் சக்திபெற்று விட்டது. நான் ஆச்சரியமடைந்து அவனையே பார்த்தேன். தனக்குத் தானே பேசிக் கொள்வது போல, கஷ்டமான பதங்களுக்குப் பொருள் சொல்லிக் கொண்டு, கண்ணீர் மல்க அவன் படித்துக் கொண்டிருந்தான். சிந்து நதி பாயும் பிரதேசத்தையும், அதன் முகத்துவாரங்களையும் குறித்து வெகு அழகாக அவன் படித்தான். புத்தகத்தை மேலும் படிக்க முடியாமல் அப்படியே கீழே வைத்து விட்டு, கண்ணீர் விடுவதற்காக அவமானமோ, வெட்கமோ அடையாமல் கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டான்.

''நாற்பது வருஷங்களுக்கு முன்னே இதே பாடத்தைச் சிந்து நதி ஓரமாக உட்கார்ந்து கொண்டு படிச்சிருக்கேன். காலே, ஆற்றுத் தண்ணீருக்குள்ளே விட்டு ஆட்டிக் கொண்டே எந்தச் சிந்துவைப் பற்றி, பெருமையும் மகிழ்ச்சியும் நிறைந்த வார்த்தைகளில் இந்தப் பாடம்

எழுதியிருக்காங்களோ, அதே சிந்து கண் முன்னுலே சிரிச்சுக்கிட்டு ஓடறதையும், அதன் அழகான அலைகளையும் பார்த்துக்கிட்டே படிச்சிருக்கேன். அந்தச் சிந்துவைப் பார்த்துப் பதினறு வருஷமாச்சு....'' என்று சட்டென்று தன் பேச்சை நிறுத்தினன்.

நாங்கள் இருவரும் ஆவலும் அனுதாபமும் நிறைந்த பார்வையால் அவனையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு, சிரித்தவாறு, என்னை நோக்கிக் கேட்டான்:

''நீங்களெல்லாம் வாத்தியார்களா?''

நான் சிரித்தவாறு ''ஆமாம்'' என்று பதிலளித்தேன்.

''எனக்குக் கூட முஷ்டாக் அலின்னு ஒரு வாத்தியார் இருந்தார். அவர் ஒரு தரம் என்னை அடித்த அடியிலே ஜுரமே வந்து விட்டது. நீங்க பிள்ளைங்களை அடிப்பீங்களா ஐயா?'' என்றான். அவனுடைய சம்பந்த மற்ற பேச்சு, அவனிடம் எனக்கு அனுதாபத்தையே ஏற்படுத்திற்று. இன்று கண்ணெதிரில் மண்டித் தெருவில், வயிற்றுக்காகக் கைவண்டி இழுக்கும் அவன், பிழையில்லாத தூய உருதுவில் அந்தப் பாடத்தைப் படித்ததும், அந்தப் பாடத்தைப் படித்த பழைய ஞாபகங்களால் கண்ணீர் உகுத்ததும் என் நெஞ்சைக் கவர்ந்து விட்டன.

''ரஷீதுக்கு உங்களைவிட நாலைந்து வயது குறைவாக இருக்கும் இப்போ'' என்று தன் முந்தின கேள்விக்குப் பதில் எதிர்பாராமல் மீண்டும் பேசினன். பின்னர் மெல்ல முனகிக் கொள்ளும் குரலில், ''சிந்து....சிந்து நதியிலே இப்போவும் நல்லாத் தண்ணி ஓடிக் கொண்டிருக்கும் ஐயா. நீங்க படிக்கிறீங்களே இந்த நதி எங்க கிராமத்துக்குப் பக்கமாகவும் ஓடுது. நான் பிறந்ததிலே இருந்து ஒவ்வொரு நாளும் அதன் முகத்திலே விழித்திருக்கிறேன். என் தாகம் அடங்கிற மட்டும் அதை வாரிக் குடித்திருக்கேன்....'' என்று நிறுத்தினன்.

நாங்கள் ஏதும் பதில் சொல்லவில்லை.— எங்கள் மௌனத்தைப் பொருட்படுத்தாமல் அவனும் திடீரென்று, ''பதினறு வருஷங்கள் ஆச்சு.... ரஷீதையும் சிந்துவையும் பிரிந்து பதினறு வருஷங்கள் ஆகிப்போச்சு!'' என்று சொன்னன். பின் ஏதோ யோசிப்பது போல் தலை குனிந்துகொண்டிருந்துவிட்டு ''சரி ஐயா, சலாம். ஷுக்ரியா (நன்றி) என்று சொல்லியவாறு அந்தக் காகிதக் கூழ்க் கூடையை தோளில் வைத்துக்கொண்டு மிஷின்படிக்கட்டு களில் இறங்கி நடந்து சென்று விட்டான்.

ஜாபருல்லாவை, அடுத்த முறை நான் சந்தித்த போது ஒரு வாரம் ஆகி விட்டது. நில விஷயமாக நான் வெளியூருக்குப் போய் விட்டேன். உருதுப் படிப்பும் தடைப்பட்டு விட்டது. ஊரிலிருந்து திரும்பி வந்ததும் மில்லுக்குச் சென்றேன். அன்று ஞாயிற்றுக் கிழமை. மில்லுக்கு விடுமுறை. வீட்டில் பொழுது போகாது என்பதற்காக ஜலீல் சில புத்தகங்களோடு கிடைத்தால் நண்பர்களையும் அழைத்துக் கொண்டு மில்லில் உட்கார்ந்து கொள்வான். நான் போன போது தனியே அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் படிப்பை ஆரம்பித்தோம்.

''என்ன ஐயா, இன்று மிஷின் லீவா?'' என்று மரியாதையான குரலில் கேட்டவாறு ஜாபருல்லா நின்றான்.

''ஆமாம், இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை யாச்சே!'' என்று ஜலீல் பதில் சொன்னன். எனக்கு இம்முறை ஜாபருல்லாவுடன் மனம் விட்டுப் பேச வேண்டுமென்று தோன்றிற்று.

''உள்ளே வாருங்கள் ஐயா, நன்ருக வெய்யில் அடிக்கிறது. கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போங்கள்'' என்று கூப்பிட்டேன்.

''தொழிலாளிக்கு வெய்யில் பெரிய விஷயமில்லை வாத்தியார் சார்!'' என்று படியேறி

வந்து கூடையை இறக்கி வைத்தான் ஜாப ருல்லா. அவன் நெற்றியில் வியர்வை குளம் போல் தேங்கியிருந்தது. வால் வாலாகக் கிழிந்து போயிருக்கும் சட்டையால் நெற்றி யைத் துடைத்துக் கொண்டு 'உஸ்'ஸென்று பெருமூச்சு விட்டான். எங்கள் சம்பாஷணை உருதுவில் தொடர்ந்தது.

''நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?''

'இங்கேதான் ஷௌகத்தலி பேட்டையில்.'

''குழந்தைகள் இருக்கா ஐயா?''

ஜாபருல்லா என்னை நிமிர்ந்து பார்த்தார்: அப் பார்வையில் ஓர் ஒளி இருந்தது.

''இங்கே யாரும் இல்லே. நான் மட்டும் தனியாகத்தான் இருக்கேன். எல்லா ம் மேற்கு பாகிஸ்தானிலே இருக்காங்க.''

''மேற்குப் பாகிஸ்தானா? அங்கே எந்த ஊர் தாத்தா?''

''ஸிந்து நதி ஓடற கிராமங்களிலே ஒன்று. இஸ்மாயில்பூர் என்று ஓர் அழகான கிராமம். வாத்தியார் சார், அங்கே தான் என் சொந்த வீடு இருக்கிறது. இந்த இரண்டு கைகளாலும் பாடுபட்டுப் பண்படுத்திய சொந்த நிலம்இருக் கிறது....'' ஊரைப் பற்றிய ஞாபகங்கள் அவன் மனத்திரையில் அடுக்கடுக்காகத் தோன்றி விட்டன போலும்.

''ஊருக்குப் பக்கத்திலே காலி ஜங்கின் (கருப்புக் காடு)ன்னு ஒரு காடு இருக்குது. நான் ஷிகாரு (வேட்டை)க்காகப் பதிமூணு வயசிலிருந்தே அங்கே புறப்பட்டேன். ரொம்ப அருமையான காடு. ரஷீதைக் கூடக் கூப் பிட்டுக்கினு பலதரம் போயிருக்கேன். — அப்போ ரஷீது நாலு வயசுப் பையன். ஏன், அஞ்சு வயசு கூட இருக்கும். அதுதான் கடை சித் தடவையா அவன் என்னோடு காட்டுக்கு வந்தது. சின்னப் பசங்களை யாரும் காட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போக மாட்டாங்க. நான் தைரியம் வர்றத்துக்காக அந்தச் சின்ன வய சிலேயே அவனைக் கூட்டிக்கிட்டுப் போனேன். எல்லாம் தலைகீழா மாறிப் போச்சு. ரஷீதை யும் அவனுடைய அம்மாவையும் விட்டு வந்து பதினாறு வருஷங்கள் ஆச்சு....''

இதோடு வார்த்தைகளை நிறுத்திக்கொண்டு சாலையின் ஞாயிற்றுக்காலையின் சூனியத்தை யும் எப்போதாவது அங்கு மிங்கும் செல்லும் வாகனங்களையும் பார்ப்பதுபோல ஏதோ தீவிரமாகக் கனவு கொண்டிருந்தான். ஜலீல் அதைக் கலைக்க இஷ்டப்படாவிட்டா லும் நான் குறுக்கிட்டேன்.

''நீங்கள் ஏன் பிரிந்து வந்து விட்டீர்கள் தாத்தா?''

''ஹாங், என்ன கேட்டீர்கள் தம்பி? உம்...: ஊம்... ஏன் பிரிந்து வந்தேனா? அது ஒரு பெரிய கதை. இந்தியா முழுவதும் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டதே அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கீங்களா?''

நான் தலையாட்டினேன்.

''ஒரு நாள் சாயங்காலம் நான் வேட்டைக் குப் போயிருந்தேன். கூட என்னுடைய ஹிந்து நண்பர் ஒருத்தரும் வந்திருந்தார். அந்த நாட்களில் இஸ்மாயில்பூரிலே ரொம்ப அன்னி யோன்னியம் நிலவியது. அந்த நாளிலேஎன்ன, இந்த நாளிலேயும் இஸ்மாயில்பூர் அப்படித் தான் இருக்கும் ஐயா. திரும்பி வர்றத்துக் குள்ளே கலகம் மூண்டு எங்கேயும் கொலை.... கொள்ளை. காலையிலே நான் வேட்டைக்குப் போறத்துக்கு முன்னாடி பார்த்துட்டுப்போன அமைதியும் அழகும் வாய்ந்த அந்தச் சிறிய ஊர் — என் சொந்தக் கிராமம் — ரத்தத்தினா லும் தீயினாலும் நாசமாய்க் கொண்டிருந்தது. ரஷீதும் என் மனைவியும், என்ன ஆனார்களோ என்று அந்தத் தீயையும் குண்டாந்தடியையும் மதிக்காமல் கிராமத்துக்குள்ளே நுழைந்தேன். வீட்டை நெருங்கி இருப்பேன், என் மண்டை யின் மேல் மடார்னு ஓர் அடி விழுந்தது. நான் மயங்கி விழுந்து விட்டேன். அப்புறமா எனக்கு நினைவு வந்த போது ஏதோ ஓர்

ஆஸ்பத்திரியிலே இருக்கிற மாதிரி இருந்தது. மறுபடியும் நான் மயங்கி விழுந்தேன். இப்படியே மயக்கமும் நினைவுமாக எத்தனை நாட்கள் கழிஞ்சதோ? ஒரு நரம் நல்ல நினைவோட கண் விழிச்சப்போ நான் டில்லியிலே என்னோடு அன்று வேட்டைக்கு வந்த நரிந்து நண்பர் வீட்டில் இருந்தேன். என் உயிரை எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியிலேஅவர் காப்பாற்றியிருக்கார். நான் மூர்ச்சை தெளிஞ்சு எழுந்ததும், முதல்லே என் ரஷீதையும், மனைவியையும் பற்றிக் கேட்டேன். அவர்கள் உயிர் தப்பி விட்டதாகவும், என் மாமனார் வீடான நல்வார் நகர் என்ற சிற்றூருக்குப் போய் விட்டதாகவும் கூறினார். நான் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, அங்கு போகத் துடித்தேன். அந்த நண்பர் காசிநாத் என்னை இவ்வளவு கஷ்டப்பட்டுக் காப்பாற்றியதற்குப் பலனுகவாவது, இந்தப் புயல் அடங்குகிற வரையில் ஊருக்குப் போகக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். அவர் பெரிய மண்டி வியாபாரி. இங்கே சென்னையில் நிறைய வியாபாரம் செய்கிறவர். அப்போது சென்னை அமைதியாய் இருந்தது. தாம் திரும்பிப் போகிற போது, அழைத்துச் செல்வதாக என்னையும் சென்னைக்கு அழைத்து வந்து விட்டார். சென்னையில் கொஞ்ச நாட்கள் இருந்து,அவர் இந்த ஊருக்குச் சரக்கு வாங்க வந்த போது அவரோடு கூடவே இங்கு வந்தேன். இங்கேயே என் தலை எழுத்து தேங்கி நின்று விட்டது, ஐயா!'' என்று தன் கேவுகிற குரலில் பேசி நிறுத்தினான் அவன்.

''தாத்தா! ஏன் நீங்கள் இங்கேயே தங்கி விட்டீர்கள்?'' என்று கேட்டேன்.

''காசிநாத் இந்த ஊரிலே மாரடைப்பினால் காலமாயிட்டார். நான் அவர் கூட வந்தேனே ஒழிய என் கையிலே காலணாக்கூட கிடையாது. இந்த ஊரிலேயென்ன, இந்த மாகாணத்திலேயே எனக்கு யாரும் தெரியாது. இங்கே இருந்து கொண்டு நல்வார் நகர் விலாசத்துக்கு என் மாமனாருக்குக் கடிதம் போட்டேன், போஸ்ட் மாஸ்டர் விலாசத்துக்குப் பணம் அனுப்பச் சொல்லி யிருந்தேன். பணமும் வரவில்லை; பதிலும் வரவில்லை. யார் யாரிடமோ பிச்சை எடுத்தேன், ஊருக்குப் போறதுக்காக. என் ரஷீதையும், பீவியையும், என் வாழ்க்கை முழுதும் நான் பழகி வந்த என் சிந்து நதியையும் பார்ப்பதற்காக என்னென்ன முயற்சிகளோ செய்து பார்த்தேன். திருட்டு ரயில் ஏறி அங்கங்கே ஜெயில்லே இருக்க எனக்கு விருப்பமில்லை. எனக்கு அந்த நாளிலே வேலை எதுவும் செய்யத் தெரியாது. துப்பாக்கி சுடவும், நிலத்தை உழவும் மட்டும் தான் தெரியும். எனவே என் முயற்சிகள் கொஞ்சங் கூடப் பலிக்கவில்லை. அப்போ பாகிஸ்தான் பிரிஞ்சிடுச்சு. நான் இங்கே பக்கத்துக் காட்டிலே பாரஸ்டரா இருந்த ஒருத்தர்கிட்டே போயி வேலை கேட்டேன். அவர் பெரிய வேட்டைக்காரர். துப்பாக்கி சுடறதிலே எனக்கிருந்த சாமர்த்தியத்தைக் கண்டு என்னை வேலைக்கு வைத்துக் கொண்டார். பின்னால் அவரும் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய் விட்டார். எந்த வழியுமில்லாமல் நான் மண்டித் தெருவில் கை வண்டி இழுக்க ஆரம்பித்தேன். ஐயா, ஒவ்வொரு நாளும் எப்போது பாகிஸ்தான் போவோமென்று எண்ணியெண்ணியே பதினறு வருஷங்கள் கடந்து விட்டன. ஊரிலேயிருந்து எந்தத் தபாலும் வரவில்லை. நான் போட்ட தபால் எல்லாம் ஒன்று விடாமல் திரும்பிவந்துவிட்டன. ஆனல் எனக்கு நிச்சயமா நம்பிக்கை இருக்கு. ரஷீத் உயிரோட எங்கேயோ இருக்கான். அவனை நான் நல்லாப் படிக்க வைக்கப் போறேன். அதுக்காகத்தான் இந்த ஊரிலே நான் கஷ்டப்பட்டுச் சம்பாரிச்சுக்கிட்டிருக்கேன். இன்னுங் கொஞ்ச நாள் பாக்கி என் கையிலே ரொக்கமா இருநூறு ரூபாய் சேர்ந்திடும். பாகிஸ்தானின் எந்த மூலை முடுக்கிலிருந்தாலும் என் ரஷீதை நான் கண்டு பிடிச்சுடுவேன். அவனை நான் படிக்க வைப்பேன். உண்மையான படிப்பு இல்லாததினலே, ஜனங்கள் எவ்வளவு குரூரமா மிருகத்துக்குச் சமானமா நடந்துக்கிட்டாங்க என்கிறதை என்கண்ணலே நான் கண்டேன். என் ரஷீதைச் சத்தியமான படிப்பைக் கத்துக்கிற வரைக்கும் நான் படிக்க வைப்பேன்!''

நான் ஜாபருல்லாவை ஆச்சரியத்தோடு பார்த்தேன். பிரளயம் போல் நடந்த அந்த வகுப்புக் கலவரங்களின் மத்தியிலும், தன் பையன் ரஷீத் உயிரோடு இருக்கிறன் என்று எப்படி அவனல் நம்ப முடிகிறதென்று எனக்கு வியப்பாக இருந்தது.

''தாத்தா! இப்போ பாகிஸ்தான் போவறதுன்னு பாஸ்போர்ட் வாங்கணும். அதுக்கெல்லாம் ஏற்பாடு செய்யணும்'' என்றேன்.

''மண்டித் தெருவிலே முதலாளி ஒருத்தர் அதுக்கு ஏற்பாடு பண்றதா சொல்லியிருக்கார் வாத்தியார் ஐயா! உம்... நான் வர்றேன்'' என்று வணங்கி விட்டு ஜாபருல்லா தன் கூடையைத் தோளில் ஏத்திக் கொண்டு சென்றன்.

ஜௌகத்தலி பேட்டையில், பெரிய தீவிபத்து ஒன்று நேர்ந்து விட்டதாக ஊரெங்கும் பேச்சாயிருந்தது. என்னவென்று விசாரித்ததில், யாரோ புகை பிடித்து விட்டு அலட்சியமாகச் சுருட்டை எறிந்து விட்டிருக்கிறர்கள். நல்ல காற்றில், கோடை காலமாகையால் சட்டென்று பற்றிக் கொண்டிருக்கிறது. தீயணைக்கும் படை வருவதற்குள், விறுவிறுவென்று ஒரே வரிசையாயிருந்த பத்துக் குடிசைகள் பஸ்மமாகி விட்டன. உயிர்ச் சேதம் ஒன்றுமில்லை.

மறுநாள் அந்தக் கருகிய குடிசைகளையும், பாதி தீய்ந்த ஓலைகளையும், எலும்புக்கூடு போல் நின்ற வெற்றுச் சுவர்களையும், நடு வீதியில் நடக்கும் குடித்தனங்களையும் பார்த்து வர நானும் ஜனிலும் சென்றோம். தெருவின் ஓர் ஓரத்தில் ஜாபருல்லா குந்திக் கொண்டிருந்தான். அப்போது தான் எனக்கு அவனும் இந்தப் பேட்டை வாசி என்ற ஞாபகம்வந்தது. எங்களைக் கண்டதும் நிரம்ப வேதனையோடு எழுந்து நின்று ஸலாம் செய்தான்.

''ஐயா! என் வீடும் பத்தி எரிஞ்சுடுச்சு'' என்று வேதனையூட்டும் குரலில் கூறினன்.

''என்ன ஜாபருல்லா?'' நான் திடுக்கிட்டேன்.

''ஆமாம் ஐயா, இருநூறு ரூபா நோட்டுகளா வைச்சிருந்தேன். அது எரிஞ்சு சாம்பலாப் போச்சு. ரஷீதும் செத்துப் போயிட்

டான்'' என்று தன் மடியிலிருந்து எதையோ எடுத்தான். மான்தோலினால் கையால் தைக்கப்பட்ட ஒரு சிறிய தொப்பியையும், ஓர் உருது ஆரம்பப் பாடப் புத்தகத்தையும் எடுத்தான். மான்தோல் தொப்பி பாதி, நீரினால் கருகிவிட்டிருந்தது. புத்தகத்துக்கு எந்தச் சேதமும் இல்லை.

''இந்தத் தொப்பி....'' என்று சொல்ல ஆரம்பித்தவன் நாக்குளற கண்களில் நீர் பெருக, ''நான் வேட்டையாடின நல்ல ஜாதி மான் தோல். என் கையாலே என் ரஷீதுக்காகத் தைத்தேன் ஐயா. இது கருகிவிட்டது. எத்தனையோ தடவை இது காணாமற் போய்க் கிடைத்திருக்கிறது. இப்போ இது கருகிவிட்டது. நிச்சயமா என் ரஷீத் செத்துட்டான் ஐயா. நான் போய்ப் பார்க்க முடியாது. எல்லாப் பணமும் கருகிப் போய் அதன் சாம்பல்தான் இந்தத் தண்ணீரிலே கரைஞ்சு ஓடிச்சு. இந்தப் புஸ்தகத்தை நீங்க வச்சுக்கங்க ஐயா, இது ஒங்களுக்கு உதவும். இந்தாங்க'' என்று அந்த உருதுப் புத்தகத்தை எனக்குத் தந்தான் ஜாபருல்லா.

''இல்லே தாத்தா, இந்த விபத்து தற்செயலாக நடந்தது. அதற்கும் உங்கள் பிள்ளைக்கும் என்ன சம்பந்தம்? வீணாக மனத்தைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்'' என்றேன்.

''ஒங்களுக்குத் தெரியாது வாத்தியார் ஐயா. அவன் நிச்சயம் செத்துப் போயிட்டான். இந்தத் தொப்பியும் ரூபாயும் தவிர பாக்கியெல்லாம் ஒண்ணும் ஆகல்லே. அவன் செத்துத்தான் போயிட்டான்'' என்றான் ஜாபருல்லா உறுதியான குரலில்.

என்னால் அதற்குச் சமாதானம் சொல்ல முடியும். ஆனால் ஜாபருல்லாவிடம் அந்தச் சமாதானங்களினால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று அவனுடைய உறுதியான போக்கு எனக்குத் தெரிவித்தது. அவன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அருகே, ஒரு சிறு பள்ளத்தில் நீரணைக்கும் படை நீரை அணைக்கப் பாய்ச்சியிருந்த தண்ணீர் குளம் போல் தேங்கி யிருந்தது. அந்தத் தண்ணீரில் தான் எங்கோ கலந்து நதிக் கரையோரத்தில் இருக்கும் ஒரு சிறிய கிராமத்தில், அவனுடைய மகனையும் மனைவியையும் பற்றி அவன் கட்டி வைத்திருந்த மனக் கோட்டைகள் இடிந்து விழுந்து, அவன் நம்பிக்கைகளெல்லாம், கரைந்து போய் விட்டிருக்கின்றன என்று எனக்கு ஒரு வேதனை உதித்தது.

''வர்றேன் ஐயா, இந்தப் புஸ்தகத்தை வச்சுக்கங்க, ஸலாம்!''' என்று ஜாபருல்லா அங்கிருந்து போய் விட்டான். அதற்கப்புறம் எப்போதும் ஜாபருல்லாவை நான் பார்க்கவில்லை. அவன் எங்கே போனானோ தெரியாது. எப்போதேனும் அவனைக் குறித்து நினைக்க நேர்ந்தால், சிந்து நதிக் கரையின் ஓரத்தில், அழகான சிறியதொரு கிராமத்தில் ஒரு சிறு குடிசையிலிருந்து ஓர் இளைஞனும் கிழவியும் ஜாபருல்லா நிச்சயம் திரும்பி வருவானென்று நதியின் அக்கரையை நோக்கியவாறு சதா எதிர்பார்த்திருப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது.



ஹாக்கிப் போட்டி

குண்டுமணி

ஆற்றிலே ஒருவன் தினம் வெள்ளத்தை எதிர்த்து நீச்சலடித்துச் செல்வான். இப்படிப் பல நாட்கள் அவன் அக்கரை சென்றிருக்கிறான். யாரும் அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. ஒரு நாள் நீச்சல் வீரன் அக்கரை சேர முடியாமல் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டான். அவ்வளவுதான்; அந்த ஊரில் உள்ள அத்தனை பேரும் கூடி நின்று வேடிக்கை பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரித்தார்கள்.

இந்த நிலையில் இருக்கிறது ஹாக்கி விளையாட்டு. 1928-ம் வருஷத்திலிருந்து 1960-ம் வருஷம் வரை இந்திய ஹாக்கி வீரர்கள் உலகில் முடிசூடா மன்னர்களாக விளங்கிய போது அதை எல்லாரும் சர்வ சாதாரணமாக மதித்து வந்தார்கள். ஆனால் ரோமில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் 1960-ம் வருஷம் பாகிஸ்தானிடம் இந்தியா தோற்றதும் ஹாக்கி விளையாட்டைப் பற்றிப் பேச்சுக்கள் பிரமாதமாக அடிபட ஆரம்பித்தன. சிலர் பழம் சரித்திரம் பேசி, இப்போதுள்ள ஆட்டக்காரர்களின் தரக் குறைவை இடித்துக் காட்டத் தொடங்கினர். பிரிவினைக்கு முன் இந்தியாவில் பாகிஸ்தானிய ஆட்டக்காரர்களும் இருந்தார்கள் என்பதை அவர்கள் நிதானித்து யோசித்துப் பார்க்கவில்லை. இத்தனை நாட்களாக வெற்றி பெற்றவர்களைப் பாராட்டாதவர்கள் தோல்வியைக் கண்டதும் உடனே தூஷிக்க ஆரம்பித்தார்கள். இப்படிச் சூடு கொடுத்ததும் நல்லதற்குத்தான் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் ஆட்டக்காரர்களுக்கு விறுவிறுப்பும், ஆட்டத்தில் மிகுந்த ஈடுபாடும் ஏற்படத்தான் வழி ஏது?

சென்னை எழும்பூர் ஸ்டேடியத்தில் நாட்டின் இரண்டாவது பிராந்திய ஹாக்கிப் போட்டி மே 13-ந் தேதியிலிருந்து 19-ந் தேதி வரை நடைபெற்றது. வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்குப் பிராந்திய கோஷ்டிகளும் இந்திய ஹாக்கிப் பெடரேஷன் தலைவர் கோஷ்டியும் பங்கு பற்றின.

கடைசி நாளன்று நடைபெற்ற ஆட்டத்திலே மேற்குப் பிராந்தியமும், தெற்குப் பிராந்தியமும் ஆடின ஆட்டத்தைப் பார்த்த போது உண்மையிலேயே நல்லதோர் ஆட்டத்தைக் கண்ட திருப்தி ஹாக்கி ரஸிகர்களுக்கு ஏற்பட்டது. ஆட்டம் முழுதும் நல்ல விறுவிறுப்பு. யார் ஜயிப்பார்களோ என்ற ஆர்வம் கரை புரண்டது. மேற்குப் பிராந்திய ஹாக்கிக் கோஷ்டியினரும், தெற்குப் பிராந்திய ஹாக்கிக் குழுவினரும் ஆளுக்கு ஒரு கோல் போட்டுச் சமமான நிலையிலிருந்தனர். நேரமாக ஆக ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்து விடும் என்று சிலர் எதிர்பார்த்தனர். இந்தச் சமயத்தில் தெற்குப் பிராந்திய ஹாக்கிக் குழுவின் காப்டன் பீட்டர் அற்புதமாக ஒரு 'கோல்' போட்டு வெற்றிக் கோப்பையையும் பெற்றுக் கொண்டார். சென்னையில் நடைபெற்ற பிராந்திய ஹாக்கிப் போட்டியிலே தெற்குப் பிராந்திய கோஷ்டியே அதிக எண்ணிக்கை பெற்று வெற்றி பெற்றது பாராட்டுக்குரியது. அது நமக்குத்தானே பெருமை?

அதற்கடுத்த ஸ்தானத்தைப் பெற்றது இந்திய ஹாக்கி பெடரேஷனின் தலைவர் கோஷ்டியாகும். இந்த ஹாக்கிக் கோஷ்டிக்கும், வடக்குப் பிராந்திய ஹாக்கிக் குழுவுக்கும் வெள்ளியன்று நடந்த ஆட்டத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அன்று ஆட்டம் 'டல்'. அதோடு அம்பயர் அவுட்டுக்குப் போன பந்தைக் 'கோல்' என்று கையைத் தூக்கி விட்டார். 'கண்ணால் கண்டதும் பொய்யாகி விடுமோ' என்று ஹாக்கி ரஸிகர்கள் பயந்து விட்டனர்! நல்ல காலம்! அம்பயர் தம் முடிவிலிருந்து வாபஸாகி விட்டார்! சத்தியமும் பிழைத்தது! அன்று அம்பயர் பாடு திண்டாட்டமாகி விட்டது.

இந்தப் பிராந்தியப் போட்டியிலே ஒரு விசேஷம்: இந்தப் போட்டியில் நன்றாக ஆடியவர்களை ஆசிய விளையாட்டுப் போட்டிக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பதினேழு ஆட்டக்காரர்களின் வரிசையில் வெற்றி பெற்ற தென் பிராந்தியக் கோஷ்டியிலிருந்து யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையே என்று சிலர் ஆட்ட முடிவில் முணுமுணுத்தது காதில் விழுந்தது. நியாயம்தானே? 'ஸ்டாண்ட்பை' ஆட்டக்காரர்களாகத் திரு கதிரேசனும், பீட்டரும் போகிறார்களே என்று ஆறுதல் கூறலாம். நல்ல ஆட்டக்காரர்கள் 'ஸ்டாண்ட் பை'யாக இருந்து விட்டால் போதுமா?



ஜூன் 1உ முதல்
...சென்னை...
பாரகன்·மஹாராணி
லிபர்டி மற்றும் தென்னாடெங்கும்
P.கண்ணம்மா அளிக்கும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிலிம்ஸ்
தக்ஷயக்ஞம்
டைரக்ஷன்:
K.B.நாகபூஷணம்
உலக உரிமையாளர்கள்
விஷ்ணு
பிக்சர்ஸ்.
சென்னை-17



கதைப் பூங்கா (இரு தொகுதிகள்)

புலவர் அரசமணி, சிறுவர்களின் உள்ளத்திலே நாட்டுப் பற்று, தியாகம், அன்பு, கடமை, தாய்ப் பாசம், வீர உணர்வு ஆகிய நற்பண்புகள் நல்ல முறையில் பதியும் வண்ணம் இக் கதைப் பூங்காவினை அமைத்துள்ளார். 'சேரன் இரும்பொறை, பொய்கையார் என்னும் புலவரை எப்படிப் போற்றினுன்? ஔவையார் புலவர்களின் செருக்கை எப்படித் தாழ்த்தி, அவர்கள் பெருமையைக் காத்தாள்?' என்பது போன்ற நம் தமிழ் நாட்டுக் கதைகளை மட்டுமல்ல; நெப்போலியன், ராபர்ட் புரூஸ் போன்ற வெளி நாட்டு வீரர்களின் வரலாற்றையும் இன் சுவைக் கனியென அளித்துள்ளார்.

இக்கதைப் பூங்காவிலே அங்கங்கே தலை தூக்கி நிற்கும் எழுத்துப் பிழை, சொற்பிழைகளைக் களையெடுத்துச் செப்பனிட்டிருந்தால், சிறுவர்கள் படித்து மகிழ்வதோடு, அறிவு வளர்ச்சி பெறவும் உதவியாக இருக்கும்.

பிரசுரம்: அருணோதயம், இராயப்பேட்டை சென்னை-14; விலை: ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ. 1-00.

கானகக் காரிகை

'எல்லாவழியும் ரோமுக்குச் செல்கிறது' என்பது ஆங்கிலப் பழமொழி. எம்மதமும் சம்மதமெனக் கூறிச் சான்றோர்கள் ஆண்டவனை அடைய முயல்கிறார்கள். அசிசி மாநகரத்துத் துறவியான பிரான்சிஸ் என்பவரது இல் வாழ்க்கை வரலாறும் இக்கொள்கையை நிரூபித்துக் காட்டுகிறது.

அசிசி அந்தணரான பிரான்சிஸின் வரலாற்றினை எழுதப் புகுந்த ஆசிரியர் வளவன் பாண்டியன் ஆற்றொழுக்கென விளங்கும் நல்ல தமிழ் நடையிலே, இயற்கை வளத்தையும் இயல்புச் சிறப்புக்களையும் கூறுகிறார். இத்தாலி நாடு இந்திய நாட்டின் மாற்றுருவமெனத் தோன்றுகிறது. பிரான்ஸிஸ் துறவியின் வாழ்வு நிகழ்ச்சிகள் பல நந்தமிழ் நாட்டுப் பக்தர்களின் வாழ்க்கையை நினைவூட்டுகிறது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் பரந்த மனப்பான்மையைப் புகட்டும் இந்த நூல் இன்னும் சற்றுச் சுருக்கமாக, நிகழ்ச்சிகளை விறுவிறுப்புடன் கொண்டு செல்வதாக அமைந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை-5; விலை: ரூ 4.50.

மறுமலர்ச்சிக் கவிதைகள்

பழைய கருத்துக்களையே கூறிக் கூறிப் பல கவிதை நூல்கள் வெளிவருவதை நாம் பார்க்கிறோம். புதுக் கருத்துக்கள் என்றால் பழைமையைத் தாக்கிக் கொக்கரிக்கும் கருத்தல்ல; தற்காலத்துக்கு ஏற்ற கருத்துக்களை நல்ல முறையிலே எடுத்துக் கூறுதலே யாகும். இந்நூலில் புதுக் கருத்துக்களைக் கூறும் கவிதைகள் நிறைய இருக்கின்றன. குறிப்பாக எடுத்துக் காட்ட வேண்டுமானால் "எனக்குக் கணவன்" என்ற தலைப்பில் வரும் பாடல்களைக் கூறலாம். ஒரு பெண் தன் உள்ளத்தில் வைத்து உருகும் எண்ணங்களை அழகாக எடுத்துக் கூறுகின்றன பாடல்கள். "அன்னை இயற்கை ஆற்றுப் படை" என்னும் தலைப்பில் தரப்பட்டிருக்கும் நீண்ட அகவற்பா கருத்து நிறைந்ததாயிருக்கிறது. "தமிழ் மக்கள் ஆற்றுப் படை" தமிழ் மொழியின் பெருமையை வெகு அழகாக விளக்குகிறது. "புதுமைப் பித்தம்" என்ற தலைப்பிலுள்ள பன்னிரண்டு பாடல்களும் நம் நாட்டுக்கு உதவாத புதுமைக் கொள்கைகளைச் சாட்டையடி அடித்துச் சொடுக்குகின்றன. தமிழ்மொழியின் பால் நூலாசிரியருக்குள்ள அளவு கடந்த பக்தி பல பாடல்களின் மூலம் வெளிப்படுகிறது. "காதல்" பற்றிய பாடல்கள் கருத்துக்கு விருந்தாக அமைந்திருக்கின்றன.

இயற்றியவர்: அ.கி. பரந்தாமனார்; விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை – 1; விலை: ரூ. 2.50.

சாமி சிதம்பரனாரின் புதுக் குறள்

எத்தனையோ நூற்றாண்டுகளாக நம்மிடையே பழகி வரும் வள்ளுவர் திருக்குறளுக்குப் பிரதியாக இந்நூல் வெளி வந்திருக்கிறது. இப் புது முயற்சியே பழைய நூலின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டுகிறது. இந் நூலாசிரியர் தம் முன்னுரையில் இந்நூல் இயற்றியதற்குக் காரணத்தைப் பின்வருமாறு கூறுகிறார். : "…. இப் புதுக் குறளிலே, பழங்குறளுக்கு மாறான கருத்துக்களும் உண்டு. இது கால மாறுபாடு. இக் காலத்து மக்களின் எண்ணங்களையும் கொள்கைகளையும் பிற்காலத்தாரும் அறிந்து கொள்வதற்காகவே இக் குறள் எழுதப்பட்டது. காலத்துக்கேற்ற கருத்துக்களைக் கூற வேண்டும் என்பதுதான் இந்தப் புதுக் குறளின் நோக்கம்."

பழங்குறளுக்கு மாறான கருத்துக்களைக் கூற வேண்டும் என்பதற்காக ஆலய நிந்தனை,

மத நிந்தனை முதலியவற்றைச் சேர்த்திருப்பதைப் புதுமைக் கருத்துக்களாக ஏற்க முடியவில்லை. கோவில்களைப் பற்றிக் கூறும் போது,

''கள்ளர் குடியிருக்கும் கற்கோயிற் கட்டிடங்கள்
எள்ளத் தகுவதேயாம்.''

''கோயிலிலே தெய்வம் குடிகொண்டிருக்குமேல்
தீயரங்கு வாழ்ந்திருப்ப ரோ?''

என்ற குறட்பாக்களைப் படிக்கும்போது ஆஸ்திக மக்களின் மனம் புண்படும் என்பதை ஆசிரியர் உணராமற் போனது மிகவும் வருந்தத்தக்கது.

கோயில்கள் பலவற்றில் நிர்வாகம் சரியில்லாமல் இருக்கலாம்; சில கோயில்களில் அக்கிரமங்கள் நிகழலாம். மேற்படி கோயில்களில் நிர்வாகத்தைச் சரி செய்வதும், அக்கிரமங்களைக் களைவதுந்தான் நியாயமே தவிர, பொதுவாக எல்லாக் கோயில்களையும் பற்றி இழித்துப் பேசுவது நியாயமாகாது.

''செம்பாலும் கல்லாலும் செய்தவை தெய்வமென
நம்புவது மூடத்தனம்.''

என்கிறார் ஓரிடத்தில். கடவுள் நம்பிக்கையையும், வழிபாட்டையும் எதிர்க்கும் இத்தகைய கொள்கையில் என்ன புதுமையிருக்கிறது என்று விளங்கவில்லை.

இப்புதுக் குறளைப் பற்றி நாம் அபிப்பிராயம் கூறும் சிரமத்தை ஆசிரியர் நல்லவேளையாக நமக்கு விட்டு வைக்கவில்லை. முன்னுரையில் அவரே கூறி விடுகிறார். ''இப்புதுக் குறளால், திருக்குறளின் சிறப்பு இன்னும் ஏற்றமடையும்.... கசப்பு என்று ஒன்று இருந்தால்தானே இனிப்பின் உயர்வு தெரியும்? வெய்யில் இல்லா விட்டால் நிழலின் அருமையை உணர முடியுமா...?''

இதைவிடச் சரியாக இந்நூலைப் பற்றி என்ன கூறிவிட முடியும்?

பிரசுரம்: என். சி. பி. எச். பிரைவேட் லிமிடெட், சென்னை – 2. விலை: ரூ. 1.50.

சித்தி வேழம்

கவிஞர்களின் கற்பனையூற்று சொல்வளமும் பொருள் வளமும் கொண்டு மனித இனம் மகிழ்ந்து அனுபவிக்கக் கூடிய அரிய கருவூலமாக விளங்குகிறது. அதிலும் தமிழ்க் கவிஞர்களாயிருந்து விட்டால் நுகர நுகரத் தெவிட்டாத இனிமையும் சேர்ந்து வெளிப்படுகிறது. அத்துடன் பக்திச் சுவை ததும்பும் பாடல்களாயிருந்து விட்டால் அவற்றின் தனிச் சிறப்பைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். மனித வாழ்வில் ஏற்படும் துன்பங்களையெல்லாம் மறப்பதற்கு, உள்ளமுருக்கும் மேற்படி பாடல்கள் உறுதுணையாயிருக்கும். இறைவனைப் பற்றிய பாடல்களில் அகத்துறைப் பொருளையமைத்துப் பாடும் மரபு நம் தமிழகத்தில் நெடுங்காலமாக உண்டு.

சேந்தனார் இயற்றிய திருவிடைக்கழித் திருவிசைப் பாவிலுள்ள பதினொரு பாடல்களுக்கு மிகவும் அழகாக விளக்கம் தரப் பட்டிருக்கிறது. குமரப் பெருமானைக் காதல் நாயகனாக வைத்துப் பாடிய பாடல்கள் அவை. பதினொரு பாடல்களுக்கும் ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்திக் கூறியிருப்பது மிகவும் ரஸமாயிருக்கிறது.

முதல் இரண்டு கட்டுரைகளும் விநாயகப் பெருமானைப் பற்றியவை. ''சித்திவேழ''த்துக்கு ஆதாரமாயுள்ளது திருவிளையாடற் புராணத்திலுள்ள ஒரு பாட்டு. ''கிழவியும் காதம்'' அவ்வையாரின் பாட்டை ஆதாரமாகக் கொண்டது. ''யானைக்கும் கலங்கார்'' என்ற கட்டுரை அருணகிரிநாதரின் வாக்கு உண்மையான வாக்கு என்பதை நிரூபிக்கும் உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் இன்பமும், பக்தி அநுபவமும், அகத்துறைச் சுவையும் ஒருங்கே கொண்ட இந்நூல் படித்து மகிழ வேண்டிய நூலாகும்.

ஆசிரியரின் தமிழ் நடை வாசகர்களை ஈர்க்கும் வண்ணம் அமைந்திருக்கிறது.

எழுதியவர்: கி. வா. ஜகந்நாதன்; பிரசுரம்: அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை–18; விலை: ரூ. 2.25.

ஊசி வேலையும், உடை தயாரித்தலும்

கிளி, மயில் போன்ற பறவைகள் வண்ண வண்ண நிறங்களில் பட்டுச் சொக்காய்கள் அணிந்திருப்பது போல் அழகான சிறகுகளுடன் பறக்கின்றன. ஆடுகள், சில நாய்கள் மழைக்கும் வெயிலுக்கும் தாங்கும்படியான அடர்ந்த ரோமங்களுடன் படைக்கப்பட்டிருக்கின்றன. இவை இயற்கை முறை. ஆனால் மனிதர்கள் ஆறறிவு பெற்றவர்கள் அல்லவா? தங்களைப் போர்த்திக் கொள்ளச் செயற்கை முறையில் துணிகளைத் தேடினார்கள். காலப் போக்கில் கலை என்ற கட்டுப்பாட்டில் மனித வாழ்க்கை பண்பட்டு வருகிறது. நாலு கெஜம் துணியைச் சுற்றிக் கொண்டால் மனித உள்ளம் திருப்தி அடையவில்லை. அதை அழகு பெறக் கலை உணர்வுடன் தைத்து, உடலுக்கேற்றபடி அணிய உள்ளம் விரும்பியது. எனவே தையற்கலை மற்றக் கலைகளுக்கு மேல் வளர்ந்தது.

கண்ணையும், கருத்தையும் கவரும்படியான நாட்டிய அலங்கார உடை, கல்யாணம் போன்ற விசேஷ தினங்களில் உபயோகிக்கும் உடைகள் எல்லாம் அழகாகத் தைக்கத் தனிப்பட்ட தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் இருக்கிறார்கள். மற்றும் வீட்டு உபயோகத்துக்கான உடை தயாரிப்பு, குழந்தைகளுக்கு ஏற்ற சின்னஞ்சிறு உடைகள் இப்படித் தையற் கலை பல்கிப் பெருகியிருக்கிறது.

அரசாங்கப் பரீட்சைக்குப் போகும் பெண்களுக்கு இப்புத்தகம் மிகவும் உபயோகமானது. எல்லாவிதமான தையல்களையும் பட விளக்கத்துடன் தெளிவாக எழுதியிருக்கிறார் ஆசிரியை. தையலுக்குத் தேவையான சாமான்கள், அதை உபயோகிக்கும் முறை இவைகளும் இப்புத்தகத்தில் இடம் பெறுகின்றன.

ஆசிரியை: ஆர். வெற்றிச் செல்வி; வெளியீடு: பாரி நிலையம் பிராட்வே, சென்னை–1 விலை: ரூ. 3 00.



துணைக்கு



மடிப்புக் கலையாத உடுப்பை மாட்டிக் கொண்ட பின், முழங்காலுக்குக் கீழே கம்பளியினால் ஆன பட்டியைச் சுற்றிக் கொண்டிருந்தார் கான்ஸ்டேபிள் நாச்சிமுத்து.

பட்டியைச் சுற்றிக் கொண்டாரோ இல்லையோ, உடனே அவருடைய இரண்டு கால்களும் அந்த முரட்டு பூட்சுக்குள் சரண் அடையும். அடுத்த நிமிடம் ''டாக்'' ''டாக்'' என்ற நடை அந்தக் காவலர் இல்லங்களை அதிரச் செய்யும்.

அதாவது நாச்சிமுத்து—முந்நூற்று இரண்டு—டியூட்டிக்குப் புறப்பட்டு விட்டார் என்று அர்த்தம்.

''என்னங்க இது?''

அவர் மனைவி பொன்னுத்தா கேட்டாள்.

''ட்யூட்டிக்குப் புறப்பட்டாச்சு.''


''இன்னிக்குக்கூட நீங்க ட்யூட்டிக்குப் போக ணுமா?''

''அதென்ன இப்படி கேட்கிறே பொன்னுத்தா இந்தத் தொப்பியைக் கயட்ட வைக்கிறவரை ட்யூட்டிக்கு போய்த்தானே ஆக வேண்டும் இன்னிக்கு என்ன புதிசாய் கேக்குறே?''

''அதைச் சொல்லலீங்க. நம்ப பய சம்முகத்துக்கு ஜுரம் அதி மாயிருக்கு. மூக்கரை வைத்திய கூட இன்னிக்குத் தாண்டினா தான் முடியும்னு சொல்லுறார் எனக்குத் தனியாய் இருக்கப் பய மாயிருக்கு. நீங்க இன்னிக்கு வேலைக்குப் போக வேண்டாம்.''

''என்ன சொன்னே? வேலை குப் போக வேண்டாமா? அதை விட மூச்சை நிறுத்திவிடுங்க மூச்சு விடாதீங்கன்னு சொல்லி யிருந்தாலும் செய்திருப்பேன்.''

வந்தால்...!



''பையனுக்கு இப்படி இருக்கும்போது ீவு எடுத்துக்கிட்டாத்தான் என்னவாம்?''

''உனக்குத் தெரியாதா, பொன்னு? இப்ப ரு வருசமா ட்ராபிக் ட்யூட்டியிலே போட் ருக்காங்களே. முன் அறிவிப்பு கொடுக்கா ல் நாம லீவுபோட்டா என்ன ஆகும்; தெரி மா? அதெல்லாம் கூடாது. தவிரவும்....''

''என்னங்க அது தவிரவும்.''

''இப்ப நான் டிராபிக் ட்யூட்டி பார்க்கிற டத்துக் கிட்டே புச்சா ஒரு ஸ்கூலு ஏற் டுத்தி யிருக்காங்க. ரொம்பப் பிள்ளைங்க டிக்குது. அதிலேயும் நான் ட்யூட்டி பாக்கிற ாச்சந்தியிலே சதா டிராபிக்தான். அதனாலே ான் லீவு எடுத்துக்கிட்டா புச்சா வருகிற ன் கஷ்டப்படுவான்.''

''அதுக்காக? நம்ம பிள்ளே மேலே உங்க ருக்குப் பாசம் கிடையாதா?''

''பாசம் இல்லேன்னு யார் சொன்னு? ாசம் வந்து கடமையிலே குறுக்கிடக்கூடாது பொன்னு. புரிஞ்சுதா?''

''புரிஞ்சுதான் கிடக்கு. நீங்க இன்னிக்குப் போகக் கூடாது. அவ்வளவுதான்.'' மகனின் பேரில் உள்ள பாசம் அவளைப் புருஷனுக்குக் கட்டளையிடச் செய்தது.

''உன்னோடு பேசிக்கிட்டிருந்தால் பச்சைப் புள்ளைங்க சாரி சாரியாக ஸ்கூலுக்கு வர நேரம் இப்போ. பையனைப் பார்த்துக்க. நான் போயிட்டு வர்றேன்!''

''டக்'' ''டக்'' ன்ற பூட்ஸ் நடை ின் சத்தம் சிறிது றிதாய்த் தேய்ந்து ின்று விட்டது.

ஸ்ரீவத்ஸன்

அவர் போனதிக்கையே பார்த்தபடி நின்ற பொன் னுத்தா, ''தன் வீட்டுக் கதவைப்புடுங்கி அடுத்த வீட்டுக்குக் கொடுத்து விட்டு விடியவிடியக் காவல் காத்த கதைதான் இவருடையது. இவர் புள்ளே கிடந்து தவிக்குது. இவர் என்னடா என்றால் ஊர்ப் பிள்ளைங்களைக் காப்பாத்தக் கிளம்பிட்டாரு'' என்றாள்.

''ஏ, ஏய் கை வண்டி! எவ்வளவு நேரமா சாமான் இறக்குறே. டிராபிக் பிளாக் ஆயிடுத்து. போ. சீக்கிரம்.''

''ஸார். நீங்க எல்லாம் படிச்சவங்க. நீங்க எல்லாம் இப்படி நடு ரோட்டிலே நின்னு பேசிக் கிட்டிருந்தா எப்படி? பிளாட்பாரத்து மேலே ஏறுங்க ஸார்!''

''ஏ, சைக்கிள். இறக்கத்திலே இவ்வளவு ஸ்பீடிலே ஏம்பா வரே?''

''பாப்பா! பிளாட்பாரத்து மேலே ஏறிக் கிட்டு நட.''

கடந்த ஒரு வருட காலமாகவே மூந் நூற்று இரண்டின் குரல் அந்தச் சிம்மாசனத் தின் மீதிருந்து (நாற்சந்தியில் உள்ள வட்ட மான ஸிமெண்ட் குடை) ஒலி பரப்பாகும். அவர் ட்யூட்டியில் அலுத்துக் கொண் டதே இல்லே. அவருடன் வேலே செய் தவர்கள் எல்லாம் ஏட்டய்யாவாகி, ஒரு சிலர் ஸப்-இன்ஸ் பெக்டராகக் கூடப் போய்விட்டார்கள்.

ஆனல் அவரோ அடுத்த வருடம் ஓய்வு

பெற வேண்டும். இன்னும் அவர் அதே கான்ஸ்டபிள்தான்.

ஆறு மாதங்களுக்கு முன்பு நாற்சந்தியி லிருந்து சற்றுத் தள்ளி ஒரு புதிய தொடக்கப் பள்ளியை ஆரம்பித்தார்கள்.

''ஸ்கூல் ஸோன்'' என்ற பெயர்ப் பலகை நடப்பட்டிருந்தும் கூட எவ்வளவோ லாரிக் காரர்கள் வேகமாய் வருவார்கள். அதனால் நாச்சிமுத்துவின் வேலை அதிகமாகி விட்டது.

பிள்ளைகள் பள்ளிக்கு வரும் போதும் சரி, அதை விட்டுப் போகும் போதும் சரி அவர் எந்த வாகனமும் மணிக்கு இருபது மைல் வேகத்துக்கு மேல் போகாதபடி பார்த்துக் கொள்வார்.

பொதுவாகச் சொன்னால் அந்தப் பள்ளிப் பிள்ளைகள் கொஞ்சம்கூட ஆபத்தில்லாமல் பள்ளிக்கூடம் வந்து விட்டுப் போவதில் அவர் அதிக அக்கறை காட்டினார்.

''ஏன் ஸார், இந்தப் போக்குவரத்து நெரிசல் உள்ள இடத்திலே கொண்டு வந்து ஸ்கூலே வச்சுட்டாங்களே. எல்லோரும் கையெழுத்துப் போட்டு மனுக் கொடுத்து இதை வேறு இடத்துக்கு மாற்றக் கூடாதா?'' என்று எல்லோரையும் கேட்பார்.

அவர் சொல்லியபடி மனு எழுதி அதிகாரி களுக்குக் கூட அனுப்பினார்கள் சிலர்.

ஆனால் அதிகாரிகள் அசையவில்லை.

டிராபிக் ட்யூட்டிக்கு வந்து விட்டார் அவர். புறப்படும் போது மனைவி, 'நம்ம குழந் தைக்கு உடம்பு சரியில்லாத போது ட்யூட் டிக்கு ஏன் போகணும்?' என்று கேட்டதை நினைத்துக் கொண்டார்.

இலேசாகச் சிரித்தார்.

'பைத்தியக்காரி. இவ குழந்தைக்காவது பக்கத்திலே இவ இருக்கா. பயமில்லே. ஆனால் நண்டும் சுண்டுமாய் எவ்வளவு குழந்தைகள் இந்த நெரிசலில் ஸ்கூலுக்கு ஓடி வருகின்றன. அதுகளை யெல்லாம் யார் பார்த்துக் கொள் வது? ஒரு நிமிடம் வாகனங்களை ஒழுங்கு படுத்தி விடா விட்டால் பிறகு என்ன ஆகும்? எந்தக் குழந்தையாவது லாரிக்குப் பலியாகி விடாதா? ஒவ்வொரு நாளும் இந்தக் குழந் தைங்க விபத்து இல்லாமல் வீடு போய்ச் சேர வேண்டுமே என என் மனம் படும் பாடு இவளுக்கு என்ன தெரியும்?'

டிராபிக்கில் அவர் நிற்குமிடத்திலிருந்து இருநூறு கஜம் தள்ளி ஸ்கூல் இருந்தது.

முதல் மணி அடித்ததும், சிட்டுக் குருவிகள் போல் குழந்தைகள் ஓடிவந்தார்கள்ஸ்கூலுக்கு.

அந்தப் பத்து நிமிடங்கள் டிராபிக்கை ஒழுங்குபடுத்த என்ன பாடுபட்டார் அவர்!

'உஸ், அப்பாடா!'

இனி பன்னிரண்டு மணி வரையில் கவலை இல்லை. அப்போதுதான் ஸ்கூல் விடுவார்கள்.

அவர் மனம் அப்போதுதான் தன் பிள்ளை யைப் பற்றி எண்ணியது. நீண்ட காலம் குழந்தை இல்லாமல் இருந்து அந்திம காலத் தில் பிறந்த பிள்ளை அது. வயது ஆறு இருக் கும். 'மூக்கரை வைத்தியர்தானே மருந்து கொடுக்கிறார். எல்லாம் சரியாகி விடும்.' அவர் மனத்தைத் தேற்றிக் கொண்டார்.

பதினொன்றரை மணி இருக்கும்.

சின்னச் சின்ன நடை நடந்தபடி புத்தகப் பையைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு ஒரு சிறு பையன் பள்ளிக்கூடத்தை விட்டு வெளி யில் வந்து கொண்டிருந்தான்.

''இப்போது என்ன அதுக்குள்ளே அந்தப் பையன் புறப்பட்டுவிட்டான்!'' என்று அவர் யோசனை செய்யும் போது பையன் வெகு வேகமாக ஓடினான்.

அவன் கொஞ்ச தூரம் ஓடிவிட்டு மறுபடி சந்துப் பக்கம் திரும்பி ஓடியது தெரிந்தது. எதிர்ச் சாரியிலிருந்து ஒரு லாரி தெருப் புழுதி மண்ணைக் கிளப்பி விட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தது அவர் நின்ற மேடான இடத்திலிருந்து தெரிந்தது. ஆனால் பையன் லாரியைப் பார்த்திருக்க முடியாது.

அவ்வளவுதான். இன்னும் சிறிது நேரம் போனால் அந்தப் பையன் லாரியில் சிக்கிக் கொண்டு விடுவான். தான் நின்றிருந்த இடத்திலிருந்து லாரிக்குச் சைகை காட்டி அதை நிறுத்தி விடவும் முடியாது.

அவ்வளவுதான்; பீட்டிலிருந்து அந்த இடத்துக்கு ஓடினார்.

நல்ல வேளை. ஒரு நிமிடத் தாமதத்தில் பையன் லாரியில் சிக்கிவிடாதபடி அவர் தடுத்து விட்டார்.

லாரிக்காரனை விசாரித்து அவன் பேரில் குற்றம் இல்லை என்று அனுப்பி விட்டார்.

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமி களில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமான வர்களுக்குச் சொத்தை ஒழிக்கப் படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித் தால் மட்டும் போதாது—சாப்பிட்ட வுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்ருகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் ருசித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிறுர்கள்.




வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✓ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✓ சொத்தையைத் தடுக்கிறது
- ✓ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பி ஞல், இந்த பலன்கள் அனைத்தை யும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

சுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெற உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறுர்கள்.

IB-30-TAM.



கமர்ஷியல் அச்சகத் தொழிலாளர்களுக்கான கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டத்துக்குக் கால்கோள் விழா மே மாதம் 4-ந்தேதி நடைபெற்றது. இந்த விழாவுக்குத் தொழில் அமைச்சர் திரு வேங்கடராமன் தலைமை வகித்தார். முதன்மந்திரி திரு காமராஜர் அஸ்திவாரக்கல் நாட்டினர். கமர்ஷியல் அச்சகத்தின் அதிபர் திரு எம். ஏ சிதம்பரம் அவர்களையும், விழாவுக்கு வந்திருந்தவர்களையும் காணலாம்.

அந்தச் சமயம் அந்தப் பிள்ளையை அழைக்க வந்தாள் வேலைக்காரி. அவள் இவ்வளவையும் கவனித்து விட்டு, ''நீங்க இல்லாட்டி இன்னிக்குப் பெத்தவளுக்குப் பிள்ளையாக இருந்திருக்க முடியாது. பன்னிரண்டு மணிக்குத்தான் விடுவாங்க. வழக்கமாய்க் கொஞ்சம் முன்னுடி அழைக்க வருவேன். இது என்னடா வென்றால் இன்னிக்கு எனக்கும் முன்னுடியே வந்துட்டுதே. இவ்வளவு நாழி ஏதாவது ஆகியிருந்தால் என்ன செய்வது?'' என்றாள்.

''சரி, சரி. ஜாக்கிரதையாய் இட்டுக்கிட்டுப் போ '' என்று சொல்லி விட்டுத் தம் பீட் இடத்துக்குப் போனார்.

இதெல்லாம் முடியப் பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

நிழல் பெட்டியின் கீழ் அவர் போன போது அங்கே நெருப்புப் பொறி பறக்கும் கண்களுடன் மோட்டார் சைக்கிளில் நின்று கொண்டிருந்தார் ஆறுமாதங்களுக்கு முன்பு புதிதாய் வந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

''உமக்கு எங்கேய்யா ட்யூட்டி?''

''இந்த இடத்தில் டிராபிக் டியூட்டி.''

''பத்து நிமிட நேரமாக இந்த இடத்திலே உம்மைக் காணுமே. ஏன் நாஸ்தா பண்ணப் போயிட்டீரா? இந்த இடத்தை விட்டு நீர் நகரலாமா?''

''இல்லீங்க.''

''உம்மை யெல்லாம் எவனய்யா இங்கே டியூட்டி போட்டது? மக்கடையிலே போய்ச் சுகமாய் உட்கார்ந்திருக்கவா சம்பளம் கொடுக்கிறாங்க?''

''சத்தியமாய் இல்லே எஜமான். இந்த இடத்தை விட்டு என்னிக்குமே நகர்ந்தது இல்லே. சற்று முன்னே அந்தத் தெருவுக்கு எதிரே போகிற சந்துலே குழந்தை மேலே லாரி ஏற இருந்தது. அதனால் அங்கு ஓடிப் போய் அதைத் தடுத்தேன். அதனால்தான் பீட்டில் பத்து நிமிடமாய் இல்லே.''

''யார்கிட்டேய்யா, கதை விடறே? அந்தக் குழந்தை யார்? லாரிக்காரனை சார்ஜ் செய்தீரா? எங்கே அந்த லாரி டிரைவர்?''

''லாரிக்காரன் பேரில் தவறு இல்லாததால் அவனை அனுப்பி விட்டேன். குழந்தை யாரோ தெரியாது. யாரோ வேலைக்காரி வந்து அழைச்சுப் போய்விட்டாள்.''

''யாரை ஏமாத்துகிறீர்? நான் நிழல் என்று சோதனைக்கு வந்தேன். உம்மைக் காணும். ஏன் என்று கேட்டால் போய் சொல்கிறீர், குழந்தையைக் காப்பாற்றப் போனேன் என்று. குழந்தையும் யார் என்று உமக்குத் தெரியாது.''

''நான் சொல்றதிலே அணுவளவுகூடப் பொய் கிடையாது எஜமான். நீங்க வேணுமானால் விசாரிச்சுப் பாருங்க.''

''இந்த இடத்திலே டிராபிக் நெரிசல் ஜாஸ்தி. போதாததற்கு ஸ்கூல் குழந்தைங்க ஏராளமா வந்து போகிற இடம். ரொம்பப் பொறுப்பு உள்ளவர்தான் இங்கே பீட்பார்க்க முடியும். இவ்வளவு குழந்தைகளின் பாதுகாப்பும் இந்தப் பீட் பார்ப்பவர் கையில் தான் இருக்கு. வரவேண்டியது: பத்து நிமிடங்கள் பீட்டில் நிற்க வேண்டியது; பிறகு டீக்கடையில் போய்ப் படுத்துத் தூங்க வேண்டியது. இதற்கா உமக்குச் சம்பளம் கொடுக்கிறது.

''இவ்வளவு குழந்தைகளின் பத்திரமும் உம் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீரா....? உம்ம குழந்தையின் உயிர் மாதிரி தான் இவ்வளவு குழந்தைகளின் உயிரும். இதை என்னிக்காவது நினைத்ததுண்டா? உம் கையில் அவர்கள் உயிரை ஒப்படைத்தது மகா தவறு. உம் பேரில் சார்ஜ் தொடுத்திருக்கிறேன். மூணு மாதம் சஸ்பெண்டு செய்திருக்கிறேன்.''

'படபட'வெனப் பொரிந்துவிட்டுப் 'படபட' என்ற சப்தத்துடன் மோட்டார் சைக்கிளில் ஏறி அவர் போய் விட்டார்.

ஜில்லாய்ச் சமைந்து விட்டார் முந்நூற்று இரண்டு. மூன்று மாதம் சஸ்பெண்டு ஆகி விட்டதே என்று அவர் கவலைப்படவில்லை.

தம் மகனுக்கு உடம்பு சரியில்லாத போது கூடப் பள்ளிக்கு வரும் குழந்தைகளின் காபந்துக்காக டிராபிக் டியூட்டிக்கு ஓடினார்.

ஆனால் அதிகாரியோ, 'உம் குழந்தையின் உயிர் மாதிரித்தானே மற்றக் குழந்தைகளின் உயிரும். அதை எண்ணிப் பார்த்திரா? உம்மை நம்பி இவ்வளவு குழந்தைகள் உயிரை யும் ஒப்படைத்தது தவறு' என்று சொல்லிச் சொல்லம்பு விட்டாரே. அதைத்தான் அவ ரால் பொறுக்க முடியவில்லை.

இதைவிட அவரை வேலையை விட்டு நீக்கி யிருந்தால்கூட அவர் கொஞ்சமும் வருத்தப் பட்டிருக்கமாட்டார்.

'இவ்வளவு குழந்தைகள் உயிரையும் உம் கையில் ஒப்படைத்தது தவறு.'

அச்சொல்லை நினைத்து நினைத்து உருகினார்.

அரை மணி சென்றது.

மறுபடியும் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. அவர் அட்டென்ஷனில் நின்றார்.

சைக்கிளை விட்டு இறங்கி அவர் அருகில் வந்தார் சர்க்கிள். சல்யூட் அடித்தார் முந் நூற்று இரண்டு.

"முந்நூற்று இரண்டு! உம்மை அவசரப் பட்டுக் கண்டபடி திட்டித் தண்டித்து விட் டேன். வீட்டுக்குப் போனதும் வேலைக்காரி சொன்னாள். என் அருமைப் புதல்வன் உயி ரைக் காப்பாற்றியவர் நீர். நான் உம்மைக் கொடுமைப் படுத்தியதற்குப் பிராயச்சித்த மாக வர மாதம் முதல் தேதியிலிருந்து ஏட் டாகப் பிரமோஷன் கொடுக்கிறேன்" என்றார் சர்க்கிள்.

"அதெல்லாம் வேண்டாமுங்க. எனக்கு அதிலே ஆசையும் இல்லை. எஜமான், ஒரே ஒரு காரியம் மட்டும் செய்தால் போதும்."

"என்ன வேண்டும் கேள், முந்நூற்று இரண்டு. என்ன செய்ய வேண்டும் உமக்கு?"

"உங்க மனத்தை நன்றாகத் தொட்டுப் பார்த்து இவ்வளவு குழந்தைகளுடைய பத் திரத்தையும் என்கிட்டே ஒப்படைச்சிருப்பது சரியா தவறா என்று சொல்லுங்க, அதுவே போதும்" என்றார் முந்நூற்று இரண்டு.

பவித்திரமான வேத மந்திரங்களைப் பக்தி சிரத்தையோடு சொல்வதைப் போல் சர்க்கிள் பின்வருமாறு மனம் குளிர்ந்து சொன்னார்:

"இவ்வளவு குழந்தைகள் பாதுகாப்பையும் உம்மிடத்தில் ஒப்படைத்திருப்பது ரொம்ப வும் விசேஷம். இந்தக் குழந்தைகளின் உயிர்கள் எல்லாம் உம் கையில் பத்திரமாக இருக்கு. உம்மைவிட வேறு யாரும் இந்தக் குழந்தைகள் நலனில் அக்கறை காட்ட முடியாது."

திடீரென்று தமக்கு ஜில்லா சூப்பிரண்டு ஆகி விட்டது போல் உணர்ச்சி மேலிட மெய் சிலிர்த்து நின்றார் முந்நூற்று இரண்டு.

நல்ல மருமகள்!

'ஏனம்மா! உங்க மாமியார் வரப் போறாங்களாமே!"

"ஆமாம்!"

"அந்த அம்மாவைப் பார்த்து ஒரு மாமாங்கத்துக்கு மேலே ஆகப்போவுது! தங்கமான குணம் அம்மா, அந்த அம்மா வுக்கு...!"

"சந்தேகமென்ன? அவங்க பேரே பொன்னம்மாளாச்சே!— சரி, சமையற் கார அம்மா இருக்காங்களா? இல்லே, வீட்டுக்குப் போயிட்டாங்களா?"

"போய்ப் பார்த்துக்கினு வரட்டுங் களா...?"

"சமையற்கார அம்மா! உங்களை எசமானியம்மா கூப்பிடறாங்க!"

"என்னவாம் செய்தி?"

"பெரியம்மா வரப் போறாங்க இல்லே? அவங்களுக்குப் பிடிச்ச நல்ல விருந்தா வைக்கிறதுக்காகத்தான் இருக் கும். —இந்த ஏழையையும் கவனிச்சுக் கங்க, அம்மா! மறந்துடாதீங்க!"

"அம்மா! சமையற்கார அம்மா வந்திருக்காங்க, அம்மா!"

"இதைப் பாருங்க, சமையற்கார அம்மா! இந்த லிஸ்டைப் பாருங்க!"


"பிரமாதமாப் போட்டிருக்கீங்களே! எத்தனை கறிகாய்! எத்தனை பட்சணம்! அப்பப்பா! விருந்து ஏக அமர்க்களமாகப் பண்ணணும் போலிருக்கே! யாருக்கு அம்மா இத்தனை பெரிய விருந்து?"

"என் மாமியார் வரப் போகிறது, தெரியுமோ இல்லேயோ உங்களுக்கு?"

"தெரியுமே! மாமியார்கிட்டே மரு மகள்னா உங்களைப் போல் அல்லவா நடந்துக்கணும்! ஏனம்மா! யாரையா வது ஒத்தாசைக்கு அழைச்சிக்கிட்டுமா? என் ஒருத்தியாலே இத்தனையும் செய்ய முடியாது போலிருக்கிறதே! — ஏன் அம்மா! பெரியம்மா வந்தால் கொஞ்ச நாட்களாவது தங்க மாட்டாங்களா? நாளைக்கு ஒன்றாகச் செய்வதென்றால், ஒத் தாசைக்குக் கூட ஆள் தேவையில்லே!"

"நான் சொல்வதைக் கேட்பதற்கு முன்னால் விடுவிடு என்று பேசிக்கொண்டு போறீங்களே! என் மாமியார் இங்கு இருக்கிற வரை இந்த லிஸ்டிலே உள்ள ஒரு பொருளும் செய்யக் கூடாது. செய் தால் நாக்கைத் தீட்டிக் கொண்டு இங் கேயே டேரா போட்டு விடுவாங்க. தப்பித் தவறிச் சமைச்சீங்க, உங்களையே வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்து விடு வேன், ஜாக்கிரதை!"

—குறும்பன்



அத்தியாயம் 15

ஜமாலின் ஜபர்தஸ்து

அச்சுறுத்தி விட்டுப் போக வந்த இடத்தில் தானே அஞ்ச வேண்டியிருக்கும் என்று வடிவேலு சற்றேனும் எதிர் பார்க்க வில்லை. ஜமாலைக் கண்டதும் கொஞ்சம் தைரியம் அடைந்தவளாகத் தென்பட்டாள் சக்குபாய். ''அண்ணாச்சி! நல்ல சமயத்திலே நீங்க வந்தீங்க; இவருக்கு என்ன வேணுமோ, கேளுங்க'' என்றாள்.

''உனக்குத் தெரியாதா என்ன? எமலோகப் பட்டணத்துக்கு டிக்கெட் வாங்கிக்கிட்டுப் போகத்தான் வந்திருக்கிறான்! சக்கு, இப்போ மயான காண்டம் ஒத்திகை நடக்கப் போகுது இங்கே! இவனை மாதிரிக் களவாணிப் பயலுகள் எதனாச்சும் வம்பு பண்ணுவாங்க என்கிறதுக்காகத்தானே இட்டை பெரிய பண்ணையார்கிட்டே யிருந்து இதைக் கேட்டு வாங்கி வைச்சிருக்கேன்.'' ரிவால்வரின் எடையைப் பரிசோதிப்பது போல் அதை இலேசாகத் தூக்கிப் போட்டுப் பிடித்தான் ஜமால்.

துப்பாக்கியைக் கையிலேந்திய படி அவன் மெல்ல முன்னேறிய போது ஒருகணம் திக்கு முக்காடித்தான் போனான் வடிவேலு. ஆனால் அவனைக் காட்டிலும் அதிகமாகப் பீதியில் ஆழ்ந்து விட்டாள் சக்கு. ஜமால் துணையாக வந்து சேர்ந்ததும் அவள் பெற்ற ஓரளவு துணிவும் இப்போது விடை பெற்றுக் கொண்டு பறந்தோடிச் சென்றது. பஞ்சு போன்ற மென்மையான கன்னங்களில் வெண்பனியை ஒத்த குளுமையான கரங்களைப் பதித்துப் பளிங்கினாலானது போன்ற நீண்ட விரல்களால் தன் காதுகளைப் பொத்திக் கொண்டு 'வீல்' என்று அலறினாள் அவள்.

''பயப்படாதே, சக்கு!'' என்று அவளை ஆசுவாசப்படுத்தினான் ஜமால். ''இந்தத் தடியன் ரொம்பவும் அதிகமாக வாலாட்டினால் ஒழிய நிஜமாகவே சுட்டுப்போட மாட்டேன் நான்.''

இந்த வார்த்தைகள் வடிவேலுவுக்குக் கொஞ்சம் தெம்பு அளித்தன. மெல்லத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''கும்பகோணம் வரவேற்பு என்பது சரியாகத்தான் இருக்கிறது. வீட்டுக்குள் நுழைகிறவர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்று முடிவு கட்டித் துப்பாக்கியாலே குறி பார்த்துக்கிட்டே பேசறது தான் இந்த ஊர் வழக்கமோ?'' என்றான்.

''வாரேவா! சிங்கக் குட்டி! வாயிலே விரலை வைச்சாக் கடிக்கத் தெரியாத சாதுப் பிள்ளையா நடிக்கிறதைப் பார்த்தியா, சக்கு? டேய்! உன்னுடைய தில்லுமுல்லுகளையெல்லாம் என்கிட்டே காட்டாதே! நேத்திக்கு டிராமா கொட்

டகை ஓரமா, சுவரோட சுவரா நீ ஒண்டிக்கிட்டிருந்து திருட்டு முழி முழிச்சது எனக்குத் தெரியாதுன்னு நெனைச்சுக்கிட்டிருக்கியா? அவசரம் அவசரமா ஒரு குதிரை வண்டியை வாடகை பேசிக்கிட்டு எங்க பின்னாடியே வந்தியே, அதையும் கவனிச்சேன்! வீட்டை நோட்டம் பார்த்துக்கிட்டுப் போயிட்டு இன்றைக்கு நான் இல்லாத சமயத்திலே அகப்பட்டதைச் சுருட்டிக்கிட்டு ஓடலாம்னுதானே திட்டம் போட்டிருந்தே? ஒழிச்சுக் கட்டிப்பிடறேன் உன்னை!''

'தாட் பூட்'டென்று கைகளை வீசியபடி வடிவேலுவைத் துவம்சம் செய்துவிடுபவனைப் போல் குதித்தான் ஜமால். மேடை நடிப்பை ஞாபகமூட்டுவதாகத்தான் இருந்ததே ஒழிய நம்பும்படியாக இல்லை அவன் செய்கைகள்.

''அண்ணாச்சி! முதல்லே உங்க கையிலே இருக்கிற ஆயுதத்தை அந்த அலமாரியிலே பத்திரமாகப் பூட்டிவிட்டு வாங்க. தப்பித் தவறி வெடிச்சு வைக்கப் போவுதேன்னு எனக்கு வயத்தைக் கலக்குது'' என்றாள் சக்குபாய்.

''அப்படியானால் சரி. இந்தா. இதை நீயே உள்ளே வைச்சுப் பூட்டு.''

ஜமால் துப்பாக்கி பிடித்த கையை நீட்டிக் கொண்டு ஓர் அடி எடுத்து வைப்பதற்குள் சக்கு நான்கு அடிகள் பின்னுக்கு நகர்ந்தாள். ''ஐயையோ! என் கையாலே அதைத் தொடவே மாட்டேன்!''

ஜமால் சிரித்துக் கொண்டே அலமாரியை நோக்கி நடந்தான்.

''டேய்! உன் ஜோக்கர் வேலை எதனாச்சும் காண்பிச்சே, மறுபடியும் துப்பாக்கியை எடுத்துக்கிடுவேன்! மரியாதையா வெளியே போயிடு!''

''நான் வந்த காரியம் முடிந்ததும் இங்கே ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்க மாட்டேன்; அது இருக்கிற வரையில் இங்கிருந்து ஓர் அங்குலம்கூட அசையவும் மாட்டேன்!'' அருகிலிருந்த மேஜைமீது தன் உடற்சுமையை இறக்கினான் வடிவேலு. அவன் அருகே, சிவப்பும் வெளுப்புமான மெல்லிய 'டிரேஸிங்' காகிதங்களால் சுற்றிக் கொண்டு வரப்பட்டிருந்த வெள்ளிக் கூஜா புது மெருகு குன்றாமல் காட்சி தந்தது. சக்கு அதைப் பிரித்துப் பார்த்து அதன் பளபளப்பில் தன் முகம் பிரதிபலிப்பதை ரசித்துக் கொண்டிருக்கையில்தான் வடிவேலு குறுக்கிட்டிருக்க வேண்டும். நடு விரலையும் கட்டை விரலையும் சேர்த்துச் சுண்டினான் வடிவேலு. 'டிங் டிங்' என்று வெள்ளி நாதம் எழுப்பினான். அதே நேரத்தில் தன் எதிரே இருந்த இருவரையும் புருவங்களை உயர்த்தி நோக்கினான். ''எங்கள் வீட்டுப் பொருளை நான் திரும்பி எடுத்துப் போனால் அது திருட்டாகுமா என்ன?''

திடுக்கிட்டவர்களாகச் சக்குவும் ஜமாலும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''டேய்! வந்த விஷயத்தைச் சட்டுன்னு சொல்லிட்டுப் பட்டுன்னு கிளம்பிடு. அநாவசியமா இங்கே தகராறு செய்துக்கிட்டு இருக்காதே!''

கால் மேல் கால் போட்டு நிதானமாக, ''நான் என் அத்தானைப் பார்க்க வந்தேன்'' என்றான் வடிவேலு.

''கேட்டியா சக்கு? இவன் அத்தானை நீ எங்கேயாச்சும் ஒளிச்சு வைச்சிருக்கியா என்ன?''

''இல்லையே?'' என்றாள் சக்கு, ஏதொன்றும் அறியாதவள் போல்



கி. ராஜேந்திரன்

முகத்தை வைத்துக் கொண்டு. ''ஒரு வேளை...?'' என்றவள், ரோஜா மொட்டுப் போல் குவிந்த அதரங்களில் விரலைப் பதித்து ஒரு கணம் யோசித்தாள். பின்னர், ஏதோ ஞாபகம் வந்தவளாகப் பாவனை செய்து, இடையில் இழுத்துச் செருகி யிருந்த முந்தானையை உருவி அவிழ்த்து உதறினாள். அடுத்துத் தன் ஒட்டிய வயிற்றை மேலும் சற்று எக்கி முன்புறம் கொசுவங்கள் மடிப்பு மடிப்பாய் விழுந்த இடத்தில் இரு கட்டை விரல்களையும் செருகிப் புடவையைப் பற்றிஅலைத்துப் படபடத்தாள். ''இடுப்பிலே யிருந்து நழுவிக் கீழே எங்கேயாச்சும் விழுந்து கிடக்கப் போகிறாரு; நல்லாத் தேடிப் பார்த்துக்கிடுங்க!''

அவ்விருவரும் 'கொால்' லென்று நகைக்க வடிவேலுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''தேடிப் பார்க்கிறதாகத்தான் உத்தேசம்'' என்றான் அவன் உத்வேகத்தோடு.

ஆத்திரத்துடன் அறையில் இருந்த அத்தனை சாமான்களையும் தாறுமாறாகக் கலைத்துப் போட்டு அத்தானைத் தேடத் தொடங்கினான் அவன். மேஜை டிராயர்களை வெளியே உருவிக் கவிழ்த்தான்; நாற்காலிகளை உருட்டித் தள்ளினான்; திரைச் சீலைகளைக் கிழித்து எறிந்தான். அனுமானாக மாறி அசோக வனமாக அந்த வீட்டைக் கருதி அடுத்த அறைக்குள்ளும் புகுந்து சென்று அட்டகாசம் செய்தான். மெத்தைகளையும் தலையணைகளையும் உதைத்துத் தள்ளினான்; துணி மணிகளை வாரி இறைத்தான்; சக்குபாயின் அலங்காரப் பொருள்களை யெல்லாம் கூட அலசி ஆராய்ந்தான்.

எதிர்ப்பைக் காட்டாது மௌனமாக அவன் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர் சக்குவும் ஜமாலும். தன் யுக்தி பலித்து விட்டது என்று எண்ணி அகமகிழ்ந்தான் வடிவேலு. 'நான் செய்யும் கலாட்டாவைக் கண்டு நடுங்கி ஒடுங்கி விட்டார்களா இவர்கள்?' இது வடிவேலுவுக்கு உற்சாகத்தைத் தந்தது. அவனுடைய ஆர்ப்பாட்டங்கள் அதிகமாயின. கடைசியில், எங்குமே அவர்கள் அத்தானைப் பதுக்கி வைத்துவிட வில்லை என்று திருப்தி அடைந்து திரும்பினான்.

தேடிக் களைத்துப் போனவனாகச் சக்குவின் எதிரே வந்து நின்றான் அவன். பெருமூச்சை ஊதி வெளிப்படுத்திவிட்டு அவள் முகத்தை அனல் கக்கும் விழிகளால் சுட்டெரித்தபடியே, ''அத்தான் சிங்காரம் இப்போது இங்கே இல்லை என்பது வாஸ்தவம்தான்; ஆனால் இன்னைக்கு ராத்திரி பத்து மணிக்கு மேல் அவர் இங்கே வரப் போகிறார். அவரிடம் உன் சாமர்த்தியத்தைக் காட்டினாயோ உன் கதி அதோகதிதான். என் தங்கைக்குத் துரோகம் நினைச்சு இன்னொருத்தியோடே அவர் சல்லாபிக்கிறதைப் பொறுக்கவே மாட்டேன். அதற்குக் காரணமாக இருந்தவளின் கழுத்தை முறித்து.....'' என்று இழுத்தான் வடிவேலு.

நன்கு விரிந்த பத்து விரல்கள் அவளுடைய கண்டத்தை நெருங்கிச் சென்றன. ''வெல்லப் பாகை உருட்டிப் பிடிச்சு ஆண்டவன் படைச்ச தொண்டையில்லையா, இது?'' முதல் நாள் சிங்காரம் கூறியதை நினைவூட்டிச் சீறினான் வடிவேலு. அதற்கு மேல் சக்குபாயினால் தாங்கவே முடியவில்லை. கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள்.

இதற்குள் வடிவேலுவின் இடுப்பை ஏதோ உறுத்தவே அவன் நின்று குனிந்தான். அலமாரியை அடைக்கலமடைந்திருந்த துப்பாக்கி மீண்டும் ஜமாலின் கரத்தில் ஏறிக் கொண்டிருந்தது.

''டேய்! தங்கச்சிக்குப் பரிஞ்சுக்கிட்டு வருகிறவன் உலகத்திலே நீ ஒருத்தன்தான் என்று மனசிலே எண்ணிக்கிட்டிருக்கியா? சக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவதைக் காணச் சகிக்க மாட்டான் இந்த ஜமால், புரியுதா?''

தலைநிமிர்ந்தாள் சக்குபாய். ''ஐயோ, அண்ணாச்சி! வேண்டாம். எக்கச்சக்கமாக வெடிச்சு வைக்கப்போகுது!'' இரு கைகளையும் தன் எதிரே நீட்டிக் கலகல வென்று கண்ணாடி வளையல்கள் ஒலி எழுப்ப அசைத்து மன்றாடினாள் அவள். நடைபெறப் போகும் பயங்கரச் சம்பவத்தைப் பார்க்கப் பிடிக்காமல் அவள் இமைகள் கண்களை அழுத்தி மூடியிருந்தன, பற்கள் இறுகியிருந்தன, தோள்கள் உயர்ந்திருந்தன.

''டேய்! சக்கு பயப்படுதேன்னுதான் தயங்கறேன்; இல்லையானால் இதற்குள் என் கையாலே செத்து விழுந்திருக்க வேண்டியவன் நீ!''

''கொன்று போட்டால் அப்புறம் போலீஸ்காரங்க கை பூப்பறிச்சுக்கிட்டிருக்குமா? உன்னையும் உனக்கு உடந்தையாக இருந்ததாக இவளையும் கைது செய்து கொண்டு போய்த் தூக்கிலே போட எத்தனை நாளாகும்?''

''பொடிப் பயலே! என்னை என்னன்னு நெனச்சுக்கிட்டு மிரட்டறே நீ? இந்த ஜமால் பாட்சா பெயரைக் கேட்டாலே சிங்கப்பூர் டவுன் கிடுகிடுத்துப் போகும், தெரியுமா? போலீஸ் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டுவேன்!

உன்னைக் கொன்று குழி தோண்டிப் புதைச்சுட்டால் அப்புறம் வானத்திலே யிருந்து அந்தச் சந்திரமதியே இறங்கி வந்து புலம்பினாலும் இந்த லோகிதாசன் உயிர் பிழைக்க மாட்டான், உஷார்!'' துப்பாக்கியைப் பற்களால் கவ்விக் கொண்டு முழங்கால்களை மடக்கிப் பஸ்கி எடுத்துத் தொடைகளைத் தட்டினான் ஜமால்.

''போடுடா, இன்னும் நாலு தோப்புக்கரணம்!'' என்றான் வடிவேலு. ஜமாலுடைய ஜபர்தஸ்தெல்லாம் பேச்சளவில்தான் என்பது இதற்குள் அவனுக்கு நன்கு புலனாகியிருந்தது. நான்கு விரல்களை மடக்கி, கட்டை விரலை மட்டிலும் நெட்டுக்குத்தாக உயர்த்தி அசைத்துக் காட்டினான். ''அப்பனே! சிங்கப்பூர் ரௌடி வேலையெல்லாம் இங்கே ஒன்றும் செல்லாது. புறப்படுவதற்கு முன்னால், நான் எங்கே போகிறேன், எதற்காகப் போகிறேன் என்பதையெல்லாம் விவரமாக எழுதிப் போலீஸ் ஸ்டேஷனிலே கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். சாயந்திரத்துக்குள்ளே நான் அங்கே திரும்பிப் போய் ஆஜராக வில்லையானால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னைத் தேடிக்கிட்டு இங்கே வந்து விடுவார். அவருக்குப் பதில் சொல்லியாகணும் நீ!''

இதைக் கேட்டதும் அசந்தே போய் விட்டான் ஜமால். சப்த நாடிகளும் ஒடுங்கியவனாக மௌனமானான். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு வடிவேலுவை அணுகி, ''என்ன பிரதர்!'' என்று மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு இழைய ஆரம்பித்தான். ''ஆமாம், இப்போ எதுக்காக நாம்ப சண்டை பிடிச்சுக்கிட்டிருக்கோம்? உட்காரு 'பிரதர்!' சக்கு! இவரு வந்து எவ்வளவு நேரமாவுது? ஒரு சாய் கொடுக்கலே நீ! கொண்டா, ஜல்தி, ஜல்தி!''

''சாயும் வேணும். காப்பியும் வேணும். சொன்னதைக் கேட்டு நடந்திங்கன்னா போதும். என் தங்கச்சி கண்கலங்குகிற மாதிரி என் அத்தானுக்குக் கண்ணி வைச்சீங்கன்னா, தொலைச்சுப் போடுவேன் தொலைச்சு! இரண்டாவது, நான் இங்கே வந்து போனதுபற்றி அவரிடம் மூச்சு விடாதீங்க! நான் எதுக்கும் துணிஞ்சவன்; ஜாக்கிரதை!''

உள்ளங்கைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் எதையோ தட்டி உதறுவது போல் கரங்களைச் சேர்த்துக் கொட்டி விட்டு வாசல் பக்கம் நடந்தான் வடிவேலு.

அத்தியாயம் 16

நாகம் நெளிந்தது

அன்றிரவு அந்தத் தெருவில் சக்குபாயின் வீட்டுக்கு எதிர்ப்புறத்தில் நின்று கொட்டுக் கொட்டென்று விழித்துக் கண்காணித்தான் வடிவேலு. பத்து மணி சுமாருக்கு நாடகம் முடிந்து சக்குபாயும் ஜமாலும் முதலில் வந்திறங்கினார்கள். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு சிங்காரமும் அங்கே ஒரு ஜட்காவில் வந்து சேர்ந்தார். வண்டியை அனுப்பி விட்டு வாசல்படி ஏறினார். கதவு திறந்து அவர் அதன் வழியே பிரவேசித்ததும் நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக்கொள்ளப் பூனை போல் நடந்து வீட்டின் தாழ்வாரத்தை அணுகினான் வடிவேலு. ஓர் ஓரமாய் ஒதுங்கி மறைந்து நின்று உன்னிப்பாய்க் காது கொடுத்துக் கேட்டான். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. உள்ளுக்குள்ளே நடக்கும் சம்பாஷணைகள் எதுவும் அவன் செவிகளுக்கு எட்டவில்லை. ஐந்து யுகங்களென அவனுக்குத் தோன்றிய ஐந்து நிமிஷங்களுக்குள்ளாகவே வாசல் கதவு மீண்டும் திறந்துகொண்டது.



''பாதி நாடகம் நடந்துக்கிட்டிருக்கிற போதே தங்கச்சி முனக ஆரம்பிச்சுடுத்து. தலைவலியைத் தாங்க முடியலே அதுக்கு, பாவம்! எப்படியோ கடைசி வரைக்கும்



ஒப்பேத்தி இன்னேக்கு மானத்தைக் காப் பாத்திட்டா. அதுக்காகத்தான் சொல் றேன். ஒரு நடை டாக்டரை அழைச் சுக்கிட்டு வந்து காட்டிப் புட்டீங்கன்னு நல்லது.''

''ஆகட்டும்'' என்று ஜமாலுக்குப் பதிலளித்தார் சிங்காரம். ''அகாலமா இருக்கு பாருங்க. அதனுல்தான் யோசிக் கறேன், கொஞ்சம். எதுக்கும் பிரயத் தனப்படாமல் விட்டுவிட மாட்டேன். வரட்டுமா?''

அவர் வீதியில் இறங்கிப் போகையி லேயே கூடத்தில் சலங்கைச் சத்தம் கேட் டது. ''தலை மறைஞ்சுடுத்தா அண் ணுச்சி?'' என்று கேட்டாள் சக்குபாய்.

''உம், உம். 'என்னே என்ன இவங்க வீட்டுச் சோக்கரான்னு நெனச்சுக்கிட் டிருக்காங்களா' அப்படீன்னு மூணு மூணுத்தபடியேதான் நடந்துபோய்க்கிட் டிருப்பாரு! தங்கச்சி, நமக்கு அதிர்ஷ்ட மில்லே. உன் காலடியிலே விழுந்து கிடக்க வேண்டிய மனுஷன். தப்பிச்சுக் கிட்டுத் தனிக்காட்டு ராஜா போலே போகிறுன் பாரு! எல்லாம் அந்த மட்டிப் பயல் மவன் செய்த வேலே! ஒரு நாளேக் கில்லேன்னு ஒரு நாள் அந்த வடிவேலு வின் தோலே உறிச்சு எலும்புகளேப் பொடி பண்ணி...'' ஜமாலுடைய கண்கள் விளக்கொளி பட்டதால் ஜொலித்தன. வடிவேலுவின் தேகம் இலேசாக வெடவெடத்தது. ' ஆஹா! அதென்ன, பளபளப்பது? அவன் கண்கள்தாஞ, இல்லே, அவன் விரல் களில் பற்றியிருக்கும் வைரமா?''

''இதைத்தான் தட்டிப் பறிக்க முடிஞ் சுது தேனூர் மிராசுதாரிடமிருந்து.'' இப்படிக் கூறியபடியே ஜமால் தன் மார் பில் எதையோ தேய்த்து அதன் மீது வெளிச்சம் படுகிற மாதிரியாக உயர்த் திப் பிடித்து நோக்கினுன். வைரக்கல் 'டால்' வீசியது.

சட்டென்று அவன் கரம் தாழ்ந்தது. ''சக்கு! ஒரு யோசனே தோணுது; இப் படிச் செய்தால் என்ன?'' என்று கேட்ட வாறே உள்ளே போய்க் கதவைத் தாளிட்டான்.

அத்தான் ஜாகைக்குத் திரும்பு வதைக் கண்டதால் நிம்மதி அடைந் திருந்த வடிவேலுவின் நெற்றியில் மீண் டும் சிந்தனேக் கோடுகள் படர்ந்தன. தான் தங்கியிருந்த 'லாட்ஜை'அடைந்து அறையில் கட்டிலில் விழுந்தான். தூக்கம் பிடிக்க அவனுக்கு நீண்ட பொழுதாயிற்று.


மறுநாள் சக்குபாயை இன்னெரு தடவை சந்தித்து எச்சரித்து விட்டுப் போக வேண்டும் என்று அவனுக்குப் பட்டது. ''அவசியம்தாஞ?'' என்ற கேள்வி உள்ளத்தின் ஒரு மூலேயில் பிறக் கத்தான் செய்தது. அதிகமாக உள் மனத்துடன் தர்க்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லே வடிவேலு. 'கண் டிப்பாகப் போயாக வேண்டும்; ரொம்ப முக்கியமான காரியம்' என்று அடித்துக் கூறித் தன்னேத் தானே சமாதானப் படுத்திக் கொண்டான்.

அவன் அங்கு போய்ச் சேர்ந்த சமயம் வாசலில் ஜட்கா ஒன்று நின்று கொண் டிருந்தது. கன்னங்கரியதும் வாட்ட சாட்டமானதுமான ஒரு குதிரை, புதி தாக வர்ணம் பூசப் பெற்றுப் பளபளத் துக் கொண்டிருந்த அந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்தது. பார்த்த மாத்தி ரத்திலேயே அது சக்குபாயுடையதுதான் என்பது தெரிந்து போயிற்று. 'எங்கே னும் வெளியே கிளம்பிக் கொண்டிருக் கிறர்களோ அவர்கள்?'

தட்டு நிறையத் தேங்காய் வாழைப் பழம், புஷ்பம் இவற்றைக் கையிலே ஏந்திக் கொண்டு வனப்புமிக்க தன் உடலின் வளேவு நெளிவுகள் நன்முக விளங்கிச் சோபிக்கும்வண்ணம் அசைந்து அசைந்து முன்னேறி வந்தாள் சக்கு. குதிரையின் கடிவாளத்தை ஜமால் இழுத்துப் பிடித்திருக்கிறுன் என்பதைக் கவனித்து விட்டு, பின்புறமாக வண்டி யில் ஏறி அமர்ந்தாள். ''சக்கு! உன் பூஜையை யெல்லாம் சட்டுப்புட்டுன்னு சுருக்கமா முடிச்சுக்கிட்டு வந்துடு; ரொம்ப நேரம் காத்திருக்க மாட்டேன் நான்'' என்முன் ஜமால். முன் பக்கம் எம்பி உட்கார்ந்து லகானேச் சொடுக்கப் போனவன் மனம் மாறியவனுகத் தயங்கினுன். ஜேபியைத் துழாவி ஒரு சுருட்டை எடுத்து வாயில் வைத்துக் கொண்டான். அந்த ஒரு சில வினுடிகள் அவன் தாமதித்தது ஆபத்தாக முடிந் தது. எட்ட நின்று அவர்களுடைய செய்கைகளிலேயே கண்ணுக இருந்த வடிவேலுவின் சிரத்தில் ஒரு மின்னல் பளிச்சிட்டது. அவ்வளவுதான், என்ன செய்கிறேம், எதற்காகச் செய்கிறேம் என்றெல்லாம் யோசித்துக் கொண் டிருக்கவில்லே அவன். தன் சக்தியை யெல்லாம் ஒன்று திரட்டிப் பாய்ந் தோடி ஜமால் மீது தன் தேகத்தை முழு வேகத்தோடு மோத விட்டான்.

ஜமாலே ஒரு பூகம்பம் தாக்கியது. அது பூகம்பமா பூதமா அல்லது பூவுல கில் நடமாடும் ஒரு மனிதன் தாஞ என்று நிர்ணயிப்பதற்குள் அவன் தெரு வில் 'தொப்'பென்று விழுந்து புரண்டு கொண்டிருந்தான்.





New
COLGATE
BABY
POWDER


Vicco
GULKAND
Vicco
GULKAND



திரு ஏ. என். சட்டநாதன் அவர்களின் புதல்வி சௌ ரமணிக்கும் திரு நடராஜனுக்கும் மே மாதம் ஆறுந் தேதி அதிவிமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.



அடியக்க மங்கலம் 'கல்கி' ஏஜண்ட் ரத்தினம் செட்டியார் அவர்களின் புதல்வி சௌ சாந்திக்கும் திரு சிவ ஒளிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது.

ரப்பர் பந்துபோலத் துள்ளிக் கோச்சுப் பெட்டி மீது ஏறி நின்றான் வடிவேலு. லகானைச் சக்ராயுதம்போல் 'வி..ர்..ர்' ரென்று சுழற்றிக் குதிரைக்குச் 'சுளீர்' என்று ஓர் அடி வைத்தான். ரோஷம் மிக்க அந்தப் பிராணி நாலு கால் பாய்ச்சலில் 'குபுக்'கென்று கிளம்பியது. அந்த வேகத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் தடுமாறிய போதிலும் குப்புற அடித்துக் கொண்டு விழுந்து விடாமல் கெட்டிக்காரத்தனமாய்ச் சமாளித்தான் வடிவேலு. அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் திகைப்பிலிருந்து மீளுவதற்கு முன்பாகத் தெரு முனையை அடைந்து விட்டது வண்டி. அதனுள்ளேயிருந்து, ''ஐயோ, அம்மா!'' என்று சக்குபாய் அலறுவதைக் கேட்டதும் தான் விழித்துக் கொண்டவர்களாக எல்லாருமே, ''விடாதே! பிடி!'' என்று கூச்சல் போட்டும் கட்டிக் காட்டியும் கைகளை உதறியும் இருந்த இடத்திலிருந்து இம்மியளவு கூட அசைந்து கொடுக்காமல் மற்றவர்களை அதிகாரம் பண்ணினார்கள்.


வண்டியின் ஓட்டத்தை இன்னும் சற்று அதிகப்படுத்தி விட்டு நின்ற வண்ணமே குனிந்து சக்குபாயை நோக்கினான் வடிவேலு. ''இன்னொரு தரம் வாயைத் திறந்து சத்தம் போட்டாயோ, ஒரே தள்ளு!'' என்று பயமுறுத்தினான்.

மலர மலர அவனைப் பார்த்து விழித்தாள் சக்குபாய். ''நீங்களா?'' என்றாள் அதிசயத்துடன். அவனுக்குள்ள கோபத்தையும் ஜட்கா எவ்வளவு விரைவாகச் செல்கிறது என்பதையும் அளந்து வைத்துக் கொண்டவளுக்கு அவனால் கீழே உருட்டித் தள்ளப் பட்டால் தப்பிப் பிழைப்பதென்பதே சந்தேகம்தான் என்பது தெளிவாயிற்று. 'பெண் பிள்ளையாயிற்றே என்று கூடக் கருணை காட்ட மாட்டானே இந்த முரடன்!'


''நான் சமர்த்துக் குழந்தை போலச் சொன்னபடி கேட்கிறேன். கொஞ்சம் மெல்லவே போங்கள்.''

ஊரைத் தாண்டி ஊரின் எல்லையைத் தாண்டித் தஞ்சை நெடுஞ்சாலையில் பறந்தது குதிரை. இரண்டு பக்கங்களிலும் நெல் வயல்கள் நன்றாகக் கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராக இருந்தன. காற்றிலே அவை அசைந்தாடிய போது பொன்னை உருக்கி வார்த்துத் தயாரித்த செயற்கைக் கடலாகக் காட்சி தந்தன. சுற்று வட்டாரத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஆள் நடமாட்டம் இல்லை என்று நிச்சயித்துக் கொண்டு வண்டியை நிறுத்தினான் வடிவேலு. ஏகாந்தமான அந்த இடத்தில் கீழே குதித்துப் பின்புறமாக வந்து, ''இறங்கு!'' என்று உத்தரவு போட்டான். பதற்றம் அடைந்தவளாகப் பரபரப்புடன் அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாள் சக்கு. மணிக்கட்டு வலியினால் தெறிக்கிற மாதிரியாக அவன் அவள் கரத்தைப் பற்றிய போது கண்ணாடி வளையல்கள் இரண்டு நொறுங்கிச் சிதறின. அதையெல்லாம் சற்றேனும் பொருட்படுத்தாமல் தரதரவென்று அவளை இழுத்துக் கொண்டு விரைந்தான் வடிவேலு. ஆள் உயரத்துக்குச் செழித்து வளர்ந்திருந்த நெற்புதர்கள் தடை செய்தன. உடலில் உராய்ந்து குத்திக் கீறின. லட்சியம் செய்யாமல் அவற்றை விலக்கித் துவைத்துக்கொண்டு முன்னேறினான். பின்னால் தட்டுத் தடுமாறி நடந்து வந்த சக்குபாயின் கெஞ்சல்களுக்குத் தன் காதுகளைச் செவிடாக்கிக் கொண்டும் எவ்வளவுதான் அவள் முயன்ற போதிலும் தன் பிடியைத் தளர்த்தாமலும் வயலின் மையத்தை அடைந்தான்.

அவனுடைய கரத்தின் ஒரு நொடிப்பிலே அவள் அவனுக்கு முன்னால் வந்து



புதுதில்லி இண்டஸ்டிரியல் பைனன்ஸ் கார்ப்பொரேஷனைச் சேர்ந்த திரு ராமநாதனுக்கும் சௌபாக்கியவதி வத்ஸலாவுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.



ஸ்ரீரங்கம் திரு எம். சுப்பையா செட்டியார் அவர்களின் புதல்வர் திரு கதிர்வேலுக்கும் சௌ சுசிலாவுக்கும் பழனியில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

விழுந்தாள். குறுவை விளைச்சல் மஞ்சமாக அமைந்து அவள் தேகத்தைத் தாங்கிக் கொண்டது.

''இரண்டு பேருமா சேர்ந்துக்கிட்டுப் புதிசு புதிசா சதித் திட்டங்களா தயாரிக்கிறீங்க? இங்கே உன் மென்னியை முறிச்சுப் போட்டு விட்டு என் பாட்டுக்குப் போனேனானாலும் ஒரு பயலும் ஏன் என்று கேட்கப் போகிறதில்லை! பாய்ச்சல் காட்டினானே, ஜமால்பாட்சா! தொண்டை கிழியக் கத்திக் கூப்பிட்டாலும் அவன் இங்கே துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு வரமாட்டான் உன்னைக் காப்பாத்த!''

ஒருக்களித்து விழுந்து கிடந்த சக்கு, நெற்கதிர்களைப் போர்த்திக் கொண்டிருந்த புடவைத் தலைப்பின் ஓர் ஓரத்தைப் பற்றி விடுவித்து, இடது தோளுக்கு மேலாக எடுத்துச் சென்று சரி செய்து கொண்டு நிமிர்ந்தாள். இரு கரங்களும் பின்னால் நீண்டு உடலின் மேல் பாகத்தைத் தாங்கச் சாய்ந்துஉட்கார்ந்தவாறே அவள் வடிவேலுவை அண்ணாந்து பார்த்தாள். செவ்விய இதழ்கள் புன்னகையில் நீண்டன; மென் சிரிப்பிலே விரிந்தன; கலகலவென்று நகைத்தபோது மலர்ந்தன. பின்னர் ,ஆகாயத்தை நோக்கியபடி அடுத்தடுத்துத் தேகம் குலுங்கிப் பொங்கி வழிந்து தணிய அவள் சிரிப்பு அலைகளை எழுப்பினாள்.

வடிவேலுவுக்கோ எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. 'சாவைக் கண்டு சிரிக்கும் இவள் பெண்தானா அல்லது பேயா?...'

''நிறுத்து!'' என்று அறைவது போல் அதிகாரம் செய்தான் அவன். 'டுடுப்' பென்று, மோகிக்கச் செய்யும் அந்தச் சிரிப்பொலி அடங்கி ஓய்ந்தது. ''வேறு ஒன்றுமில்லை! அந்த வெத்து வேட்டு டிராமா துப்பாக்கிக்காகப் பயந்து என்னை இவ்வளவு தூரம் அலைக்கழித்து விட்டீர்களே என்று நினைத்துக் கொண்டேன். சிரிப்புத் தாங்கவில்லை!''

''ஆஹா!'' என்று பற்களை நறநறவென்று கடித்தான் வடிவேலு. ''நான் அப்போதே நினைத்தேன்! உங்களுடைய சேஷ்டைகளெல்லாம் ஏதோ நாடக பாணியில் இருந்ததே ஒழிய நிஜமாகத் தோன்றவில்லை. ஜமாலும் அளவுக்கு அதிகமாகவே அமர்க்களப் படுத்தினான். நீயும் பயப்படுவது போலப் பாசாங்கு செய்தாய்! ஆனால் உங்களை விட நான் கெட்டிக்காரன், தெரியுமா? ஜமால் வாலைச் சுருட்டிக் கொண்டு இருக்க வேண்டுமென்பதற்காகப் போலீஸ் ஸ்டேஷனில் கடிதாக எழுதிக் கொடுத்து விட்டு வந்திருப்பதாய்ச் சமயோசிதமாக அளந்து விட்டேன் பார்? காற்றுப் போன பலூனைப் போல் அவன் பரிதாபமாக விழித்தானே அப்போது!''

இதைக் கேட்டதும், சக்குவுக்குச் சிரிப்பு மீண்டும் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''நேற்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, நன்றாகப் பாடம் கற்றுக் கொண்டிருக்கிறார் அண்ணாச்சி, உங்களிடம். இன்று சேறும் சகதியுமாக அவர் நடுத்தெருவில் எழுந்து நின்ற அலங்கோலத்தைப் பார்த்திருக்க வேண்டுமே நீங்கள்!''

இப்படிச் சொல்லி விட்டு, சக்குபாய் முழங்கால்களை மடக்கி இரு கைகளாலும் அதைச் சேர்த்து அணைத்தபோது உண்டாகிய வட்டத்துக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு சிரிப்பைக் கட்டுப் படுத்த முடியாமல் தவித்தாள். வடிவேலுவும் அவளோடு கூடச் சேர்ந்து கொண்டான். வாய் விட்டு நகைத்தான்.

ஒரு வகையாக அது ஓய்ந்ததும், வந்த காரியத்தை மறந்து இவள் சிரிப்பிலே மயங்கி மகிழ்ந்து கொண்டிருக்கிறோமே என்ற எண்ணம் சம்மட்டி

போல் தாக்கியது வடிவேலுவினுடைய உள்ளத்தை.

''எழுந்திரு!'' என்று இரைந்தான் அவன். அவள் தலை உயராதுபோகவே, வெறி கொண்டவனாக அவள் தோள்களை அழுத்திப் பற்றித் தூக்கினான். தன்னை விடுவித்துக் கொள்ளும் முயற்சியில் அவள் கரங்கள் அவன் மார்பில் பதிந்து ஆவேசத்தோடு உந்தித் தள்ளின. அப்போதுதான் அவள் நீண்ட விரல்களுள் ஒன்றுக்கு அணி செய்த மோதிரம் அவன் கண்களில் தட்டுப் பட்டது. அதே தருணத்தில் சட்டென்று விழித்துக் கொண்டவளாக அதை அவன் கவனித்து விடுவதற்கு முன்னால் மறைக்க முயன்றாள் அவள். அவசரம் அவசரமாக மோதிரத்தின் முகம் உட்புறமாக இருக்குமாறு திருப்பி வைத்துக் கரத்தை முஷ்டியாக்கிக் கொண்டாள்.

முதல் நாள் ஜமாலுடைய விரல்களுக்கிடையில் சிக்கி ஒளி சிந்திய வைரம் வடிவேலுவின் ஞாபகத்துக்கு வந்தது.

''எங்கே, அந்த மோதிரத்தைக் காட்டு!'' என்றான் அவன்.

கரத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டதுடன் லாகவமாகக் குனிந்து அப்பால் நகர்ந்தாள் அவள்.

''அது என் அத்தானுடைய மோதிரம் தானே?''

''இல்லை.''

''அப்படியானால் ஏன் ஒளிக்கிறாய்?''

''அது என் இஷ்டம்.''

''நீ பொய் சொல்கிறாய். விரல்களைப் பிரி, பார்க்கலாம்!''

புறங்கை மேல் நோக்கி இருக்குமாறு கரத்தை நீட்டி விரித்தாள் அவள். மோதிரத்தின் முகம் பூமியைப் பார்க்க இருந்தது. அதன் தங்க வளையத்தை மட்டிலுமே காண முடிந்த அந்த நிலையில் மோதிரத்தை அடையாளம் கண்டு கொள்வது எப்படி? சக்குபாயின் கரம் பாம்பு நெளிவது போல் அவனை நோக்கி மெல்ல ஊர்ந்தது. ''இந்தாருங்கள், நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!''


அவள் விரல்களைப் பற்றப் போனான் வடிவேலு. கண்ணிமைக்கும் நேரத்தில் அவற்றை மடக்கிக் கொண்டதுடன் கரத்தையும் பின்னுக்கு இழுத்துக்கொண்டாள் அவள். வெள்ளி மணியின் நாதம் போலச் சிரிப்புக் கொப்பளித்தது அவள் கண்டத்திலிருந்து. சிவப்புக் கனகாம்பரத்தையும் மல்லிகைப் பூக்களையும் சேர்த்துத் தொடுத்தது போன்ற அவள் வாய், மணம் பரப்புவதை வடிவேலு உணர்ந்தான். தந்தத்தால் கடைந்தெடுத்து வெண்ணெயின் மென்மை ஊட்டி உருவாக்கியதாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகிக்க இடம் தந்த அவள் கை, வடிவேலுவின் பிடிக்கு அகப்படாமல் வழுக்கி மின்னல் வேகத்தில் பின்னுக்குப் பாய்ந்து முதுகுப் புறத்தில் முடங்கியது. இன்னொரு முறையும் அந்தப் பரிகாசச் சிரிப்பு ஒலித்தது!

ரத்தம் கொதித்தது வடிவேலுவுக்கு. 'என்னிடம் விளையாடுகிறாளா இவள்?' கடுங்கோபத்துடன் அவளைப் பம்பரமாகச் சுழல வைத்துத் திருப்பிக் கரத்தைப் பற்றி விரல்களை நெம்பித் திறக்கப் போனான். சக்கு அதற்கு இடம் தராமல் சண்டி செய்தாள். விட்டுக் கொடுக்கக் கூடாதென்பதற்காகப் பிடிவாதமாகப் போராடியவள் தன் கை முறுக்கிக் கொள்ள, அப்போது ஏற்பட்ட வேதனையையும் பொறுத்துக் கொண்டு திமிறித் திரும்புகையில் வடிவேலுவின் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்துச் சிறைப் பிடித்தன.

அவள் முகம் உயர்ந்தது; இமைகள் தாழ்ந்தன. நெஞ்சு விம்மியது; இடை நலிந்தது.

பெண்மையின் நெருக்கத்தை முதன் முறையாக உணர்ந்தான் வடிவேலு. இருள் அவனைக் கவ்வியது. (தொடரும்)


அவளுக்கு நீபா மிட்டாய்கள் வழங்குங்கள்
அவைகள் ருசி மிக்கவை


பவழத்தீவு
கதை: வாண்டு மாமா
சித்திரம்: ரமணி.. 22
சூலபாணியினுடைய வீரர்-களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு ஜம்பு கந்தனைக் கானகத்துக்குக் கொண்டு வந்து விடுகிறது.....
ஜம்பு! நாம் தப்பிப் பய-னில்லை. புதையல் குறிப்புப் படம் பறிபோய் விட்டது. இனி ஆனந்தனிடம் எந்த முகத்தோடு போவேன்?
இழந்த படத்தை எப்படியும் அடைந்து விடுவதென்று-கந்தன் கானகத்திலே அலைந்து கொண்டிருக்கும் போது.....
அதோ சூலபாணி-யின் பாசறை எப்படியும் அந்தக் கிழவனும் அவ-னும் அந்தப் படத்துடன் இங்கு வரு வார்கள்.
கந்தன் சும்மா இருக்க வில்லை. ஒருநாள்-இரவு பிரதான கூடா ரத்தின் மீது ஏறிக்-கத்தியால் கிழித்து...
கந்தனின் ஊகமும் பொய்க்க வில்லை... கூடாரத்தினுள் சூல-பாணி....
அந்தக் குறிப்புக் காட்டும் செய்தி இது தான். அதையே பெரி தாக வரைந்து காட்டியிருக்கி றேன்.
கந்தனும் அதைப் பார்க்கி-றான்.
சூலபாணி, எதற்காக நாம் காத்திருந்தோமோ-அது கைகூடி விட்டது. இனி விநாடியும் தாமதிக்கக் கூடாது. காரியத்தை முடிக்க வேண்டும்......


அதே சமயம் தற்செயலாக மேலே பார்த்த சூலபாணி.....
ஆ! அதோ! தப்பிச் சென்ற காட்டுச் சிறுவன் நம்மைக் கண்காணித்துக் கொண் டிருக்கிறான். நமது காவலின் லட்சணம் அபாரம்!
கந்தன் மறுபடி சிறைப்படுகிறான்.
இந்தப் பயலை உயிரோடு விட்டு வைப்பதே ஆபத்து. இப்போதே இவனை...
ஆனால் சூலபாணியின் வெறிச் செயலால் ஆத்திரமடைந்த— அணில்.....
ஆ. ஐயோ! என் காலில் ஏதோ கடித்து விட்டது... ....
பிடி..பிடி... தப்பு விடாதீர்கள்.
அம்புகள் பறந்தன. ஈட்டிகள் பாய்ந்தன. ஆனால் கந்தன் கிளைக்குக் கிளை தாவிப் பாய்ந்து தப்பி விட்டான்.


ஜம்பு, புதையல் படத் குறிப்பு இனி நமக்குத் திரும்பக் கிடைக்காது. ஆனால் அதில் உள்ள அடையாளத்தை நான் என் மனத்தில் எழுதிக் கொண்டு விட்டேன். அந்தப் பயல் சூலபாணிக்கு முன்னால் நாம் போய் அதை அப்புறப் படுத்தி ஆனந்தனிடம் சேர்ப்பிக்க வேண்டும். அதற்கு........
என் தோழர்களே! உங்கள் உதவி எனக்குத் தேவை. உங்கள் சகோதரர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு வாருங்கள்.
ஜம்பு! அதோ உன் சகோதரர்கள். அவர்களையும் இங்கு அழைத்து வா.
கந்தனின் திட்டப்படி சிறுத்தைகளும் மனிதக் குரங்குகளும் சூலபாணியின் படைகள் கந்தனைத் தொடாதபடி அரணை அணி வகுத்து நிற்கலாயின.
ஜம்பு! அந்தப் பாழடைந்த நகரத்துக்கு நதி மார்க்கமாகச் சென்றால் தான் சீக்கிரமாகப் போய்ச் சேரலாம். இந்த மரத்தை உருட்டி நீரில் தள்ளு.
கந்தனும் ஜம்புவும் பாழடைந்த இந்திரபுரியின் இடிபாடுகளை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். ஆனால்........

தொடரும்


தெரியுமா ?


1	15	5	12
8	10	4	9
11	6	16	2
14	3	13	7

இடது கைப் பக்கத்திலுள்ள கட்டத்தை நான்கு துண்டாக வெட்ட வேண்டும். மறுபடியும் அந்தத் துண்டுகளை மாற்றி அமைத்தால் அது இதே போன்ற சதுரமாக அமைவதோடு எந்தப் பக்கம் கூட்டினாலும் — மேலும் கீழும், குறுக்கும் நெடுக்கு மாக — கூட்டுத் தொகை 34 வரவேண்டும். உன்னால் முடியுமா? முயன்று முடியா விட்டால் வலதுகைப் பக்கத்திலுள்ள கட்டங்களைப் பார்.

குப்பண்ணு பெரிய குடும்பஸ்தர். அவர் பெண்கள் ஒவ்வொருவருக்கும் எத்தனை சகோதரிகள் உண்டோ அத்தனை சகோதரர்களும்; ஒவ்வொரு பையனுக்கும் எத்தனை சகோதரர்களோ அதைப் போல் இரண்டு மடங்கு சகோதரிகளும் இருந்தார்கள். அப்படியானால் குப்பண்ணுவுக்கு எத்தனை, பெண்கள் எத்தனை பிள்ளைகள்?

விடை: நாலு பெண்கள்; மூன்று பிள்ளைகள்.





என்ன விநோதம் பார் ?



தவளைகள் [பறக்கவும்] செய்யும் என்ற உண்மை உங்களுக்குத் தெரிந்திருக்காது. தவளைகளில் சுமார் ஆயிரம் வகைகள் இருக்கின்றன. போர்னியோவில் வாழும் ஒரு வகைத் தவளைகள் மரங்களின் மீது இருக்கும் போது பாம்போ அல்லது வேறு ஏதாவது விரோதிகளாலோ அபாயம் நேர்ந்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு, தனது ஜ்வால் மூடிய பாதங்களை அகல விரித்தபடி கீழே குதிக்கின்றன. அப்போது இவை பொத்தென்று கீழே விழுவதில்லை. ஆகாயத்திலே மிதந்தபடி மெதுவாகத் தரையை அடைகின்றன. தவளைகளிலேயே சிறியதும் மரங்களில் வசிப்பதுமான இந்த ஓர் இனத்தினால்தான் இப்படிப் பறக்க முடியும்.




★ முகமெல்லாம் கண்ணாக விளங்கும்; தேவாங்குகளில் ஒரு வகை பிலிப்பைன் தீவில் இருக்கின்றன. எட்டு அவுன்ஸ் நிறையும், பார்வைக்குக் குரங்கைப் போலவும் இருக்கும் இந்தச் சின்னஞ் சிறிய பிராணிக்கு இரவு வேளையில் இரை தேடும் போது பத்தடி தூரத்தில் ஈ, கொசு, ஈசல் முதலியவைகளைக் கூடப் பார்க்கும் சக்தி உண்டு. தாவி ஆகாயத்திலே மிதந்தபடி சென்று அவைகளைப் பிடிக்கவும் செய்கின்றன.



படத்தில் காட்டியுள்ளபடி உங்கள் இரண்டு கைகளையும் விளக்கின் முன்னால் காட்டி வாத்துப் போன்ற நிழலுருவத்தை உண்டாக்கலாம். செய்து பாருங்கள்.


★

மேலேயுள்ள படத்தில் மொத்தம் எத்தனை சதுரங்கள், நீண்ட சதுரங்கள் இருக்கின்றன? நான் விடை சொல்லப் போவதில்லை !



புதிய பந்தயம்

கீழே உள்ளது [போல ஒரு முயலையும் ஆமையையும் பெரிதாகக் கெட்டி அட்டையில் வரைந்து அதைக் கத்திரித்து எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு உருவத்தின் நடுவிலும் ஒரு சிறு துவாரம் செய்து கொள்ளுங்கள். பத்து அல்லது பன்னிரண்டு அடி நீளமுள்ள டுவைன் கயிற்றை நாற்காலியின் கைகளில் பக்கத்துக்கு ஒன்றாகக் கட்டுங்கள். இனி முயலையும், ஆமையையும் பந்தயத்துக்குக் கோதாவில் இறக்கலாம். அதன் உடலில்



செய்திருக்கும் துவாரத்தில் கயிற்றின் மறு நுனியை நுழைத்துக் கயிற்றில் ஊசலாட விடுங்கள். முயலின் கயிற்றை ஒருவரும் ஆமையின் கயிற்றை மற்றொருவரும் பிடித்துக் கொள்ளுங்கள். இப்போது இரண்டுக்கும் போட்டா போட்டி ஆரம்பமாக வேண்டும். கயிற்றைச் சுண்டிக் குலுக்கி ஆட்டி அசைத்தால் அதில் ஊசலாடும் ஆமையோ முயலோ மெல்ல மெல்ல நாற்காலியை நோக்கி முன்னேறும். கயிற்றின் மறு கோடியை — அதாவது நாற்காலியின் கைகளை—எது முதலில் போய் அடைகிறதோ அதற்கே வெற்றி! விளையாடிப் பாருங்கள்.

மின்னல்

வருணனின் சாட்டை என்று வர்ணிக்கப்படும் மின்னல் உண்மையில் மின்சாரம்தான். ஏராளமான மின்சாரம் ஆகாயத்தில் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பாயும் போது ஒளிப் பொறிகளாக மாறுகிறது. இதுவே மின்னல். மின்னல் மேகத்தில்தான் பிறக்கிறது. நீருண்ட மேகத்தின் மீது காற்று வேகமாக மோதி மழைத் துளிகளை உடைத்து ஒரு பகுதியைப் பிரித்துக் கலைத்து விரட்டுகிறது. இந்தச் செய்கையின் போது பெரிய அளவில் உராய்தல் ஏற்படுகிறது. இந்த உராய்தலினால் மேகங்களில் மின்சார சக்தி ஏற்படுகிறது. கொஞ்சம் கொஞ்சமாக இந்த மின்சக்தி பெரிய அளவில் உருவாகிறது. பலூன் ஊத ஊதப் பெரிதாகி ஒரு நிலையில் வெடிப்பது போல, மின்சக்தி சேரச் சேர ஒரு நிலையில் திடீரென்று இவை ஒளிப் பொறியாகி ஒரு மேகத்திலிருந்து மற்றொரு மேகத்துக்குத் தாவுகின்றன. இப்படித் தாவும் போது அது நம் கண்களுக்கு மின்னலாகத் தோற்றம் அளிக்கிறது. அருகிலே மேகம் ஏதும் இல்லாதபோது மின்னல், தான்பிறந்த மேகத்திலிருந்து பூமியை நோக்கித் தாவுவதும் உண்டு. கொடிபோல வளைந்து வளைந்து செல்லும் ஒளிக் கோடு போலத் தோற்றமளித்தாலும் மின்னல் என்பது பல ஒளிப் பொறிகளின் கூட்டம்தான். 'ஆகாய மின்சாரம்' எனப்படும் மின்னல் எப்போதுமே கோணல் மாணலான பாதையில்தான் செல்லும். அதனால்தான் மின்னல் நமக்குக் கொடி போலத் தோற்றமளிக்கிறது!

இவரைத் தெரியுமா?

ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் கணிதப் பேராசிரியராக இருந்தார் இவர். ஞாயிற்றுக்கிழமைகளிலே மதபோதகர். தன்னைவிடப் பெரியவர்களிடம் பேசவதென்றால் இவர் தட்டுத் தடுமாறுவார், திக்கித் திணறுவார். அத்தனை சங்கோசி. ஆனால் குழந்தைகளுக்குப் பைத்தியக்காரக் கதைகள் சொல்லுவதில் கெட்டிக்காரர்! ஒரு நாள் இப்படித்தான் மூன்று குழந்தைகளோடு படகில் செல்லும் போது அவர்களுக்கு ஒரு விநோதக் கதை சொன்னார். ஒரு சின்னப் பெண், முயல் வளைக்குள் புகுந்து அதிசயமான ஓர் உலகத்திற்கு வருகிறாள். அங்கு அவளுக்கு நேர்ந்த விந்தை அநுபவங்களைப் பற்றியது அந்தக் கதை. திறந்த வாய் மூடாமல் அதைக் கேட்ட குழந்தைகள் அதை அப்படியே எழுதும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டன. அவரும் அந்தச் சின்னப் பெண்ணின் ஆசைக்காக இரவு முழுதும் உட்கார்ந்து அந்தக் கதையை எழுதினார். ஆனால் அதைப்பற்றி யாரிடமும் சொல்லக்கூட இல்லை. தூக்கி மூலையில் எறிந்து விட்டார். வருஷங்கள் பல உருண்டன. ஒரு நாள் அவரது நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்தார். பொழுது போகவில்லை அவருக்கு. ஆகவே மூலையிலே புழுதி படிந்து கிடந்த அந்தக் கதையின் கையெழுத்துப் பிரதியை எடுத்தார். படித்தார். பரவசமடைந்தார். அதைப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்று கணிதப் பேராசிரியரைக் கேட்டுக் கொண்டார் அவர். இவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'என்ன? கணிதப் பேராசிரியனாகிய நான் குழந்தைகளுக்காக ஒரு பைத்தியக்காரக் கதையை எழுதினேன் என்பதை உலகுக்குத் தெரிவிப்பதாவது? முடியாது. இது என்னுடைய கௌரவத்துக்கு இழுக்கல்லவா?' என்று வாதித்தார். ஆனால் நண்பர் விடவில்லை. ஆகவே பேராசிரியர் அதைத் தமது சொந்தப் பெயரில் வெளியிடாமல் புனைபெயரில் வெளியிட்டார்.

புத்தகம் வெளிவந்தது. படித்தவர் வியந்தனர். சிரித்தனர். திகைத்தனர். பாராட்டினர். அதற்கு மகத்தான வெற்றி. ஆங்கிலம் தெரிந்தவர்கள் அத்தனை பேரும் அந்தக் கதையைப் படித்து மகிழ்ந்தார்கள். பதினாறு மொழிகளில் அந்தப் புத்தகம் மொழி பெயர்க்கப்பட்டது. இரவு பகல் எந்நேரமும் அச்சு யந்திரங்கள் இவரது கதையை அச்சடித்த வண்ணமாக இருந்தன. ஆங்கில மொழியில் மட்டும் இவரது இப் புத்தகம் 169 பதிப்புக்கள் வெளியாகி இருக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அன்றிலிருந்து இன்றுவரை குழந்தை இலக்கியத்தின் குன்றாத சுடராக விளங்கி வருகிறது இந்தக் கதை. அது எது தெரியுமா? அற்புத உலகில் அலிஸ் (அலிஸ் இன் ஒண்டர் லாண்ட்) என்ற கதைதான். இதை எழுதியவர் ரெவரெண்ட் சார்லஸ் டாட்ஸன் என்பது. லூயி கரோல் என்ற புனை பெயரில்தான் அதை அவர் வெளியிட்டார். இவரோடு படகில் கதை கேட்கச் சென்ற பெண்ணின் பெயர் அலிஸ். ஆகவே இந்தக் கதைக்கும் 'அற்புத உலகில் அலிஸ்' என்றே பெயரிட்டு வெளியிட்டார். இந்தக் கதையை நீங்களும் ஒரு தடவை படியுங்கள். பரவசமடைந்து போவீர்கள்.



இடி

'வானுலகில் பெரிய பெரிய பாத்திரங்களை உருட்டித் தேய்க்கிறார்கள். அந்தச் சப்தம்தான் இடியாகக் கேட்கிறது' என்று கற்பனையாகச் சொல்லக் கேட்டிருப்பீர்கள். பாத்திரங்களைத் தேய்க்க உருட்டா விட்டாலும் உண்மையில் பொருள்கள் ஒன்றோடொன்று மோதுவதால்தான் இடி ஏற்படுகிறது. இடியோடு கூடிய புயலின் போது பெருமளவில் காற்றானது ஒன்றோடொன்று மோதிக் கொள்ளுகிறது. இப்படிக் காற்றை மோதச் செய்வது மின்னல்தான். எப்படி?

மின்னல் வானவெளியில் தாவி ஓடும் போது வாயு மண்டலத்தைச் சூடாக்கி விடுகிறது. சூடான காற்று வேகமாக வெளியேறும் என்று உனக்குத் தெரியும். திடீரென்று காற்று சூடானதும் அது உந்தித் தள்ளிக் கொண்டு வெளியேறுகிறது. இதனால் மின்னல் சென்ற பாதையில் சூனியப் பிரதேசம் ஏற்படுகிறது. அடுத்த விநாடி இந்தச் சூனியப் பிரதேசத்தில் குடியேறக் குளிர்ந்த காற்று நான்கு பக்கங்களிலிருந்தும் முட்டி மோதிக் கொண்டு வருகிறது. இந்த மோதலே பெருஞ் சத்தத்தை உண்டாக்குகிறது. இதுவே இடி. இடி ஒரே ஒலியாக இல்லாமல் மாறுபட்டு ஒலிப்பது ஏதனால் தெரியுமா? மின்னல் அப்படியும் இப்படியும் வளைந்து வழி வகுத்துக் கொள்ளுவதினால்தான். சில வேளைகளில் மின்னல் குறைவாகவும் இடி பெரிதாகவும் கேட்பதுண்டு. இது இடியின் எதிரொலி. மலைகள், பள்ளத்தாக்குகள், ஏன், மேகங்களிலிருந்தே கூட, இடியின் எதிரொலிகள் ஏற்படுவதுண்டு.

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்திசஞ்சீவி

குழந்தைகளின் ஈரல். குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்யரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விவரம்
தங்கும் இடங்கள் வழக்கம்போல். மற்ற விவரங்களுக்கு எழுதவும்

ஊர்	தேதி	நேரம்
தாராபுரம்	1	காலை 8-30 to 9-30
பழனி	1	காலை 10-30 to 11-30
உடுமலைப்பேட்டை	1	மாலை 3 to 4
பொள்ளாச்சி	1	மாலை 5 to 6
பாலக்காடு	2	காலை 9 to 11
..	2	மாலை 3 to 5
கோயமுத்தூர்	3	காலை 9 to 11
..	3	மாலை 2 to 4
மேட்டுப்பாளையம்	3	மாலை 5 to 6
சத்தியமங்கலம்	4	காலை 8 to 9
கோபி	4	காலை 10 to 11
பவானி	4	மாலை 2 to 3
மேட்டூர் அணை	4	மாலை 4-30 to 5-30
ஈரோடு	5	காலை 9 to 11
திருப்பூர்	5	மாலை 4 to 5-30
திருச்சி	6	காலை 11 to மாலை 6
தஞ்சாவூர்	7	காலை 7 to 9
கும்பகோணம்	7,17,27	காலை 10 to மாலை 5
சீர்காழி	8	காலை 7 to 8-30
மாயூரம்	8	காலை 9 to 11
நன்னிலம்	8	மாலை 2 to 3
நாகப்பட்டினம்	8	மாலை 5 to 6-30
திருவாரூர்	9	காலை 7-30 to 9-30
விஜயபுரம்	9	காலை 10 to 11
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2 to 3-30
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 to 6-30
புதுக்கோட்டை	10	காலை 8 to 10
பொன்னமராவதி	10	காலை 11-30 to 12-30
தேவகோட்டை	10	மாலை 2-30 to 3-30
காரைக்குடி	10	மாலை 4-30 to 6
பரமக்குடி	11	காலை 8 to 10
ராமனாதபுரம்	11	மாலை 3-30 to 4-30
சிவகங்கை	11	காலை 8-30 to 10
மதுரை	11	காலை 11 to 12-30
..	11	மாலை 3 to 6
கோவில்பட்டி	12	காலை 8 to 9
திருநெல்வேலி ஜங்.	12	மாலை 3 to 5
திருநெல்வேலிடவுன்	12	மாலை 5 to 6
அம்பாசமுத்திரம்	13	காலை 8 to 9-30
தென்காசி	13	மாலை 3 to 5
ராஜபாளையம்	14	காலை 9 to 10
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10-30 to 11-30
பெரியகுளம்	14	மாலை 3 to 4-30
திண்டுக்கல்	15	காலை 8 to 9-30
நாமக்கல்	15	மாலை 3 to 4-30
ராசிபுரம்	15	மாலை 5-30 to 6-30
சேலம்	16	காலை 9 to 11
..	16	மாலை 3 to 5
சேலம்: செவ்வாய்ப் பேட்டை	16	மாலை 1-30 to 2-30
தருமபுரி	17	காலை 9 to 10-30
கிருஷ்ணகிரி	17	மாலை 3-30 to 5
திருப்பத்தூர் (N.A.)	18	காலை 8-30 to 10
குடியாத்தம் (N.A.)	18	மாலை 2 to 3-30
சித்தூர் (ஆந்திரா)	18	மாலை 5 to 6-30
வேலூர் (N.A.)	19	காலை 9 to 11
பெரிய காஞ்சிபுரம்	19	மாலை 3 to 5
சென்னை	20	காலை 9 to 11
..	20	மாலை 3 to 5
செங்கற்பட்டு	21	காலை 9 to 10-30
திண்டிவனம்	21	மாலை 2-30 to 4
விழுப்புரம்	21	மாலை 5 to 6
திருவண்ணாமலை	22	காலை 8-30 to 10
திருக்கோவிலூர்	22	காலை 11 to 12
கடலூர் (N.T.)	22	மாலை 4 to 5-30
சிதம்பரம்	23	காலை 9 to 10-30
விருத்தாசலம்	23	மாலை 3-30 to 5
கள்ளக்குறிச்சி	24	காலை 8-30 to 9-30
ஆத்தூர்	24	காலை 11 to 12
துறையூர்	24	மாலை 3-30 to 5
மல்லேஸ்வரம் பெங்களூர் - 3	26	காலை 9 to 11 மாலை 3 to 5

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை H. O. கரூர்

கிளைகள் :
1. 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்
2. 2332, 5th கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர்-3

குறிப்பு: குழந்தைகளுக்குக் கட்டி வராமல் தடுக்கவும், கக்குவான் இருமலைக் குணப்படுத்துவதற்கும், தொண்டை சதை வளர்ச்சியை (TONSILS) ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கும் எங்களிடம் நல்ல மருந்துகள் கிடைக்கும்.

நந்தவனம்

22. ஆலமும் அமுதமும்

"இன்னும் பதினைந்து நாட்களில் சுவர் ஓவியங்களை முடித்து விடுவதாக ஜமீந்தாரிடம் வாக்குறுதி செய்து கொடுத்திருக்கிறேன்'' என்று சொன்னான் வில்வநாதன்.

''பதினைந்து நாட்களிலா?'' என்று ஒரே வியப்போடு கேட்டாள் செண்பக சுந்தரி.

''ஆமாம். பதினைந்து இரவும், பதினைந்து பகலும்!'' என்று மேலும் உறுதியோடு சொன்னான் வில்வநாதன்.

''அப்படி என்ன அவசரம்? அவ்வளவு உறுதியோடு நீங்கள் சொல்ல வேண்டிய காரணம் என்ன?'' என்று கேட்டாள் செண்பகசுந்தரி.

வில்வநாதன் உடனே பதில் சொல்ல வில்லை. மௌனமாக இருந்து மனத்துக்குள்ளே ஜமீந்தார் வந்து போன அந்த நிகழ்ச்சியைப் பற்றி நினைத்துக் கொண்டே நின்றான்.

''அன்பே! என்னிடம் மறைக்காமல் சொல்வீர்களா? நான் ஒன்று கேட்கலாமா உங்களை?''


இவ்வாறு சொல்லிக் கொண்டே வில்வநாதனின் எதிரிலே வந்து நின்று அவனுடைய கண்களையே பார்த்தாள் சுந்தரி. வில்வநாதன் எதுவும் பேசாமல் மௌனமாகச் சிரித்தான். செண்பக சுந்தரி கேட்டாள்:

''வில்வநாதா! நேற்று மாலை நாம் இருவரும் முல்லையின் பாங்கரிலே நின்றபோது ஏதோ சத்தம் கேட்டதே! ஜமீந்தார் தானே அங்கு வந்தார்...?''

''ஆம். அப்படித்தான் தெரிகிறது. ஏனென்றால் நான் உன்னை அனுப்பி விட்டுச் சென்றபோது சத்திரத்திலே அவர் உட்கார்ந்திருந்தார்!''

செண்பக சுந்தரிக்குச் 'சுரீர்' என்று நெருப்புச் சுட்டது போல இருந்தது. வில்வநாதன் சொன்னான்:

''சுந்தரி! தலைக்கு மேல் வெள்ளம் போன பிறகு அது சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன? அதைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. நீயும் கவலைப்படக் கூடாது. தெரிந்ததா?



சோமு

'யாருக்காகிலும் பயமா?' என்று அன்றொருநாள் பாட்டுப் பாடினாயே அதைப் பாடு மறுபடியும். அதைப் பாடினால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும்! எனக்காகப் பாடமாட்டாயா?'' என்றான் வில்வநாதன்.

மீண்டும் பாட்டும் களிப்பும் துள்ளி விளையாட ஆரம்பித்தன, நந்தவனத்திலே!

''பதினைந்து நாள் என்று தவணை சொல்லிவிட்டார்களே! அதுதான் கவலையாக இருக்கிறது!'' என்றாள் சுந்தரி, திடீரென்று பாட்டையும் கூத்தையும் நிறுத்தியவளாக! வில்வநாதன் கேட்டான்:

''பழையபடியும் கவலைப்பட ஆரம்பித்து விட்டாயா? இந்த மனம் இருக்கிறதே மனம், அது ஒரு நிலையில் நிற்காது போல் இருக்கிறதே! அப்படித்தானே?''

''எல்லாருடைய மனமும் அப்படித்தான்! மனித மனத்தைப் பற்றித் தாயுமானவரே சொல்லியிருக்கிறார் நம்மெல்லாருக்குமாகச் சேர்த்து!''

''என்ன சொல்லியிருக்கிறார், பாடு கேட்கலாம்!'' என்றான் வில்வநாதன்.

செண்பக சுந்தரி பாட ஆரம்பித்தாள்:


'' பாழான என்மனம் குவிய ஒரு தந்திரம்
பண்ணுவது உனக்கு அருமையோ!
பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற-
நிறைகின்ற
பரிபூர ணனந்தமே!''

என்ற கடைசி அடிகளை முதலில் பாடிவிட்டுத் தாயுமானவருடைய அந்த அற்புதமான பாடலின் ஆரம்ப அடிகளைப் பிறகு பாட ஆரம்பித்தாள் சுந்தரி! வில்வநாதன் இசையின் சுகத்திலும், குரலின் குழைவிலும், பாடலின் சொற்களிலே பெருகிய உணர்ச்சியிலும் வசமாகி அப்படியே மெய்ம் மறந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

ஆழாழிகரையின்றி நிற்கவில்லையோ! கொடிய
ஆலம் அமுதாகவில்லையோ?
அக்கடலின்மீதுவட அனல் நிற்கவில்லையோ
அந்தரத்து அகிலகோடி
தாழாமல் நிலைநிற்கவில்லையோ! மேருவும்
தனுவாக வளையவில்லையோ
சப்தமே கங்களும் வஜ்ரதரன் ஆணையில்
சஞ்சரித் திட வில்லையோ!

பாடலைக் கேட்டுக் கொண்டேயிருந்த வில்வநாதன் அப்படியே ஒரு துள்ளுத்துள்ளி நின்றான். அதோடு தன் உள்ளத்திலே பெருகி நின்ற ஆவலையும் அப்படியே கொட்டி விட்டான்.

''சுந்தரி! எங்கே அந்த அடிகளை மீண்டும் பாடு. மீண்டும், மீண்டும், மீண்டும் பாடு. சப்த மேகங்களும் எப்படிச் சஞ்சரிக்கின்றனவாம்? பாடு, அந்த அடிகளை மட்டும்!''





ஏதோ ஒரு கனவில் இருந்துகொண்டு பேசுவது போல் பேசினான் வில்வநாதன். சுந்தரி மீண்டும் அந்தச் சொற்களைப் பாடினாள்:

"சப்தமேகங்களும் வஜ்ரதரன் ஆணையில்
சஞ்சரித்திட வில்லையோ!"

தாயுமானவரின் அந்த வார்த்தைகளிலே, மனம் ஒன்றிப் போய் நின்றான் வில்வநாதன்.

"சுந்தரி! ஏழு ஸ்வரங்கள், ஏழு விதமான வர்ணச் சேர்க்கைகள், வானவில்லின் ஏழு வர்ணங்கள், வானத்திலே சஞ்சரிக்கும் ஏழு

மேகங்கள் என்று வரிசையாக என்னுடைய தகப்பனார் இந்த ஏழு என்ற எண்ணின் பெருமையை எனக்குப் பல முறை எடுத்துச் சொல்லி யிருக்கிறார். அதெல்லாம் இப்போது ஞாபகம் வருகிறது!'' என்றான் வில்வநாதன்.

''இந்தப் பாட்டில் சப்த மேகங்கள் என்று வருவதைத் தவிர எனக்கு வேறு ஒன்றும் தெரியாதே!'' என்றாள் சுந்தரி.

''சுந்தரி! என்னுடைய முதலாவது சுவர் ஓவியத்துக்கு ஓர் அதிசயமான கருத்தை வழங்கி விட்டது நீ பாடிய பாடல்! ஏழு மேகங்கள்! அவை வஜ்ரதரன் என்று அழைக்கப்படும் இந்திரனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு வானத்திலே சஞ்சாரம் செய்கின்றன! இதைத்தான் சுவரிலே வர்ணம் தீட்டப் போகிறேன் முதலில்!'' என்றான் வில்வநாதன்.

''மேகங்களில் ஏழு விதங்கள் இருப்பதை எப்படிக் காட்டுவீர்கள்?'' என்று ஒரே ஆச்சரியத்தோடு கேட்டாள் செண்பகசுந்தரி.

''சுந்தரி! ஒவ்வொரு மேகமும் ஒரு முகிற்கன்னி. ஒரு சுந்தர நங்கை. ஒரு செண்பக சுந்தரி! இந்த ஏழு கன்னியர்களும் வானத்திலே மிதக்கிறார்கள். முகிற் சிம்மாசனத்திலே அமர்ந்தவனாக, நட்சத்திர மலர்கள் சூடி, சூரிய சந்திர மகுடம் தாங்கி, மின்னல் என்ற செங்கோல் ஏந்தி, இந்திரன் அரசாட்சி செய்கிறான்! அவனுடைய ஆணையிலே இந்த ஏழு பெண்களும் அந்தரத்திலே மிதந்தவாறு அபிநயம் புரிகிறார்கள், நடனம் ஆடுகிறார்கள், நிலமகளுக்குத் தங்களுடைய கருணையைப் பூவாகவும், பொன்னாகவும் மணியாகவும், மழையாகவும் பொழிகிறார்கள்!''

இப்படிப் பேசிக்கொண்டே போனான் வில்வநாதன். அவனுடைய வார்த்தைகளிலே இழைந்த ஓவியக் கனவில் சொக்கி நின்றாள் செண்பகசுந்தரி. அப்போது வில்வநாதன் தொடர்ந்து சொல்லுவான்:

''சுந்தரி, இந்திரனுடைய மேகங்கள் ஏழுக்கும் ஏழு பெயர்கள் கொடுத்தனர் நமது முன்னோர்கள்! இந்த ஏழில் ஒன்று பொன்னைச் சொரியும். இன்னொன்று ரத்தினங்களாகச் சொரியும். மூன்றாவது பூவாகச் சொரியும். இன்னொன்று தண்ணீர் பொழியும். ஐந்தாவது மண்மாரி பொழியும். ஆறாவது கல் மழையைக் கொட்டும். ஏழாவது நெருப்பைப் பொழியும். இந்த ஏழு விதமான மேகங்களையும் பற்றி நமது நாட்டு ஞானிகள் பல நுட்பமான உண்மைகளைக் கண்டுள்ளார்கள். சம்வர்த்தம், ஆவர்த்தம், புஷ்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்று நாமகரணமும்செய் திருக்கிறார்கள். இந்த ஏழு மேகங்களையும் ஏழு வித இயல்புடைய பெண்களாக, ஏழு விதமான வர்ணச் சேர்க்கையில், ஏழு வெவ்வேறு நிலைகளிலே சித்திரம் தீட்டப் போகிறேன்! வானத்திலே மிதந்து செல்லும் இந்த ஏழு கன்னியர்களும் இந்திரனுடைய ஒளிவட்டக் கிரீடத்தைச் சுற்றிப் பறந்து செல்கிறார்கள்! அதாவது ஏழு செண்பக சுந்தரிகள்!''

இது வரை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரி, இந்த இடத்தில் திகைப்போடு, ''செண்பகசுந்தரி எங்கே வந்தாள் இந்தச் சித்திரத்தில்?'' என்று கேட்டாள்.

''ஏழு கன்னியர்களையும் நான் வரைவதற்கு நீதான் இலட்சியக் கன்னிகை!'' என்றான் வில்வநாதன்!

ஆம்; வில்வநாதன் சொன்னது அவனுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து பொங்கி வந்த ஒரு சித்திரக் கரு! அவன் மெய்யாகவே நினைத்தான், தனது ஓவியங்களுக்குரிய வடிவமும், கற்பனையும், கருத்தும் செண்பக சுந்தரியாக உருவெடுத்து வந்து தன்னைச் சந்தித்திருப்பதாக!

வில்வநாதன் ஜமீந்தாரிடம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற முயற்சியில் தீவிரமாக முனைந்தான்: பாடல்கள், சித்திரத்துக்குரிய உணர்ச்சி நிலைகள், இசையிலே பொங்கி எழுந்த கற்பனைகள், அவற்றுக்கான அபிநயச் செல்வங்கள் — இவற்றை நூறு நூறு புதுமைகளோடு வழங்கினாள் செண்பக சுந்தரி. அவற்றை யெல்லாம் இதயத்திலே தேக்கி, இறகிலே நல்கி, வர்ணங்களிலே செலுத்திக் கோவிற் சுவர்களிலே பதித்தான் வில்வநாதன்! பட்டரும் கம்பரும் வருவார்கள். மெய்யும் உள்ளமும் உருகிப் பாராட்டுவார்கள். வாழ்த்துவார்கள். சென்று விடுவார்கள்.

சித்திர வேலை மிகவும் துரிதமாக முன்னேறிக் கொண்டிருந்தது என்பதில் எல்லாருக்குமே திருப்தி. பட்டரும் கம்பரும் அளவுகடந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் இத்தனை திருப்திக்கும், இவ்வளவு மகிழ்ச்சிக்கும் மத்தியில் இந்த இரண்டு நண்பர்களும் செண்பகவனத்தின் ஒரு கோடியிலே உட்கார்ந்தவாறு தங்களுடைய அச்சத்தை இரகசியமாகத் தங்களுக்குள்ளே பேசிக் கொள்ளுவார்கள்! சுந்தரேசப் பட்டர் சொல்லுவார் :

மிகச்சிறந்தது!



வீட்டிற்கும் — ஹோட்டலுக்கும்

ப்ரூக் பாண்ட்

ஸ்பெஷல் ஹோட்டல் ப்ளெண்ட்

டஸ்ட் தேயிலையே

* ஒவ்வொரு பாக்கெட்டும் அதிகப்படியான கோப்பைகள் நல்ல தேநீர் கொடுக்கிறது.
* ஈரம்படியாதவாறு பாக்செய்யப்பட்டிருப்பதால் புத்தம் புதுமைக்கு உத்திரவாதம் அளிக்கிறது
* லட்சக்கணக்கான வீடுகளில் இதனை விரும்பி அருந்தி ஆனந்தம் அடைகின்றனர்.

மூன்று அளவுகளில் கிடைக்கிறது
500 கிராம், 100 கிராம்.
50 கிராம்

JWT BB 366

''கம்பரையா! எத்தனை அற்புதமான சித்திரங்கள்! எத்தனை வேகமாக எழுந்து உருவாகின்றன! ஆனாலும்—'' என்று தயங்குவார் பட்டர்.

''பட்டரையா! எவ்வளவு பெரிய மேதாவி இந்தப் பையன்! கையிலே சரஸ்வதி நின்று நர்த்தனம் ஆடுகிறாள். ஆனாலும்....'' என்று அச்சத்தோடு தயங்குவார் கம்பர்.

''கம்பரையா! எனக்கென்னவோ இத்தனை பயத்துக்கும் மத்தியில் ஒரு நம்பிக்கை இருக்கிறது!'' என்பார் பட்டர்.

''எனக்கும் ஒரு சிறு நம்பிக்கை எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அம்மன் கோவிலின் அகல் விளக்கைப் போல, இத்தனை திகிலுக்கும் மத்தியில் ஒரு சிறு ஒளி தெரிகிறது...!''

இவ்வாறு கூறுவார் கம்பர். பட்டர் சொல்லுவார்:

''கம்பரையா! எது எப்படி ஆனபோதிலும், ஜமீந்தார் பரம ரசிகர். இந்த அதியற்புதமான சித்திரங்களைப் பார்த்தால், அவருக்கு எல்லாத் தவறுகளும் மறந்து போய் விடும். வில்வநாதனிடம் இருக்கிற கோபமெல்லாம் அப்படியே பறந்து போய் விடும்.''

பட்டர் இப்படிச் சொன்னதும், அந்த வார்த்தைகளை முழு மனத்தோடும், மட்டற்ற ஆசையோடும் ஆமோதிப்பார் கம்பர்.

''மெய்தான் ஐயா நீங்கள் சொல்வது! சித்திரம் வரைய வந்த இடத்தில் காதல் புரிய ஆரம்பித்தான் என்பது மிகப் பெரிய தவறுதான். ஆனால் இந்தப் பெண்ணும் இவனும் சேர்ந்து செய்து நிறுத்தியுள்ள இந்தக் கலை விந்தைகளைப் பார்க்கும் போது, அந்தத் தவறெல்லாம் மறந்து போய் விடுகிறதல்லவா!''

''அது சரி, கம்பரையா! ஆனாலும் தவறு தவறுதானே? அந்த அரக்கி குழுதவல்லிக்கு இதெல்லாம் தெரியுமா தெரியாதா என்பது புரியவில்லை! அவளுடைய நோக்கமோ வேறு! இந்தப் பிள்ளைகள் இருவரும் கற்பனை செய்கிற வாழ்க்கையோ வேறு! ஜமீந்தார் என்னென்ன எண்ணங்களோடு இந்தப் பையனைச் சென்னையிலிருந்து அழைத்து வந்தாரோ! அதுவும் தெரியவில்லை! நந்தவனத்திலே இத்தனை நாடகங்கள் நடத்துகிற இந்தப் பையன், அந்தக் கோலாகலமான ஜமீன் மாளிகையிலே என்னென்ன விபரீதங்கள் செய்தானோ! நமக்கு என்ன தெரியும்! மொத்தத்தில் ஜமீந்தார் இந்தப் பையனிடம் ஒரே ஆவேசமாக இருக்கிறார் என்பது நமக்குத் தெரிகிறது!''

இவ்வாறு சொல்லிப் பெருமூச்சு விடுவார் சுந்தரேசப்பட்டர். சங்கர நமசிவாயக் கம்பருக்குக் கண்கள் கலங்கி விடும்.

இந்தப் பேச்சுக்கள் செண்பகவனத்தின் ஒரு கோடியிலே நடந்தாலும், எப்போதாவது இவர்கள் இருவரும் ஒதுங்கியிருந்து பேசுவதைப் பார்க்கும் போது வில்வநாதனும் ஒரு விநாடி சிந்தனை செய்வான்: 'முன்னைப் போல் இவர்கள் இருவரும் ஏன் என்னிடம் கலகலப்பாக இருப்பதில்லை? ஜமீந்தாருக்குப் பயந்து போய் இவர்கள் நம்மிடம் பேசத் தயங்குகிறார்களா? அல்லது அடிக்கடி என்னோடு சுந்தரி வந்து உட்கார்ந்திருப்பதால் இவர்கள் ஒதுங்கி விடுகிறார்களா? அல்லது இவர்களுக்கும் என்னிடம் கோபமா? கோபம் என்றால் இவ்வளவு தூரம் மனம் திறந்து பாராட்டுவார்களா? வாழ்த்துவார்களா?'

இவ்வாறு எண்ணியதும் வில்வநாதனுடைய உள்ளம் ஒருகணம் அங்கும் இங்குமாக ஊசலாடும். மறுகணம் அந்த மதிமயக்கத்தை உதறிக் குளிப்பவன் போல, செண்பக சுந்தரியின் இசையருவியிலே உள்ளத்தைக் கொடுப்பான்! இந்த அகில உலகமும் மறந்து, சித்திரமும், இறகும், வர்ணக் கற்பனைகளுமாகச் சுவரோடு சுவராகத் தோய்ந்து விடுவான் அந்த ஓவியநாதன்!

பதினைந்து நாட்கள் — பதினைந்து பகலும், பதினைந்து இரவும் என்றல்லவா தவணை! அந்தத் தவணைக்குள் இந்தச் சுவர் ஓவியங்களை எப்படியும்பூர்த்தி செய்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இரண்டு இதயங்கள் ஒருமித்துப் பணி புரிந்தன. தங்களுடைய அன்புக்கும், தங்களுடைய இலட்சியக் கனவுகளுக்கும், தங்களுடைய எதிர்காலவாழ்வுக்கும் இது ஒரு பரீட்சை என்பது போல எண்ணி, இருவரும் கலைப் படைப்பிலே ஒன்றி நின்றார்கள்! ஆனால் நந்தவனத்துக்கு வெளியே நடந்து கொண்டிருந்தது என்ன?

நந்தவனத்தில் வண்ண வண்ணமான சாயல்களிலே சுவர் ஓவியங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. அதே சமயம் வல்லாளவேலரின் உள்ளச் சுவரிலே வேறு விதமான ஓவியங்கள் உருவாகிக் கொண்டு வந்தன!

வேணுலிங்கமும் சுடலையாண்டியும் தன்னை வழி மறித்துத் தனக்கு எச்சரிக்கையும் கொடுத்து விட்டுப் போனதை எண்ணி மனம் பொங்கினார் வல்லாளவேலர். யாரிடமும் எதையும் வெளியிட்டுச் சொல்வதற்குத் தயக்கமாக இருந்தது. ஜமீன் வட்டாரத்தின் நிர்வா

க்முமம், பாதுகாவலும் இத்தனை மோசமாகப் போய் விட்டனவே என்று மனத்துக்குள் ஒரு சுயநலக் கவலை பிறந்தது அவருக்கு!

'பட்டப் பகல் நேரத்தில் கொள்ளைக்காரர்கள் வந்து இப்படியெல்லாம் மனிதர்களை வழி மறிப்பதும், பயமுறுத்துவதும் எத்தனை வெட்கக் கேடான காரியம்! போலீஸிலே தகவல் கொடுப்போம் என்றால், நாம் ஒருவராக நின்று என்ன செய்ய முடியும்! இந்த மாவட்டத்தில் உள்ள எத்தனையோ பண்ணையார்களும், சிறு சிறு ஜமீந்தார்களும் இந்தக் கொள்ளைக்காரர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அக்கிரமங்கள் எல்லாம் நடக்குமானால் இந்த ஜமீன் ஆட்சியே நிலைகுலைய ஆரம்பித்து விட்டது என்றுதானே அர்த்தம்!'

இப்படியெல்லாம் பெரிய பெரிய விசாரணையிலே இறங்கியது வல்லாளவேலருடைய மனம்! மனத்துக்குள்ளேயே சிரித்துக் கொண்டார் வல்லாளவேலர்!

'நானும் நாட்டு நிர்வாக மாறுதல்களைப் பற்றி யோசிக்க ஆரம்பித்துவிட்டேனே! என்ன பைத்தியக்காரத்தனம்!' என்று சொல்லிக் கொண்டே சாய்வு நாற்காலியிலே கண்களை மூடிக் கொண்டு சாய்ந்தார் வல்லாள வேலர்.

''எசமானு இவ்வளவு தீவிரமா யோசனை பண்ணுறீக!'' என்ற குரல் கேட்டுக் கண்களைத் திறந்து பார்த்தார் வல்லாள வேலர். வக்கீல் குமாஸ்தா பஞ்சவர்ணம் வெற்றிலைக் காவியும், புகையிலைக் கறையும் ஏறிய தமது பற்களைத் திறந்தவாறு சிரித்துக்கொண்டே வீட்டுக்குள்ளே வந்தார்!

''குமாஸ்தாப் பிள்ளைவாளா! சரியான நேரத்திலே வந்தீக!'' என்று சொல்லி அவரை அன்போடு வரவேற்றார் வல்லாளர்.

''என்ன அவ்வளவு பலமான யோசனை?'' என்று அலட்சியமாகக் கேட்டார் குமாஸ்தா.

வல்லாளவேலர், கடலையாண்டியைப் பற்றியும் வேணுலிங்கத்தைப் பற்றியும் சொல்லலானார்:

''பொன்னுத் துரையிடத்திலே எல்லாச் சங்கதியையும் பேசிட்டு, அவரையும் அனுப்பிச்சிட்டு ஊருப் பக்கமாகத் திரும்பிச்சு நம்ப வண்டி! அதுக்குள்ளே 'திமுதிமு'ன்னு இந்தப் பயலுக வந்துட்டானுக பிள்ளைவாள்!'' என்றார் வல்லாள வேலர்.

''அதை ஏன் கேக்கிறீக! ஆகாசத்திலிருந்தே குதிச்சிடுவானுக அவனுக. அதிலேயும் அந்தச் கடலையாண்டி இருக்கானே அந்தப் பய பெரிய வல்லாளன் கண்டனா!'' என்று வல்லாளவேலரிடம் தீர்மானமாகச் சொன்னார் வக்கீல் குமாஸ்தா பஞ்சவர்ணம்.

''கடலையாண்டிதானே! அவன் ஆகாசத்திலேயிருந்துதான் குதிச்சான்! நம்ப வண்டிக் கூண்டுக்கு மேலே வந்து குதிச்சான் போங்க!'' என்றார் வல்லாளர்.

''எல்லாம் உங்க ஜமீன் நிர்வாகம் அப்படி இருக்கு! அவனுகளைக் குற்றம் சொல்ல என்ன இருக்கு எசமான்! நீங்களே சொல்லுங்க! இதையெல்லாம் உத்தேசம் பண்ணித்தான் ஜமீன் ஆட்சியே கூடாது அப்படீன்னு இப்ப ஒரு புது ஏற்பாட்டை....''

''பிள்ளைவாள்! நீங்களுமா இப்படி ஆரம்பிச்சுட்டீக! நிறுத்தி வையுங்க!''

''சே! சே! நான் அப்படிச் சொல்லலை, எசமான்! நாடு இருக்கிற நிலைமையைச் சொன்னேன் ஒரு பேச்சுக்கு! மற்றப்படி இந்தக் கொள்ளைக்காரப் பயலுகளை ஒழிக்கக் கட்ட வேண்டியது நம்முடைய முதலாவது முழு முதற் கடமையாச்சே!''

''குமாஸ்தாப் பிள்ளைவாள்! அதையெல்லாம் பத்தி இப்ப என்னத்துக்குப் பேசுறீக! எந்த ராசா எந்தப் பட்டணம் போனா நம்பளுக்கு என்ன? இந்த வில்வநாதனை என்ன பண்ணலாம் — அதைச் சொல்லுங்க நீங்க! வேறே பேச்செல்லாம் நமக்கு என்னத்துக்கு?''

இவ்வாறு விஷயத்துக்கு வந்தார் வல்லாள வேலர்.

''எசமான்! அதைப் பற்றித்தான் எல்லாம் விவரமாச் சொல்லியிருக்கேனே! பயலை விட்டு வைக்கக் கூடாது. அதுக்கு வேண்டிய காரியத்தை உடனேயே......''

''அது சரி, பிள்ளைவாள்! நம்ப பொன்னுத்துரை ஒரே கிடு கிடாய நமன்னு இருக்கானே அதுக்கு என்ன சொல்லுறீக?''

''அதுதான் சொன்னேனே. அவரு வடக்கே எங்கேயாவது போயி ஒரு ரெண்டு மூணு மாசத்துக்குத் தங்கிப் பிட வேண்டியதுதான்!''

''அதை அவனிடத்திலே சொன்னதுக்குத்தான் அவன் தெக்கும் வடக்குமாப் பாத்து முழிச்சுக்கிட்டே நின்னான். எல்லாம் நீங்க வந்து ஒத்திகை பண்ணுவீகன்னு ஒரு போடு போட்டு வைச்சிருக்கேன்!''

''நானு! என்னை எதுக்கு இழுக்கீக?'' என்று கேட்டார் பஞ்சவர்ணம்.

''நீங்க வந்து நேரிலே சொன்னாத்தான் அவனைத் தயார் பண்ணமுடியும் போலிருக்கு! அளவுக்கு மிஞ்சின பயங்காளியா இருக்கானே அவன்! அதுக்குத்

தருந்தாப்பிலே இப்ப இந்தக் கொள்ளைக்காரனுக வேறே எச்சரிக்கை செஞ்சுட்டானுக! எனக்கே ஒண்ணும் ஓடலே பிள்ளைவாள்!'' என்று வார்த்தைகளை இழுத்தார் வல்லாளவேலர்.

''எசமான்! ஏதோ காதும் காதும் வைச்சாப்பிலே சங்கதியைமுடிப்பீகன்னு பார்த்தேன். நீங்க என்னடான்னு நம்ப பேரையும் இப்ப இழுத்து விட்டிருக்கீகளே!'' என்று வார்த்தைகளைத் தாளம் போட்டார் பஞ்சவர்ணம்!

''சரிதான் போங்க! நீங்களும் 'பாக்' அடிக்கிறீகளா?''. என்று பஞ்சவர்ணத்தை மடக்கிப் பிடித்தார் வல்லாளவேலர்.

''பாக் அடிக்கலே எசமான்! பயப்படவேண்டியதுக்குப் பயப்படணும் அப்படீன்னு திருவள்ளுவரே சொல்லியிருக்கார்! 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்று நம்ப வக்கீலையா அடிக்கடி சொல்லுவாக! அசட்டுத் துணிச்சல் கூடாது பாருங்க. ஏன் அப்படிச்சொல்கிறேன் தெரியுமா? இந்த வில்வநாதனுக்கும் வேணுலிங்கத்துக்கும் ஒரு சம்பந்தம் இருக்கு எசமான்!''

வக்கீல் குமாஸ்தா இப்படிச் சொன்னதும், வல்லாளவேலர் சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''அடித்தப்பல்! எப்படி எப்படி! வேணுலிங்கத்துக்கும் வில்வநாதனுக்கும் சம்பந்தமா! நான்கூட நினைச்சேன் பிள்ளைவாள்! அப்படி ஏதாவது இருக்குமோன்னு எனக்கும் சந்தேகம் உண்டு!''

''சந்தேகம் என்ன எசமான்! நிச்சயமா உண்டு! இல்லையானா, இந்தப் பையனைப் பாதுகாக்கணும் அப்படீன்னு அந்தத் திருட்டுப் பய எதுக்காக இத்தனை முயற்சி எடுக்கணும்? சொல்லுங்க!' திருடனுடைய மனசை நல்லாத் தெரிஞ்சவங்களாச்சே நீங்க! நீங்களே சொல்லுங்க!''

பஞ்சவர்ணம் இப்படிச் சொன்னதும் வல்லாள வேலர் நிமிர்ந்து பார்த்தார். கேட்டார்: ''அதென்ன அப்படிச் சொன்னீக? எனக்கு எப்படித் திருட்டுப் பயலுக மனசு தெரியும்?''

''ஒரு தடவைக்குப் பல தடவையா அவனுகளைப் பார்த்தாச்சு நீங்க! ஒரு வகையா அவனுகளைப் புரிஞ்சுக்கிட்டிருக்கீக! இல்லையா!'' என்று சொல்லி ஒரு வளைப்பு வளைத்தார் வக்கீல் குமாஸ்தா.

''ஓ! அதுக்காகச் சொல்லுதீகளா! ஆமா! பொல்லாத பயலுகதான் ரெண்டு பேரும். எகத்தாளமாப் பேசிக்கிட்டே என்ன வேலையெல்லாம் செய்றானுக! எனக்கு ஒண்ணுமே தோணலே!''

பஞ்சவர்ணம் தமது மடியிலே வைத்திருந்த தகரக் குழலை எடுத்தார். வெற்றிலே, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலே, கிராம்பு என்ற ஐந்து உலகங்களையும் அடைத்து வைத்துள்ள பிரபஞ்சச் சிமிழ் அது! அதைத் திறந்து பார்க்கும் முயற்சியிலேயே சொன்னார்:

''அடடா! எசமான் வீட்டுக்கு வந்திருக்கிறோம் என்ற நினைப்பே இல்லாமல் நம்முடைய கை என்ன செய்யுது பாருங்க!''

''பார்த்தீகளா! நானும் இத்தனை நேரமா வெற்றிலைச் செல்லத்தைக் கொண்டு வராமத்தான் உங்களோட பேசிக்கிட்டிருக்கிறேன்! ஏய், ஏய், அந்த வெற்றிலைச் செல்லத்தைக் கொஞ்சம் கொடுத்தனுப்பு!''

இவ்வாறு உபசாரம் பண்ணிக்கொண்டே ஒரு பெரிய சமாளிப்புச் சிரிப்புச் சிரித்தார் வல்லாளர்! அப்போது வாசலுக்குள்ளே நுழைந்துகொண்டே ஒரு பெரிய கும்பிடு போட்டான் சிங்கம்புத்தூர்ச் சுப்பையா!

''ஐயாவைக் கையோட கூட்டிக்கிட்டு வரும்படி பெரிய எசமான் உத்தரவு!'' என்றான் அவன்.

''என்னவுலே அத்தனை அவசரம்?'' என்று கேட்டார் வல்லாளவேலர்.

''அம்மாவுக்கு மயக்கமாக இருக்கு. அதனாலே....''

''திடீர்ன்னு என்னலே அப்படி? இப்ப கொஞ்ச நாளாத்தான் நல்லாத் தெம்பா இருந்தாகளே!'' என்று கேட்டுக் கொண்டே நாற்காலியிலிருந்து எழுந்தார் வல்லாளவேலர்.

''யாருக்கு உடம்பு? ஜமீந்தாரிணி அம்மாளுக்கா?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்தார் பஞ்சவர்ணம்!

''பொன்னுத்துரை ஐயாவையும் உடனே கூட்டிக்கிட்டு வரும்படி ஆள் அனுப்பிச்சிருக்காக!'' என்றான் சுப்பையா.

''பொன்னுதுரைக்கா? ஏலமலைக்கா?'' என்றார் வல்லாளர் வியப்போடு.

''ஏலமலைக்கும் ஆள் போயிருக்கா? நிச்சயமாத்தானா சொல்லுதே?'' என்று குறுக்குக் கேள்வி போட்டார் வக்கீல் குமாஸ்தா.

''ஆமா, எசமான்! இந்நேரம் ஏலமலை ஐயா குதிரையிலே போய்ச் சேர்ந்திருப்பாக!'' என்றான் சுப்பையா.

வல்லாளவேலருக்கு அவரையும் மீறிய ஒரு பதற்றம் உடம்பெல்லாம் வியாபித்தது. ஜமீந்தாரிணிக்கு மயக்கமாகஇருக்கிறது என்றால், தன்னை உடனே கூப்பிட்டுவிட்டது சரி, ஆனால் பொன்னுத்துரையையும் எதற்காகக் கூப்பிட்டு விடவேண்டும்? இவ்வாறு யோசித்துக் கொண்டே சிங்கம்புத்தூருக்குப் புறப்படலானார் வல்லாள வேலர்! (தொடரும்)

தலைநகரிலே

சப்புரு

சாணக்கிய சபதம்

மனோகர் குழுவினரின் தயாரிப்பான ''சாணக்கிய சபதம்'' எண்ணிலடங்காச் சிறப்பு அம்சங்கள் கொண்ட ஓர் உன்னத நாடகம். சென்னை மக்கள் ஏற்கனவே கண்டு களித்திருந்த இந் நாடகத்தைப் பார்த்து ரசிக்கத் தில்லிவாழ்த் தமிழர்களுக்குச் சென்ற வாரம் தில்லி பைன் ஆர்ட்ஸ் கிளப்பின் ஆதரவினால் கிடைத்தது.

மனோகர் சாணக்கியராக நடித்தார் என்பதை விட, தான் ஏற்றுக் கொண்ட பாத்திரத்தோடு ஒன்றி விட்டார் என்று கூறுவதே பொருந்தும். வரலாறு கண்ட அரசியல் ஞானியை ,அர்த்த சாஸ்திரம் எழுதிய அறிஞரை, முத்ரா ராக்ஷஸம் போற்றும் மேதையைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தி விட்டார்.

தனநந்தனின் பால் மணம் மாறுப் பச்சிளங் குழந்தை விஷக் கனியை உண்டு இறப்பது மனத்தைத் தொடும் காட்சி. ராஜநந்தனாக நடிக்கும் பாலகனின் நடிப்பு இந்தக் காட்சியில் உருக்கத்தின் உச்சநிலையைத் தொட்டது.

சாணக்கியன் தன் மனச்சாட்சியுடன் போராடுவது மனத்தைத் தொடும் மற்றொரு காட்சி. நந்த வம்சத்தில் ஒவ்வொருவரையும் அழித்ததற்குச் சமாதானம் கூறுகிறார். பிறகு ஆண்டவனைக்குறித்து ''சர்வேசுவரா! என்னையும் படைத்து எனக்கு ஏன் இந்த அறிவையும் கொடுத்தாய்? அதனால்தானே இத்தனை குழப்பங்களும். இனிமேலாவது இம்மாதிரி சந்தர்ப்பங்களை எனக்கு அளிக்காதே'' என்று பரிதாபமாக வேண்டுகிறார். இந்தக் காட்சியில் மனோகரின் நடிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது.

இலங்கேசுவரன்

இத்துடன் ஐந்நூறு தரம் அரங்கேற்றப்பட்ட ''இலங்கேசுவரன்'' நாடகம் பற்றி இவ்வளவு உன்னதமாகக் கூற முடியாமைக்கு வருந்துகிறேன். நாடகத்தில்பாதிக்குமேல் நிழல் காட்சிகள். மறுபாதி கதையோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கும் காவற்கார ஜோடியின் 'காமிக்' காட்சிகள். தில்லிப் பத்திரிகைகளின் விமரிசனங்களைப் பார்த்த பின் மனோகர் மனமுவந்து உத்திகளை மாற்றிக் கொண்டது பாராட்டுக்குரியது.

நடிப்பு சம்பந்தப்பட்ட வரை மனோகர் தன்னிகரில்லாத குணச்சித்திர நடிகர்தான். ஐயமில்லை. ராவணனைச் சீதையின் தந்தையாகச் சித்திரிக்கும் ''ஆனந்த ராமாயணத்தை'' அடிப்படையாகக் கொண்ட இந்த நாடகம் ஓர் அருங் கற்பனை. மனோகர் மகோன்னதமாக நடிக்கிறார்.

வரவேற்பு வைபவங்கள்

சுரங்கத் தொழில் மந்திரி கனம் ஸி. சுப்பிரமணியத்துக்குப் புதுதில்லி நாட்டியக் கலாலயத்தார் ஒரு வரவேற்பு அளித்தார்கள். தலைமை வகித்த கே. ஸி. ரெட்டியின் இரு மருங்கிலும் திரு ஸி. என். அண்ணாத்துரையும், திரு ஸி. சுப்பிரமணியமும் அமர்ந்திருந்தது பொருத்தமாயிருந்தது.

உரையில் ஒரு ரஸமான சம்பவம் இடம் பெற்றது. முதலில் பேசிய திரு அண்ணாத்துரை ''இன்று திரு சுப்பிரமணியம் அரசியல் மேடையில் இவ்வளவு மெருகுடன் விளங்குவதற்கு அடியேன்தான் காரணம். எதிர்த்து எதிர்த்து அவர் அறிவைக் கூர்மையாக்கி விட்டேன்'' என்றார்.

சும்மா விடுவாரா சுப்பிரமணியம்?

''அண்ணா சொல்வதை ஆமோதிக்கிறேன். நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கே, டில்லி வந்ததினாலும் தனியாக வந்ததினாலும் மறுபடி என் அறிவு மழுங்கி விடுமோ என்று பயந்திருந்தேன். நல்ல வேளை அவரும் இங்கே வந்து விட்டார் என் நன்மையை உத்தேசித்து.

''ஒரு நல்ல விஷயம்: நண்பர் அண்ணா என் வருகையால் 'நம் நாடு' முன்னேறும் என்று கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும், குறிப்பாக, இதுகாறும் 'தமிழ் நாடு' 'திராவிட நாடு' என்றே கூறி வந்த அவர் டில்லி வந்த ஒரு வாரத்துக்குள் 'நம் நாடு' என்று பரந்த நோக்கம் கொள்ளும் அளவுக்கு மாறியது வரவேற்க வேண்டிய அம்சமல்லவா?'' என்று பலத்த கரகோஷத்துக்கு இடையே கூறி அமர்ந்தார்.

ஃ ஃ ஃ

''குற்றாலத்து அருவியில் குளிப்பது போன்ற குளுமையான அனுபவம் ஏற்படுகிறது தில்லித் தமிழர்களைக் கண்டு விட்டால்'' என்று திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் சிலேடையாகக் கூறினார்கள் என்று நினைக்கிறேன். தமிழ்ச் சங்கம் தமிழ் எழுத்தாளருக்கு அளித்த வரவேற்பில். உண்மையில் சோமு டில்லி வெய்யிலில் பாகாயுருகித் தெப்பமாய் நனைந்திருந்தார். 'கலி'யும், கு. நா. குமாரஸ்வாமியும், கா.ஸ்ரீ.ஸ்ரீ.யும் முறையான தமிழ் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். விழா இனிது முடிந்தது.



''எங்கப்பா பேசஆரம்பித்தால் தேசம் பூராவும் கேட்பார்கள்!''

அடேயப்பா! அவர் ரொம்ப முக்கியமான ஆசாமி போல் தோணுது. என்ன உத்தியோகம்?''

'ரேடியோ. அறிவிப்பாளராக இருக்கிறார்!''

புதுவெள்ளம்



அகிலன்

அத்தியாயம் நாற்பத்தோன்பது

இடியோசை கேட்டது!

வழக்கத்தைவிட அன்றைக்குக் கடல் அலைகள் அதிகமான வீறு பெற்றுக் கொந்தளித்துக் கொப்பளித்துக் குமுறிக் கொண்டிருந்தன. கன்னங் கரிய மேகத் திரள் வானமெங்கும் விரைந்து கவியத் தொடங்கியது. ஊதைக் காற்று வேறு 'சில்'லென்று கடற்புறத்திலிருந்து புறப்பட்டது. ஆகவே சென்னைக் கடற்கரையில் அவ்வளவாகக் கூட்டம் இல்லை.

சாலையோரமாகக் காரை நிறுத்தி விட்டுச் சித்திராவும் முருகையனும் மணலில் இறங்கி நடந்தார்கள். இருவருடைய நினைவுகளும் அவரவர்களிடம் இல்லை. ஒன்றுமே பேசிக் கொள்ளாமல் முன்பு வழக்கமாகச் சந்தித்த அந்தப் பழைய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கட்டை மரத் தோணியின் மீது அருகருகே உட்கார்ந்தார்கள்.

பொங்கும் கடலைக் கவனித்தான் முருகையன். காரணமின்றி அவன் மனம் அந்தக் காட்சியில் கலவரமடைந்தது. ஆனால் சிறிதுகூட அச்சமின்றி, அந்த நிலையிலும் சில மீனவர்கள் கடலுக்குள் கிளம்புவதற்குக் கட்டை மரத்தைத் தள்ளிக் கொண்டிருந்தார்கள். சிறுவன் ஒருவன்; அவனுடைய தகப்பன் மற்றொருவன், அவனுக்கும் தகப்பன் இன்னொருவன், ஆக மூன்று பேர் ஒன்றாக மீன் பிடிக்க முனைந்து விட்டார்கள்.

அந்தச் சமயத்தில் பெரிய மீன்கள் கடலின் மேல் மட்டத்துக்கு வருவதுண்டாம். அவற்றைப் பிடிப்பதற்கு அச்சத்தை உதறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இடுப்பில் ஒரு கோவணமும் தலையில் ஒரு துணிச் சுற்றலுமே இருந்தன. கரையிலிருந்த ஒரு பெண் பிள்ளை கைக் குழந்தையோடு அவர்களை வழியனுப்பிக் கொண்டு நின்றாள்.

''சின்னப் பயலே, பத்திரமாப் போய் விட்டு வாடா!'' என்று தன் மகனைப் பார்த்துக் கத்தினாள் அவள்.

''சரி, ஆத்தா!'' என்று திரும்பிக் கத்தினான் அவன்.

அவர்கள் மூவரும் படாத பாடுபட்டு, பல முறை கரைக்கும் கடலுக்குமாக இழுபட்டு, கடைசியில் நீருக்குள் முன்னேறிச் சென்றார்கள். அவர்களுடைய தோற்றம் கண்ணுக்கு மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, தன் குடிசைக்குத் திரும்புவதற்காக மணலில் நடந்தாள் பெண்பிள்ளை.

வரும் வழியில் உட்கார்ந்திருந்த இருவரையும் வியப்போடு உற்றுப் பார்த்தாள் அவள்.

சித்திராவுக்கு அவளுடன் ஏதாவது பேச வேண்டும் போலிருந்தது.

''ஆமாம், அலை அதிகமாயிருக்கிற இந்தச் சமயத்தில் கூடவா கடலுக்குள் போவார்கள்?''

''என்னம்மா செய்யச் சொல்றே? எனக்குப் பிறந்த பிள்ளை முதல்கொண்டு அவனோட பாட்டனார்க் கிழவர் வரையிலே ஒரே மாதிரிப் பிடிவாதக்காரங்களாயிருக்காங்க! தடுத்துச் சொன்னால் கேட்கிறாங்களா? அலை மோதுறதைப் பார்த்தால் பயமாத்தானிருக்குது.''

''பாவம்!'' என்றாள் சித்திரா.

''என்னோட பாவத்துக்காகவும் இந்தச் சிசுவோட பாவத்துக்காகவுந்தான் அவுங்க இப்படிக் கஷ்டப் படுறாங்க. அவுங்களை எப்படி நான் குத்தம் சொல்ல முடியும்?''

தனை விட்டு ஆண்களைப் பற்றிப் பெருமையோடு இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு, தெய்வம் அவர்களைக் காப்பாற்றிக் கொண்டு வந்து விடும் என்ற நம்பிக்கையை வெளியிட்டு விட்டு, மேலே நடந்து சென்றாள் அவள்.

அவள் சிறிது தூரம் சென்றவுடன், ''சித்திரா!'' என்று மெல்ல அருகிலிருந்தவளை அழைத்தான் முருகையன். அவள் திரும்பினாள்.


'' 'உண்மையான காதல்' என்று நீ ஏதோ கேட்டாயல்லவா? அதைப் பற்றி இப்போது எனக்குச் சிறிது புரிகிறது. இந்த மீனவப் பெண்ணின் பேச்சைக்கேட்ட பிறகு, இவள் வாழ்க்கையில் அது இருக்கக் கூடுமென்று நினைக்கிறேன்.''

''அத்தான்! நீங்கள் என்னை விளையாடுகிறீர்களா?'' என்று கோபமாகக் கேட்டாள் சித்திரா.

''கொஞ்சம்கூட இதில் விளையாட்டு இல்லை, சித்திரா! 'காதல்' என்கிற சொல்லை இவளோ, இவளுடைய கணவனோ இதுவரையில் ஒரு முறைகூட உச்சரிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் அந்தச் சொல்லின் பொருள் இவளுடைய வாழ்க்கையில் கலந்திருக்காவிட்டால் இவள் இப்படிப் பேசியிருக்க மாட்டாள்.''

சித்திராவுக்கு அவனுடைய பேச்சின் பொருள் விளங்கவில்லை. முருகையன் தொடர்ந்து பேசினான்:—

''இவளுக்காகவும் இவளுடைய குழந்தைக்காகவும் இவள் கணவன் காற்றையும் கடலின் சுற்றத்தையும் பொருட்படுத்தாது மீன்பிடிக்கப் போகிறான். அவன் போவதால் அவனோடு அவன் பிள்ளையும தகப்பனும் கிளம்புகிறார்கள். இவளோ அவர்கள் பத்திரமாகத் திரும்பி வரவேண்டுமே என்ற கவலையோடு அவர்களுக்கான வேலைகளைக் கவனிப்பதற்குக் குடிசைக்குப் போகிறாள். இங்கே காதல் பாசமாக




வளர்கிறது; கடமையாக மலர்கிறது; தியாகமாகவும் கனிகிறது. துன்பத்தில் இன்பம் காணவும், மரண பயத்தை மறக்கச் செய்யவும், வறுமையை எதிர்த்துப் போராடவும் அது சக்தி தருகிறது.''

''அப்படியானால்... நான்..... நான் வந்து.... என்னை நீங்கள்....'' என்று தடுமாறினாள் சித்திரா.

முருகையன் சிரித்தான். ''இல்லை சித்திரா! உன்னையும் அவளையும் நான் ஒப்பிட்டுப் பேசவில்லை. நீ வீட்டில் கேட்ட கேள்விக்கு விளக்கம் தேடிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் இவன் வந்து சேர்ந்தான்.''

''நீங்கள் வந்து என்னை உண்மையிலேயே விரும்பினால் இந்த ஆராய்ச்சியெல்லாம் எதற்கு?''

'' 'உண்மையிலேயே' என்று நீ சொல்கிறாயல்லவா? அந்த உண்மை எது என்று யோசனை செய்து பார்க்க வேண்டாமா?''



''அத்தான்! நடந்ததையெல்லாம் நினைத்துப் பாருங்கள் அத்தான்!'' என்று தழுதழுத்த குரலில் கூறினாள் சித்திரா.

''நானும் நினைத்துப் பார்க்கிறேன்; நீயும் நினைத்துப் பார்'' என்றான் முருகையன். பிறகு, ''நீ ஏன் என்னிடம் இவ்வளவு அன்பு செலுத்துகிறாய்?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரியாது; உண்மையிலேயே தெரியாது!'' என்றாள் சித்திரா.

''நினைத்துப் பார்! நீ பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவள்; நான் பட்டிக்காட்டு மண்ணில் பிறந்தவன். நீ எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளவள்; நான் எதுவுமே இல்லாதவன். நீ பணத்தைத் தேடிப் பணத்தை மதிக்கும் சூழ்நிலையில் உருவானவள்; நான் மனிதரைத் தேடி மனிதரை மதிக்கும் சூழ்நிலையில் உருவானவன்.— எப்படி என்னிடம் உனக்கு அன்பு பிறந்தது?''

''எப்படிக் கேட்டாலும் எனக்கு அது தெரியாது....நீங்கள்தான் சொல்லுங்களேன்! எப்படி உங்களுக்கு என்னிடம் அன்பு பிறந்தது?''

யோசனை செய்தான் முருகையன். பொதுவாக எத்தனையோ பேர் காரணம் தேடாத ஒரு காரியத்துக்கு அவன் காரணம் தேடினான்:— 'ஒரு வேளை இருவரிடமும் இருந்த அடிப்படை வேறுபாடுகளே காரணமாக இருக்குமோ? ஆண்மை பெண்மையை நாடுவதும், பெண்மை ஆண்மையை நாடுவதும் இந்த வேறுபாட்டுக் கவர்ச்சியால் ஏற்படுவது தானே? அதேபோல் மற்ற எல்லா அகப்புற வேறுபாடுகளுமே இருவரையும் ஒருவரிடம் ஒருவர் அன்புகொள்ளத் தூண்டியிருக்கலாமல்லவா?' யோசித்து விட்டு முருகையன் பதில் கூறினான்:—

''காரணங்களை என்னாலும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை இயற்கையோடு கிராமச் சூழ்நிலையில் ஒன்றி வளர்ந்த எனக்கு, உன்னுடைய இயற்கையழகும், நாகரிகப் போக்கும் பிடித்திருக்கலாம். கிராமத்தில் நான் அது வரை காணாத, காண முடியாத, பெண்ணாக நீ முதன் முதலில் எனக்குக் காட்சியளித்தாய். என்னோடு நீ கலகலப்பாகப் பேசினாய்; நெருங்கிப் பழகினாய்; தோட்டத்துக்கு என்னோடு அன்றைக்கு நீ வந்த நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியாது....''

அதே வேளையில் சித்திராவும் தனக்கு அந்த நாட்களில் ஏற்பட்ட பழைய நினைவுகளை எண்ணிப் பார்த்தாள். சென்னை நகரத்தில் அவள் அதுவரை கண்டிராத இளைஞனாக அவன் தோற்றமளித்தான். அவனுடைய அடக்கம், எளிமை, வெகு

ளித் தன்மை, அச்சமின்மை, துணிவு இவ்வளவும் அவளுக்குப் பிடித்திருந்தன. இவற்றுக்கும் மேல் அவன் உயிர்த் துடிப்பும் வலிமையும் மிகுந்த, படித்த வாலிபனாகவும் இருந்தான்.

''அத்தான்! அதெல்லாம் உங்களுக்கு நினைவில் இருக்கிறதா?'' என்று அன்புத் துடிப்போடு கேட்டாள் சித்திரா.

''இன்னும் உன்னைப் பற்றி எவ்வளவோ விஷயங்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றன'' என்றான் முருகையன். ''எந்த வீட்டில் எனக்கு அன்பும் மதிப்பும் மரியாதையும் முன்பு கிடைக்கவில்லையோ, எந்த வீட்டாரால் முன்பு நான் ஏழை என்பதால் புறக்கணிக்கப் பட்டேனோ அதே வீட்டில் இப்போது நீ எனக்கு ஏற்றம் தந்திருக்கிறாய். இதே கடற்கரையில் நான் கடலை விற்றதைக் கண்டபிறகும் உன்னுடைய அன்பு மாறவில்லை. தெருவில் ரிக்ஷா இழுத்துத் திரிந்த என்னை, அதனாலேயே என் தகப்பனாரைக் கொன்றுவிட்ட என்னை, யாருமில்லாத ஒரு நாதியற்றவனை நீ மனிதன் என்று மதித்தாய். நான் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அவ்வளவு வசதிகளுக்கு நீ என்னை ஆளாக்கியிருக்கிறாய். இவ்வளவையும் எப்படி என்னால் மறக்க முடியும் சித்திரா? நான் நன்றி மறக்காதவன்!''

முருகையனின் குரல் கம்மியது. தொடர்ந்து மேலே பேச முடியாமல் அவன் தத்தளித்தான். சித்திரா அவனுடைய கரங்கள் இரண்டையும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அப்போது இருண்டு கொண்டு வந்த வானத்திலிருந்து ஓர் இடிச் சத்தம் கிளம்பி அண்டத்தையே அதிரச் செய்வது போல் முழக்கம் செய்தது. சித்திரா படீரென்று அவன் கரங்களை விட்டுவிட்டு நடுநடுங்கினாள்.

அத்தியாயம் ஐம்பது

மழையும் பெய்தது

இடியோசையால் வெலவெலத்துப் போன சித்திராவுக்குச் சிறிது நேரம் ஆறுதல் கூறி விட்டு, கடலையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான் முருகையன். கடல் மீது தோணிவிட்டுச் சென்ற மீனவர்களின் நினைவு வந்து விட்டது அவனுக்கு. அதைத் தொடர்ந்து ரிக்ஷாக்கார முனியாண்டியின் நினைவும் பெட்டிக்கடை நடேசனின் நினைவும் வந்தன.

இடியும் புயலும் மழையும் வந்து விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? ஏற்கனவே அவர்களுடைய வாழ்வை அலைக்கழித்துள்ள இடி, புயல், மழை இவற்றிலிருந்து அவர்கள் எப்படித் தப்பப் போகிறார்கள்?

''அத்தான்! எனக்குப் பயமாக இருக்கிறது அத்தான்! நாம் வீட்டுக்குப் போகலாமா?'' என்றாள் சித்திரா.

''இதுவரையில் ஒரு பாதிதானே பேசியிருக்கிறோம்; இன்னொரு பாதியும் இருக்கிறது. முழுவதும் பேசிவிட்டுப் போகலாமே.''

''வீட்டுக்குப் போய் அமைதியாகப் பேசலாமே!''

''இல்லை! சித்திரா! உன்னிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கேட்க வேண்டியதைக் கேட்டு விட்டால்தான் எனக்கு அமைதி ஏற்படும்.''

''இனியும் கேட்பதற்கு என்ன இருக்கிறது?'' என்றாள் சித்திரா திகைப்புடன்.

''இனி மேல்தான் எல்லாமே இருக்கிறது'' என்றான் முருகையன். ''நாம் இன்னும் நம் வாழ்க்கையைத் தொடங்கவில்லை. எந்தப் பொறுப்பையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. தொடங்கிவிட்டால் முடிவு வரையில் மனமொன்றி இணைந்து செல்ல வேண்டும். நல்லவேளையாக அதற்கான சோதனைகள் இப்போதே தோன்றி விட்டன.''

''சோதனைகளா?''

''ஆமாம்'' என்றான் முருகையன். ''முருகையன் கடலை விற்ற போதும் நீ அவன் மீது அன்பு செலுத்தினாய். அவன் ரிக்ஷா இழுத்த போதும் நீ அன்பு செலுத்தினாய். அந்த அன்புக்குத்தான் காதல் என்று பெயர் என்றால், நாளைக்கு முருகையன் உன் கணவனாகி விட்ட பிறகு அவன் கடலை விற்கும் நிலைக்கோ, ரிக்ஷா இழுக்கும் நிலைக்கோ வந்துவிட்டால் நீ அவனைக் காதலிப்பாயா?''

''அத்தான்!'' பதறினாள் சித்திரா. ''வேண்டாம், அத்தான்! இந்தமாதிரிச் சோதனைகள் இனி உங்களுக்கு எப்போதும் ஏற்படவே வேண்டாம். எந்தக் குறைவுமே நமக்கு இனி வராது. மேலும் மேலும் வாழ்க்கையில் நீங்கள் உயர்வடையப் போகிறீர்கள். ஒரு கவலையும் உங்களுக்கு வேண்டாம், அத்தான்!''

''சித்திரா! என் கேள்வியைப் புரிந்து கொண்டு பதில் சொல்! நான் எந்த வாழ்க்கையை மேற்கொண்டாலும் நீ அதற்கேற்றாற் போல் உன்னை மாற்றிக் கொள்ள முடியுமா?''

அவனுடைய குரலில் ஒலித்த உறுதி அவளைத் திடுக்கிட வைத்தது. அவள் பதில் பேசவில்லை. மிகவும் பயங்கரமான விஷயங்களை அவன் பேசுவது போல் அவளுக்குத் தோன்றியது.

''உண்மையான சோதனைகள் எனக்கு இப்போது தான் ஏற்பட்டிருக்கின்றன. நான் கடலை விற்ற போதும் ரிக்ஷா இழுத்த போதும் என்னை ஒரு நல்ல மனிதனாகவே நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போது யாருக்கும் நான் வஞ்சனை செய்யவில்லை; யாரிடமும் நான் திருடவுமில்லை; பொய் சொல்லவுமில்லை. ஆனால் இப்போதோ நான் திருட்டு, பொய், வஞ்சனை இவற்றுக்கெல்லாம் உடந்தையாக இருந்து கொண்டிருக்கிறேன். உன்னுடைய அண்ணாவின் சொல் கேட்டு நடக்க வேண்டுமென்றால் என்ன பொருள் தெரியுமா? கௌரவமான மனிதனாக வெளிவேஷம் போட்டுக் கொண்டு, தரக் குறைவான செயல்களால் இந்தச் சமூகத்துக்குத் தீமை செய்ய வேண்டும்.''

சித்திராவின் முகம் சிறிது சிறிதாகச் சிவந்து கொண்டு வந்தது. அதை அவன் கவனிக்கத் தவறவில்லை.

''சித்திரா! உன்னுடைய அழகு என் கண்களை விட்டு என்றைக்குமே அகலாது. உன் அன்பு நினைக்கும் போதெல்லாம் எனக்கு இன்பம் தருகிறது. ஆனால் இந்த அழகுக்கும் அன்புக்கும் அப்பால் ஆத்மா என்று ஒன்று இருக்கிறது. நான் கூடிய வரையில் எதிலும் உண்மையோடும் மனச் சாட்சியோடும் நடந்து கொள்ள விரும்புகிறவன். நான் உன்னையும் விரும்புகிறேன்; உண்மையையும் விரும்புகிறேன்.''

'உன்னையும் ..... உண்மையையும்..' என்று தனக்குள் கூறிக் கொண்டாள் சித்திரா. ''எந்த உண்மையை நீங்கள் சொல்கிறீர்கள்?''

''பணத்தை விட, பங்களாவைவிட, காரை விட, இன்னும் உலகத்திலுள்ள எல்லாச் செல்வங்களையும் விட நான் உயர்ந்த செல்வமாக மனிதர்களை நினைக்கிறேன். இதையே நான் உண்மை என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். மற்றச் செல்வங்களெல்லாம் மனிதர்களுக்குக் குற்றேவல் செய்யும் அடிமைகளே தவிர, மனிதர்கள் அவைகளுக்கு அடிமைகளல்ல. பேராசையால் தாங்களும் அந்தச் செல்வங்களுக்கு அடிமை



களாகி மற்றவர்களையும் அடிமைப் படுத்துவதை நான் விரும்பவில்லை.''

''அப்படியானால் ....?''

''நீ என்னை அடிமையாக்க விரும்பவில்லை; ஆனால் உன் அண்ணா என்னை ஏற்கனவே ஓரளவுக்கு அடிமையாக்கி விட்டார். உன்னை எனக்குக் கொடுத்து முழு அடிமையாக்கத் திட்டமிடுகிறார்.''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''அதை எனக்குச் சொல்லத் தெரியவில்லை. உன் அண்ணா, அண்ணி, அம்மா இவர்களை எதிர்த்துக் கொண்டு நீ என்னோடு வர வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். அப்படி வந்து விடுவதோடு நம் சிக்கல் தீர்ந்து விடாது. வாழ்க்கையை அதன் பிறகுதான் நாம் தொடங்க வேண்டும்.''

தலை சுற்றுவது போலிருந்தது சித்திராவுக்கு. தன் இரு கரங்களாலும் தலையை இறுகப் பற்றிக் கொண்டாள். ''பிறகு நான் என்னதான் செய்ய வேண்டும்?''

''வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை நான் பொருட் படுத்தாதவன். நாளைக்கே அவசியமானால் ஒரு கூரைக் குடிசையில் நான் வாழ்வேன். ஆனால் ஒரு போதும், எனக்காகவும் உனக்காகவும் கூட, மனச்சாட்சிக்கு விரோதமான ஒன்றைச் செய்ய மாட்டேன்... குமரவேல் ஒரு குடும்பத் தலைவியின் சாவுக்குக் காரணமாக இருந்தவர். அவர் குற்றத்தை மூடி

மறைக்க இன்னொரு குடும்பத் தலைவனைப் பழி வாங்கும் பாதகச் செயலுக்கு நான் உடன்பட மாட்டேன்! ... அதனால் என்ன வந்தாலும் சரி!''

''என்ன வந்தாலும் சரியா?'' என்று ஆத்திரத்தோடு கேட்டாள் சித்திரா. ''என்னை விட உங்களுக்கு அந்தப் பெட்டிக் கடைக்காரன் பெரியவனாகி விட்டானா?'' என்றாள்.

''அவன் பெரியவனில்லை; சத்தியம் பெரியது.''

''இதுதான் உங்கள் முடிவா?'' என்று கலங்கிய குரலில் கேட்டாள் சித்திரா.

''ஆத்திரப்பட வேண்டாம், சித்திரா! நன்றாக யோசித்துப் பார்.''

''யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? என்னைப் பிச்சைக்காரியைப் போல் வாழச் சொல்கிறீர்கள். சொத்தையும் சுகத்தையும் உதறி விட்டுக் குடிசையில் அடைபட்டுக் கிடக்கச் சொல்கிறீர்கள். உங்களைச் சொல்லிக் குற்றமில்லை! எல்லாம் நான் செய்த தவறு! எனக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்! .... ரிக்ஷா இழுத்தவரை லட்சாதிபதியாக்கினேன் பாருங்கள்! கடலை விற்றவருக்குக் கார் கொடுத்தேன் பாருங்கள்! ....''

தன் ஆத்திரம் தீர மேலும் மேலும் பேசிக் கொண்டு போனாள் சித்திரா. அழகே உருவான ஒரு பெண்ணிடமிருந்து இப்படியெல்லாம் சொற்கள் வெளிவரக் கூடுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. அதே சமயம் அவளுடைய உணர்ச்சிகளைக் குற்றமென்றும் அவன் கருதவில்லை. 'இருவரும் இரு வேறு துருவங்கள். பண்பால், பழக்க வழக்கங்களால், வாழ்க்கை நிலையில் முற்றிலும் மாறுபட்ட இருவேறு உலகங்களைச் சேர்ந்தவர்கள்' என்று நினைத்துத் தன் அமைதியைக் காத்துக்கொள்ள முயன்றான்.

அவன் அவளுக்காக வருத்தப்பட்டானே தவிர அவள் மீது கோபம் கொள்ளவில்லை. ஆனால் அவனுக்குப் பதிலாக வானம் கோபம் கொண்டு குமுறியது. மின்னல் வெட்டிப் பெருமழையாய்ப் பெய்யத் தொடங்கியது. சித்திரா திடீரென்று எழுந்தாள்.

''நான் ஏமாந்து விட்டேன்! நான் ஏமாந்து விட்டேன்!'' என்று கத்திக் கொண்டே, வேகமாகத் திரும்பிச் சாலையில் நின்ற காரை நோக்கி ஓடினாள். தனியாகத்தான் ஓடினாள். முருகையனைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. அவன் எழுந்து நின்றதைப் பொருட்படுத்தவுமில்லை.

அவள் மழையில் நனைந்துகொண்டு ஓடுவதை வருத்தத்துடன் கவனித்துக் கொண்டு நின்றான் முருகையன். இடைவெளி அதிகமாகிக் கொண்டே வந்தது. கரு வண்டு போல் காரும் பறந்தது.

தன்னந் தனியாகக் கடலோரம் நின்றான் முருகையன். காற்று வீசியது கடும் புயல் போல். மின்னல் வெட்டியது கண்ணைப் பறிப்பது போல். மழை கொட்டியது வானம் பிளந்தது போல்.

கடல் அலைகள் ஆரவாரம் செய்து சீறின. படமெடுக்கும் ஆயிரமாயிரம் பாம்புகளைப் போல் அவை வெஞ்சினத்துடன் கரையில் மோதின. முருகையன் மட்டிலும் மௌனமாக நின்றான்.

காற்று, மழை, மின்னல், இடி, அலை இவற்றில் எதையுமே அவன் பொருட்படுத்தாமல் அமைதியாக நின்றான். என்றென்றும் நிலைத்து நிற்கும் சத்தியத்தின் அணுத் துளி போல், மழையால் நனைக்க முடியாத, காற்றால் கலைக்க முடியாத, இடியால் தகர்க்க முடியாத பரம்பொருளின் சின்னஞ்சிறு வாரிசு போல் அவன் நின்று கொண்டே இருந்தான்.

மழை பெய்து கொண்டே யிருந்தது.



இரண்டாம் பாகம் முற்றிற்று



"தச்சு வேலையில் சிறந்தவன்" என்று அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.
நான் பலவீனமடைந்து சரியாக வேலையே செய்ய முடியவில்லை. எங்கள் மேஸ்திரி தினமும் இரண்டு வேளை போர்ன்-வீடா அருந்தச் சொன்னார்.
அவருடைய டாக்டரும் அதையே சொன்னாராம். நானும் அதைக் கடைப் பிடித்தேன். சக்தியும் பலமும் பெற்று ஊக்கத்துடன் வேலை செய்ய முடிந்தது.
இப்பொழுது அதிக வேலைகூட என்னால் செய்ய முடிகிறது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் இவ்வளவு திறமையாக வேலை செய்வதற்கு சக்தியளித்தது
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்



காணாமல் போன கடிதங்கள்

கொக்கி

இந்திய உள்நாட்டு மந்திரி திரு லால்பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு, கலப்படம் கார்மேகம் செட்டியார் எழுதிக் கொள்வது:

கனம் மந்திரியாரே! கலப்பட வியாபாரத்தில் எனக்கு 'ஓரளவு' அனுபவம் உண்டு. 'கார்மேகம் செட்டியார் நெய்' என்றாலே ஜனங்கள் காத தூரம் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடுவது வழக்கம். இந்த அனுபவத்தோடு இதை எழுதுகிறேன். சில தினங்களுக்கு முன், லோக சபையில் தாங்கள், அரசாங்க ஊழியர்களுக்கு விடுத்த கடும் எச்சரிக்கையைப் பார்த்தேன். அதில், ''அரசியல் கட்சியினர்களுடன் அரசாங்க ஊழியர்கள் கலக்கக் கூடாது' என்று அறிவித்திருக்கிறீர்கள். கலப்படத்தில் இப்படிக் கூட ஒரு விதம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. அரசாங்க ஊழியர்களுடன் அரசியல் கட்சியினர் கலப்படமாவதைத் தடுக்கத்தான் வேண்டும். ஆனால் இப்படித் தடுப்பதால் காங்கிரஸ் கடையைக் கட்ட வேண்டியதாகி விடுமே! அதற்கு என்ன யோசனை வைத்திருக்கிறீர்கள்? காங்கிரஸ்காரர்கள் அரசாங்க ஊழியர்களிடம் நெருங்குகிறார்களே தவிர, அவர்கள் இவர்களோடு நெருங்குவதாகத் தெரியவில்லை. இந்தக் கலப்படம் மட்டக் கடலை எண்ணெய் மட்ட நெய் இவற்றை விடப் பலப்பல மடங்கு பொதுமக்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடியது தான். இதில் சந்தேகமில்லை. ஆகையால், அரசாங்க ஊழியர்களுக்கு விடுத்த எச்சரிக்கையை நீங்கள் காங்கிரசுக்கு விட்டிருந்தால் மிகவும் பொருத்தமாயிருந்திருக்கும். கலப்படம் இல்லாத சுத்தமான பொருள்களுக்கு 'ஆக்மார்க்கு' முத்திரை வைப்பது போல் அரசாங்க ஊழியர்களுக்கும் 'ஆக்மார்க்' சின்னங்களை வழங்கி விட்டால் அப்புறம் அவர்களை அரசியல்வாதிகள் ஏன் நெருங்குவார்கள்? கலப்படமும் ஏற்படாது. இந்த யோசனையை நீங்கள் ஏற்பதாக இருந்தால் எனக்கு ஒன்றும் தரவேண்டாம். என் கடையில் ஒரு முறை நெய் வாங்கி ஆதரித்தால் போதும்! -கலப்படம் கார்மேகம் செட்டியார்

ரஷ்யத் தலைவர் திரு குருஷேவுக்கு ஓர் 'அடுத்த வீட்டுக்காரர்' எழுதுவது:

அடுத்த வீட்டுக்காரன் என்ற முறையில் அடுத்த வீட்டில் நடக்கும் புருஷன் மனைவி சண்டையைத் தினந்தோறும் நான் பார்த்து வருகிறேன். அதனால் பல இரவுகள் என் தூக்கத்தை நான் தியாகம் செய்வதும் வழக்கம். பல்கேரியாவில் நீங்கள் செய்த ஒரு பிரசங்கத்திலிருந்து உங்களுக்கும் இந்தக் கணவன் மனைவி சண்டை அனுபவம் உண்டு என்பது தெளிவாயிற்று. ஒருவேளை என்னைப் போல, நீங்களும் ஓர் அடுத்த வீட்டுக்காரராக இருந்தீர்களோ என்னவோ! அமெரிக்கா — ரஷ்யா தகராறு பற்றி நீங்கள் குறிப்பிடும் போது, அதைக் 'கணவன்-மனைவி சண்டை' என்று வருணித்தீர்கள். வருணித்து விட்டு, ''பொல்லாத மனைவி, பொல்லாத கணவன் நிலையில் இருக்கிறது இந்த இரு வல்லரசுகளும். இவர்கள் கோரமாகச் சண்டை போட்டுக் கொண்டால் இவர்களுடைய குழந்தைகளின் கதி என்னவாகும் என்பதை எண்ணிப் பாருங்கள்!'' என்று கூறினீர்கள்.

நீங்கள்தான் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதோடு சற்றே சிறிது, அடுத்த வீட்டுக்காரர்களின் குழந்தைகளுக்கும் தங்களுடைய வீட்டுச் சண்டையால் ஏன் தொல்லை விளைய வேண்டும் என்பதையும் தாங்கள் எண்ணிப் பார்த்தால் நலம். தாங்கள் போட்டுக் கொள்ளும் கணவன் மனைவி சச்சரவு பற்றி நான் மட்டுமல்ல, ஊர் சிரிக்கிறது. ஏன் உலகமே சிரிக்கிறது!

'அடுத்த வீட்டுக்காரன்'

திருப்பதி வேங்கடேசுவரா கல்லூரி நிர்வாகத்தினருக்கு, ஒரு பெற்றோன் எழுதியது:

அன்பான கல்வியாளர்களே! இந்தக் கல்வி ஆண்டிலிருந்து சர்வகலாசாலையைச் சேர்ந்த இன்ஜினீயரிங் கலாசாலையில் 80 சதவிகிதம் திறமை அடிப்படையில்தான் மாணவர்களை நுழைய விடுவதென்று நீங்கள் செய்திருக்கும் முடிவு கேட்டு, அப்படியே மூர்ச்சையடைந்தேன்.

இது போதாதென்று வைத்தியக் கலாசாலையிலும் திறமையின்மைக்கு நீங்கள் கதவைச் சாத்தப் போவதாகத் தெரிகிறது. இதுவும் மூர்ச்சையடைய வேண்டிய ஒரு வைத்திய விஷயம்தான்! இன்ஜினீயரிங் துறையில் திறமையின்மைக்கு இடம் அளிப்பதில்லை என்று நீங்கள் செய்த முடிவு, கொஞ்சமும் சரியல்ல. நாடெங்கும் திறமையின்மை, ஊழல் இவற்றை அரும்பாடுபட்டு வளர்த்து வருகிறது காங்கிரஸ் நிர்வாகம். இந்த நிலைமையில், ''திறமையின்மைக்குத் திருப்பதி கலாசாலை தங்கும் மடமோ அல்லது சத்திரமோ அல்ல'' என்று அறிவித்து விட்டீர்கள். இதன் பயனாகக் காங்கிரஸின் சினத்துக்கு நீங்கள் ஆளாக நேர்ந்தால், அந்த ஏழுமலையான்தான் உங்களைக் காப்பாற்ற வேண்டும்!

ஒரு பெற்றோன்



வானம் வெளுத்து விட்டது!

ஸ்ரீவேணுகோபாலன்



தென்காசி துண்டை உதறி விட்டார். பிறகு காளையை மெதுவாக எழுப்பினார். கன்னத்துக்கும், தோளுக்குமிடையே சாட்டையை இடுக்கிக் கொண்டு, நுகக் காலைத் தூக்கி விட்டார். காளை தலையைக் கொடுத்துக் கொண்டது. பூட்டாங் கயிற்றை இழுத்து மாட்டி விட்டார்.

ஒற்றைக் காளை வண்டி. காளை ஒட்டன் காளை! ஒரு தரம் கொம்பைச் சிலிர்த்துக் கொண்டது. அதன் கழுத்துச் சலங்கையிலிருந்து சப்த ஜாலங்கள் இசைத் துளிகளாய்க் குதித்தோடின.

ஏறி உட்கார்ந்து கொண்டார். "ஹை, ஹை" என்றார். சக்கரங்கள் உருள ஆரம்பித்தன. சலங்கையிலிருந்து எழுந்த சப்த அலைகள் ஏதோ ஒரு தாள கதிக்கு உட்பட முயன்று கொண்டிருந்தன.

மணி எட்டாகி விட்டது. மூன் நிலாக் காலம்! வண்டியின் இடது வட்டத்தில் செருகியிருந்த பட்டை விளக்கு மஞ்சள் ஒளியைச் சிதற விட்டுக் கொண்டிருந்தது. வண்டி, ஆடிக் கொண்டே, கற்சாலையை அரைத்தவாறு போய்க் கொண்டிருந்தது.

வடக்கே கறுத்திருந்தது. அடி வானத்தில் முகில்கள், மந்தை ஆடுகளைப் போல், ஒன்றை ஒன்று நெருக்கிக் குமைந்து கொண்டிருந்தன. பூமி தன்னை இழுத்துப் போர்த்திக்கொள்வது போல் இருள் கணத்துக்குக் கணம் அதிகரித்துக் கொண்டிருந்தது. யார் கட்டளைக்கோ கீழ்ப்படிந்தாற் போல் நகரத்தின் ஓசை ஒடுங்கி மறைந்து கொண்டிருந்தது.

"மழை வருமோ, டாய்!"

தென்காசி காளையிடம் பேசிக் கொண்டிருந்தார். ஒட்டன் காளை அவரிடம் ஏழு வருடங்களாக உழைக்கிறது. சாலையின் மேடு பள்ளங்களில் அல்லாது அவரது வாழ்வின் மேடு பள்ளங்களிலும் பங்கெடுத்திருக்கிறது. தென்காசிகூடச் 'சந்தேகப்படுவதுண்டு. 'ஒருவேளை இந்தக் காளைக்குத் தன் குடும்ப விவகாரம் முழுதும் தெரிந்திருக்குமோ?'

வடக்கு வானம் அதிர்ந்து விட்டது. மின்னல்கள் அவ்வப்போது சிலிர்த்துக் கொண்டிருந்தன. இடியின் உருமல்கள் கிழக்கு மேற்காக ஓடிக் கொண்டிருந்தன.

"ஏலே, டாய்! மானம் கருண்டுக்கிட்டு வருதுடா! ஜல்தியா போ!"

வடக்கிலிருந்த கருமுகில்கள் நடுவானம் வரை பரவி விட்டன. கிழக்கிலும் மேற்கிலும் அணிவகுத்து வருவது போல் மேகங்கள் குவிந்து தெற்கு நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருந்தன. தண்காற்று ஜிலுஜிலுவென அவர் உடலைத் தழுவி ஓடியது.

வண்டி பாளையங்கால் சாலையில் போக ஆரம்பித்து விட்டது.

"டாய்! சந்திரமதியைப் பார்க்கணும்டா! மிக்சர் பொட்டலம் வாங்கி யிருக்கிறேன்!" தென்காசி சற்றுப் பலமாகவே பேசினார்; காளையிடம் பேசினாரா; அல்லது தன்னிடமே பேசிக் கொண்டாரா என்று தெரியவில்லை. அவருக்குக் காது சிறிதளவு செவிடு. அதற்காகத் தனக்குக் கேட்கும்படி உரக்கப் பேசிக் கொள்கிறாரோ, என்னவோ!

வாய்க்கால் ஓரமாக உள்ள சாலையில் வண்டி போய்க் கொண்டிருந்தது. வாய்க்காலில் இன்னும் தண்ணீர் விடவில்லை. சிற்சில



அட்டைப்படக் கதை

இடங்களில் மழை நீர் குட்டை குட்டையாகத் தேங்கிக் கிடந்தது. நேற்று மழை இல்லை. அதற்கு முந்திய இரு தினங்களிலும் மழை. கோடை நாள் மழை அடித்து நொறுக்கி விட்டுப் போயிருந்தது

தென்காசி சுற்றி வரக் கண்ணை ஓட்டினார். வானமெங்கும் மூடி விட்டது. உலகமே ஒரு கூடாரத்துள் அடங்கினாற் போல் இருண்டு விட்டது. சாலையின் இருபுறங்களிலுமுள்ள நரிசை நிலங்கள் இருளுள் புதைந்து மறைந்து விட்டன. நடுவே ஓடும் வெள்ளைக்கல் சாலை மாத்திரம், வெள் துணி விரித்தாற் போல் மழுங்கிய மினுமினுப்புடன் வளைந்தும் நெளிந்தும் ஓடிக் கொண்டிருந்தது.

''ஏலே, போடா! சந்திரமதி காத்திருக்கப் போறாடா!''

காளையின் துல்லிய மணி இசைகள் ஒலித்துச் செவிச் சவ்வை ஊசி பிளப்பது போல் பிளந்து கொண்டிருந்தன. காளை பரு நடையிலேயே போய்க் கொண்டிருந்தது.

தூறல்கள் விழ ஆரம்பித்து விட்டன. தென்காசி கோஸ் பெட்டியிலிருந்து இறங்கி உள்ளே வைக்கோல் மெத்தை மீது உட்கார்ந்து கொண்டார். பின்புறப் படுதாவை இழுத்து விட்டார்.

''கல்லாப் பெட்டியைப் பூட்டினேனோ?''

இடுப்பில் சாவியைத் தொட்டுப் பார்த்தார். கல்லாப் பெட்டியைப் பத்து தரமாவது இழுத்துப் பார்த்திருப்பார். இருப்பினும் அவருக்குச் சந்தேகம் தீர்ந்திராது. நினைத்து நினைத்துப் பார்ப்பார். ''பூட்டினேனோ? பூட்டினேனோ?''


கல்லாப் பெட்டிக்கு அடுத்தபடியாக நினைவுக்கு வருவது சந்திரமதிதான்! ஆனால் அவளைப் பூட்டி வைக்க வழியில்லை; பூட்ட நினைவுதான்!

காலையிலே அவள் தூக்குச்சட்டியைத் தருவதற்காக நின்ற நிலை நினைவுக்கு வந்தது.

''காஞ்சிபுரம் சேலென்னு சொல்லிப் பாளையங்கோட்டைச் சந்தையிலே வெறும் பத்து ரூபாய்ச் சேலை வாங்கிக் கொடுத்தேன். அதிலே வந்து அவள் மினுக்கினாள் பாரு!''

தென்காசி தூக்குச்சட்டியைக் கையில் வாங்கியவாறே அவளை ஒரு கண்ணோட்டம் விட்டார்.

அவள் நடுவகிடு, வெள்ளி உருக்கு வழித்தாற் போல் ஜொலித்துக் கொண்டிருந்தது. நெற்றியின் இரு ஓரங்களிலும் குனிந்தெழுந்த கேசம், நாகம் படம் விரித்தாற் போல் சீறிப் புடைத்துக் கொண்டிருந்தது. கிறவிட்டுப்



பிரித்ததுபோல் தோன்றிய விழிகளில் கண்டிய கருமை குமைந்து கொண்டிருந்தது.

''ராத்திரி வரப்போ மிக்சர் பொட்டலம் வாங்கி வரட்டுமா, சந்திரமதி!''

சந்திரமதி அதரங்களைப் பிரிய விடாமல் குறுநகையில் மலர்ந்தாள். அவள் குறுநகையின் சுடர் முழுவதும் அவளது மூக்குத்தியில் தேங்கி வெட்டுவது போன்றிருந்தது.

''மூன்று ரூபாய் மூக்குத்திக் கல்லு அவள் முகத்தில் வெட்டற வெட்டைப் பாரேன்!'' தென்காசி நினைத்துக் கொண்டார். வண்டியைத் திருப்ப முனைந்தபோது பக்கத்து வீட்டு வைக்கோல் போரிலிருந்து வள்ளிநாயகம் வைக்கோல் பிடுங்குவது தெரிந்தது.

''நீ உள்ளே போய்விடு, சந்திரி!'' என்றார் தென்காசி.

அவளுக்கு அவரது பேச்சின் பொருள் புரிந்திருக்க வேண்டும். விடு விடென்று உள்ளே போய் விட்டாள். தாழ்ப்பாள் சத்தம் கேட்கிறதா என்று தென்காசி கூர்ந்து கவனித்தார். சப்தம் கேட்டதுதான் தாமதம்! வண்டியைக் கிளப்பினார். போகும் போது வள்ளிநாயகத்தை ஓரக் கண்களால் பார்த்துக்கொண்டு, மாட்டைச் சாட்டையால் ஓங்கி அடித்துச் 'கர்ர்' என்ற சத்தத்தைக் கிளப்பினார்.

''பயலுக கண்ணைப் பாரு! பேராச்சியாத் தான் முழி மாதிரி!'' முனகிக் கொண்டே வண்டியை ஓட்டினார்.

பாளையங்கால் பனங்குடலை வண்டி தாண்டி விட்டது. தூறல்கள் பலக்க ஆரம்பித்தன. வண்டியின் உள்ளேயும் தூறல் புக ஆரம்பித்து விட்டது. தென்காசி தமது கைப்பையை மெத்தைக்கடியில் செருகி வைத்தார்.

''இப்படி நெதம் மழை பெஞ்சா, வீடு வாசல் என்னுவது?'' என்று சொல்லிக் கொண்டார்.

தென்காசியின் வீடு மேட்டுத் தெருவில் இருந்தது! காரை வீடு! திண்ணைகளெல்லாம் செல்லரித்துப் போய் விட்டன. அவைகளில் யாரும் படுக்கவும் முடியாது, உட்காரவும் முடியாது. இரு பனந் தூண்கள் மேலே மட்டிய உத்திரங்களைப் . பிடித்துக்கொண்டு நின்றன. அவைகள் பாளங்களாகக் கீறி, செங்கல்கள், மண் பொடியாக உதிர்ந்து கொண்டிருந்தன.

''ம், வீட்டை ரிப்பேர் பண்ணணும்;- வண்டிக்கு அச்சுத் திரட்டணும், பைதாவுக்குப் பட்டை போடணும்; மாட்டுக்கு லாடம் கட்டணும்!''

வரிசையாகத் தாம் செய்ய வேண்டியதை மனனம் செய்து கொள்வார். அதில் அவருக்கு ஒரு திருப்தி! அப்படிச் செய்து கொள்வதால், தான் பொறுப்பற்றவராக இராமல், பொறுப்புள்ளவராக ஆகி விட்டதாக நினைத்துக் கொள்வார். நினைவோடு எல்லாம் சரி! அடுத்தபடியாக மாடு லாடம் தேய்ந்து நொண்ட ஆரம்பித்த பிறகு தான், லாடம் கட்ட முற்படுவார்.

''புதுக வாங்கறத்துக்கோ, ரிப்பேர் பண்ணறத்துக்கோ இங்கே பணம் என்ன கொட்டியா கிடக்குது?'' என்று அடிக்கடி முனகிக் கொள்வார்.

''பலசரக்குக் கடை முதலாளி தென்காசி கிட்டேயிருந்து பணம் கறக்க முடியாது''

என்று ஊர்த் தொழிலாளிகள் அவர் கூப்பிடும் வேலைகளுக்குப் போகாமல் எட்டிப் போய் விடுவதுண்டு.

ஆனால் சந்திரமதி வந்து சேர்ந்த பிறகு எல்லாம் மாறிவிடும் என்று எல்லோரும் நினைத்தார்கள்.

''சந்திரமதி!''

தென்காசியின் நினைவு அவள் மீது எட்டி நின்றது. வண்டி கோட்டுரைத் தாண்டிக் கொண்டிருந்தது. மழை அடித்துப் பொழியத் தொடங்கியது. காளை மெதுவாக நடை போட்டது. பத்தடி தூரத்துக்கு மேல் பாதை தன்னை மறைத்துக் கொண்டிருந்தது.

''அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டது சரிதானா?'' அடிக்கடி அவருக்கு இந்த நினைவு வருகிறது. அவருக்கு வயது நாற்பத்தைந்தாகி விட்டது. ஆனால் வயதுக்கு மேல் ஒரு மூப்பு. அவளுக்கு? அவளுக்கு என்ன வயது? ''போன ஆனியில் தான் இருபத்திரண்டு நிறைஞ்சுது!''

''இவ்வளவு சின்னப்பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளலாமா?'' அவர் நினைப்பார். ''சின்னப் பெண்ணானால் நோய் நொடி சீக்கிரம் வராது! இல்லாவிட்டால் என்னைப் போல்....''

தென்காசிக்கு இழுப்பு உண்டு. சுவாசம் விடுவதில் அடிக்கடி கஷ்டம் ஏற்பட்டு விடும். வியாதி வந்தால் போதும். ஆளை உண்டு இல்லையென்று ஆக்கிவிடும். அதற்கு உள்ளூர் நமச்சிவாயப் பண்டிதன் மருத்துவன்.

''ம்...லேகியம் ஒண்ணு கூட்டச் சொல்லுன். இங்கே யார்கிட்டே பணம் இருக்கிறது! இப்போதைக்குப் பூச்சு மருந்து வாங்கி வைச்சாக்க! லேகியமெல்லாம் பணம் வந்தால் பார்த்துக்கிடலாம்!''

பூச்சு மருந்து தமது பையுள் இருக்கிறதா என்று துழாவிப் பார்த்தார். பத்திரமாக இருந்தது.

'இந்தப் பெண் சந்திரமதி! ஏதோ நோய் நொடி இல்லாமல் இருந்து வருகிறாள். ''தக தகன்னு ஜொலிக்கிறாள். அவளை இவ்வளவு வயசுக்கு மேலே கல்யாணம் கட்டிக்கிட்டது சரிதானா?'

தென்காசிக்கு இதற்கு முன் மூன்று முறை திருமணம் நிச்சயமாகி யிருந்தது. ஆனால் திருமணம் ஆவதற்கு முன்பே இந்த மூன்று பெண்களும் இறந்து விட்டார்கள். ஒருத்திக்கு வைசூரி. மற்ற இருவர்களுக்குக் குளிர் ஜுரம்! இதனால் தென்காசிக்குக் களத்திர தோஷம் என்று சொல்லி ஒருவரும் பெண்ணைக் கொடுக்க முன் வரவில்லை. தென்காசி இதற்கெல்லாம் கவலைப் பட்டாரா, படவில்லையா எனத் தெரியவில்லை.

சமீபத்தில் அவர் தாயார் இறந்ததும் தான், திருமண விஷயத்தில் பூரணமாக ஈடுபட்டார். சந்திரமதி, மேலச் செவல் கொடிக்கால் ரத்தினத்துடைய கடைசிப் பெண். இருட்டிய ரேழியில், அவள் முகம், மெல்லிய கொழுந்து ஜுவாலை போல் இரத்தச் சிவப்பாய் ஒளிர்ந்து கொண்டிருந்தது. ''ம்...ம்..மேலே ஆவறதைக் கவனியுங்கள்!'' என்று சொல்லித் திருமணத்துக்குத் தம் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார்.

சம்மதத்தைத் தெரிவித்தவர் வெளியே வந்தார். சம்பந்தி வீட்டையும், அதைச்சுற்றி



சட்டை, சால்வை, சேலை, துவாலை... நம் வீட்டுத் துணிகள் எல்லாவற்றுக்கும் ஏற்றது: வீட்டிலேயே ஸர்ப் சலவை... வெகு இலகுவாக வெள்ளைவெளே ரென்று துப்புரவாக்கும் சலவை! எல்லாம் ஸர்ப் செயல், அதன் பேராற்றல்! இன்றே செய்வீர் ஸர்ப் சலவை... இல்லத்திற்கான ஈடு இணையற்ற சலவை!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 27-X52 TM

யிருக்கும் வீடுகளையும் உற்றுக் கவனித்தார். பக்கத்து வீடுகளில் யார் யார் இருக்கிறார்கள் என்று மெதுவாக நோட்டம் விட்டார்.. அவர் மனமே இந்தச் செய்கைக்கு அவரைக் கேலி செய்தது.

''எல்லாம் கவனிக்க வேண்டியதுதான். பொம்பிள்ளை நம்ப சாகிறவரை கூட வாழப் போகிறவள் இல்லே!'' என்று மனத்துக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டார்.

அவர் வயதில் எவ்வளவோ 'சம்பவங்' களைக் கேள்விப்பட்டு விட்டார். ''இதெல்லாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது தான்! நாளைக்குத் தென்காசி குடும்பத்தின் பேரிலே ஒரு குறை வந்திடப்படாது பாரு!'' என்று சொல்லிக் கொண்டார்.

திருமணமாகிச் சந்திரமதி வீட்டுக்கு வந்தாள். தென்காசிக்குப் பெருமூச்சு வந்தது. ''இந்த ஓட்டைவீட்டுக்கு அவள் ஏற்றவளா?''

ஊஞ்சல் போல் அவள், வீட்டுள் ஆடி வந்தாள். விளக்கு நகர்ந்து உலாவுவது போல் அவள் வீட்டுள் சுற்றி வந்தாள். ஏதாவது பேசினால் அவள் புன்னகை தான் பூக்கிறாள். அப்போது அவளது மூக்குத்தி, ஒளியின் ஆயிர வித நடனங்களைத் தன் கல்லுள் காண்பித்து விட்டு அடங்கி விடுகிறது.

ஞாயிற்றுக்கிழமை! அவள் ஆற்றுக்குக் குளிக்கப் புறப்பட்டாள். அவள் போன பிறகு தென்காசி, வீட்டுக் கதவை இழுத்துச் சாத்தினார். பிறகு அவளுக்குப் பின் சற்றுத் தொலைவில் பின் தொடர ஆரம்பித்தார். நெல்லித் தோப்பு அருகே கணக்குப் பிள்ளையின் சம்சாரமும் மகளும் குளித்து விட்டு வருவது தெரிந்தது. அவர்கள் சந்திரமதியைப் பார்த்துவிட்டு அதிசயித்து நிற்பதும் தெரிந்தது.

''நல்லாப் பார்த்துக் கொள்ளுங்க! தென்காசிக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தீங்களா? அவள் அழகிலே கால் தூசி நீங்க பெறுவீங்களா?'' தென்காசியின் மனத்தில் பெருமை எண்ணங்கள் புகுந்து கொண்டன.

இன்னும் சற்றுத் தூரம் போயாகிவிட்டது. தென்னந் தோப்பு அருகிலே வள்ளிநாயகம் நின்று கொண்டிருந்தான். சந்திரமதியை அவன் அதிசயத்தோடு பார்ப்பது தெரிந்தது. தென்காசிக்கு இது கசப்பாக இருந்தது. ''கண்ணிலே கொள்ளி வைக்க!'' என்று மனத்துள் திட்டிக் கொண்டார்.


ஆற்று மணலில் பிள்ளைகளெல்லாம் கிளியந்தட்டு விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஒற்றையடிப் பாதையில் சந்திரமதி வருவதைக் கண்டு, யாவரும் திகைத்து நிற்பது தெரிந்தது. விளையாட்டு கூட நின்று போய் விட்டது.

தென்காசிக்கு எரிச்சலாக வந்தது. சந்திரமதி பெண்கள் துறையில் இறங்கிக் குளிக்கத் தொடங்கி விட்டாள். அவர் ஆண்கள் துறையில் குளித்து விட்டு எழுந்தார்.

வீடு திரும்பும்போது வள்ளிநாயகம் தன் நண்பர்களிடம் பேசுவது கேட்டது.

''இந்தச் செவிட்டுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தியா! பெண்டாட்டி கிளியா வாய்ச்சிருக்கு!''

தென்காசிக்குக் காதில் விழாது என்றுதான் பேசினார்கள். அவரும் தமக்குக் கேட்காதது போலவே நடிப்பது வழக்கம்!



''வாங்க! வாங்க! என் நாயை நம்புங்கள் சார். நாய் கடிக்காது!''

''என்ன சார்! நாய் குரைக்கவும் செய்கிறது; வாலையும் ஆட்டுகிறது. எதை நம்பி நான் உள்ளே வருவது சார்?''

சாப்பிட உட்கார்ந்தார். சந்திரமதி பரிமாற வந்தாள்.

''சந்திரமதி'' என்றார். அவள் நாணத்தில் குழைந்து கொண்டாள்.

''நாளையிலேந்து ஆற்றிலே போய்க் குளிக்க வேண்டாம்; வீட்டிலே குளி! கிணற்றைக் கட்டிப் போட்டிருக்கேனே!'' என்றார்.

''ஆகட்டுங்க!'' என்றாள் அவள்.

ஒரு தினம் மாலை சீக்கிரமே வீட்டுக்குத் திரும்பும்படியாகி விட்டது. பாளையங்கோட்டைக் கடைகளில் 'கதவடைப்பு' நடந்தது.

ஊர்த் தெருவில் பிள்ளைகள் நொண்டியாட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். வீட்டின் நிலையைப் பிடித்தவாறு நின்று, சந்திரமதி அதை ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

தென்காசி ஒரு கணம் தெருவை நோக்கினார். ''எல்லாம் பெரிய பசங்கதான்!'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

''ம்.....ம். வா சந்திரி! உள்ளே சாப்பாடு போடு!'' என்றார்.

சந்திரமதி உள்ளே நுழைந்தாள்.

சாப்பாடு முடிந்து விட்டது. தென்காசி முற்றத்தில் அமர்ந்து கொண்டார். முற்றத்தின் சதுரக் கற்கள் மீது பிறை நிலா தனது எளிய கதிர்களை உலர்த்தியிருந்தது.

சந்திரமதி வெற்றிலைப் பெட்டியுடன் அங்கே வந்தாள்.

''இப்படி உட்காரு, சந்திரி!''

சந்திரமதி சற்றுத் தொலைவிலுள்ள கல் தொட்டியருகில் நாணத்துடன் அமர்ந்து கொண்டாள்.

''உனக்கு என்னைப் பிடிக்கிறதா?''

அவள் பதில் பேசவில்லை.

''சொல்லு சந்திரி!''

''பிடிக்கிறது!''

''நிஜமாகவா?''

''நிஜமாகத்தான்! இதென்ன கேள்வி!! உங்களை அடைந்ததற்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டாமா?''

அவள் வாயிலிருந்து சொற்கள் மழலையாய்க் குழைந்து வந்தன. அவை வந்து

விழ்ந்த தன்மையில் தூய்மையின் நெருப்பு கொதித்துக் கொண்டிருந்தது.

தென்காசி அவளை ஏறிட்டுப் பார்த்தார். ''இந்தத் தெருவிலே இருக்கிற எல்லோரும் அயோக்கியப் பசங்க! ஆமாம்! வெளியிலே நீ அடிக்கடி தலைகாட்டக் கூடாது. தெரிஞ்சுதா?'' என்றார் தென்காசி.

''தெரிஞ்சுதுங்க!''

''என்ன தெரிஞ்சுது?''

''உங்களைப் புரிஞ்சுக்கிட்டேனுங்க!''

ஊரில் திருவிழா வந்துவிட்டது. அவளது தங்கையின் குடும்பம் விழாப் பார்க்க வந்து விட்டது. எந்த வருஷமும் தங்கை வந்தால் தென்காசிக்குச் சந்தோஷம் பொங்கி வழியும். தங்கை குழந்தைகளுடன் சடு கொடுப்பதே அவரது பொழுது போக்காக இருக்கும். ஆனால் இந்தத் தடவை....

காலையில் குளித்து விட்டு வந்தார். தங்கையின் மூத்த மகன் மாணிக்கம் கொல்லைப் புறத்தில் நீர் எடுப்பதைப் பார்த்து விட்டார். இந்தச் சந்திரமதி எங்கே?

பின்புறம் வரை சென்றார். சந்திரமதி கொல்லை மண்ணில் இரும்புச் சட்டியைப் போட்டு விட்டு, அதன் கரியைத் தன் காலால் தேய்த்துப் போக்கிக் கொண்டிருந்தாள். அவர் மனம் ஒரு கணம் கசந்து வழிந்தது.

''மாணிக்கம்! இப்படிக் கொடுடா வாளியை! நான் தண்ணி எடுத்துக் கொட்டறேன்! நீ போய், சோப்பையும் துண்டையும் எடுத்துக்கிட்டு வா!'' என்றார்.

இதற்குள் சந்திரமதி இரும்புச் சட்டியைத் தாங்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தாள். தென்காசி அவளை ஏற இறங்கப் பார்த்தார். அவள் கேசம் முன்னால் விழுந்து நெற்றியை மறைத்துக் கொண்டிருந்தது. கன்னத்திலும் கைகளிலும், கரி படிந்திருந்தது. 'அந்த அலங்கோலத்திலும் அவளுக்கு ஓர் அழகு இருக்கத்தான் செய்கிறது!' என்று தென்காசிக்குத் தோன்றியது. அவளை அப்படியே விழித்துப் பார்த்தார். அந்தப் பார்வையின் கடுமை தாங்காது அவள் அஞ்சுவது தெரிந்தது.

''இந்த விஷயங்களை யெல்லாம் அவளுக்கு எப்படி எடுத்துச் சொல்ல?'' என்று முறை முறைத்துக் கொண்டே வாளி வாளியாய் நீர் இழுக்கலானார்.

''இன்றைக்குக் கடைக்குப் போகணுமா?'' என்று அவருக்கு ஒரு கணம் யோசனை தோன்றியது. ஆனால் கடையை மூடுவதா? தர்ம சங்கடமாக இருந்தது. கல்லாப் பெட்டியா? சந்திரமதியா?

தென்காசி மேலும் கீழும் உலவினார்.

''ஏலே மாணிக்கம்!'' என்றார். ''ஏண்டா, இங்கே உட்கார்ந்திருக்கே? கிராமத்திலே பொழுது போகாதேடா! என் கூடப் பாளையங்கோட்டைக்கு வா! ஜாலியாகப் பொழுது போகும்!''

மாணிக்கம் சிறிது யோசித்தான். பிறகு தலையசைத்தான். தென்காசிக்கு உள்ளூறச் சந்தோஷம் பொங்கியது.

இரவு பலசரக்குக் கடையைச் சீக்கிரம் மூடும்படி மாணிக்கம் தொந்தரவு செய்து கொண்டிருந்தான். ''வியாபாரம் என்ன ஆகும்டா?'' என்று கூறி, எட்டு மணிக்குத் தான் கதவைச் சாத்தினார் தென்காசி.

வண்டி போட்டுக் கொண்டு வீட்டுக்கு வரும் போது மணி ஒன்பதாகி விட்டது. சாப்பிட உட்கார நினைப்பதற்கு முன் வாசலில் குரல் கேட்டது.

''தென்காசி இருக்காறுளா?'' மூனு.கானு. வந்திருந்தார். தென்காசி வெளியே போனார். வியாபாரத்தில் இருவருக்கும் ஓர் அன்னியோன்னியம். மூனு கானு நெல் வியாபாரம். கிழக்கே வாய்க்கால் கரைக்குச் சென்று பேச ஆரம்பித்து விட்டார்கள். அம்மன் கோவில் வயலைக் 'கிரயம்' பேசுவது பற்றிச் சர்ச்சை. அது முடிந்ததும் அவருக்குச் சட்டென்று வீட்டின் நினைவு வந்துவிட்டது. ''அடாடா! சந்திரமதி என்ன ஆனாள்? இந்தப் பயல் மாணிக்கம்.....'' வீட்டுக்கு விரைந்தார்.

உள்ளே ரேழியில் அரிக்கேன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சந்திரமதி, மாணிக்கம், தங்கை, தங்கையின் பெண் ஆகிய நால்வரும் தாயக் கட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். தென்காசிக்கு ஆத்திரம் எழுந்தது. சந்திரமதியும், மாணிக்கமும் ஒரு கட்சி!

''ம்...ம்.... ஆட்டத்தை நிறுத்துங்க. சாப்பாடுபோட வாருங்க!''

சந்திரமதி சட்டென்று எழுந்தாள்.

''அவங்க வர்ற வரைக்கும் காய்கள் அப்படியே இருக்கட்டும்'' என்றான் மாணிக்கம்.

''சரிதாண்டா, வேறு வேலையில்லே. மணி பத்தாகப் போகுது. எண்ணெயை எரிச்சுக்கிட்டு....''

ஒன்றும் சாப்பிட ஓடவில்லை. எழுந்து கை கழுவி விட்டு வந்தார். தங்கை, மாணிக்கம், குழந்தைகள் யாவரும் வெளியே திண்ணைக்குப் படுக்கப் போய் விட்டார்கள்.

சந்திரமதி பாயை விரித்தாள். வெளிக் கதவைச் சாத்தி விட்டு உள்ளே வந்தாள்.

''ஏன்மா! உனக்குப் புத்தி இருக்காமா?''

தென்காசி இரைந்தார். சந்திரமதி நடு நடுங்கிப் போனாள். அவள் உதடுகள் தாமாகவே மூடிக் கொண்டன.

''அவன்கூடத் தாயக்கட்டம் ஆடறயே! இது நல்லா இருக்கா? ஊரிலே நாலு பேர் பார்த்தால் என்ன நினைப்பாங்க?''

''அவர் சின்னவர் தானுங்களே?''

''சின்னவனு? தடி மாடு போல இருபது வயதாகப் போகுது. அவன் கூட நீ ஆடலாமாமா....?''

''இனி மேல் ஆடலீங்க!''

சந்திரமதி பதற்றமுடன் நின்றாள். கண்களில் பிரகாசமாய் இரண்டு துளிகள் திரண்டு விட்டன. முந்தானையால் துடைத்துக்கொண்டாள். மேலும் வரும் அழுகையைப் பார்த்து விடாதபடி அரிக்கேன் விளக்கை உடன் அணைத்து விட்டாள்.

அதற்குப் பிறகு சந்திரமதி வீட்டில் கலகலப்பாக இல்லை. சமையலறையிலோ கிணற்றடியிலோ தன்னை மறைத்துக் கொண்டிருந்தாள். திரு விழா முடிந்த பிறகு தமக்கையும் அவள் குடும்பத்தினரும் போய் விட்டார்கள்.


குளிர் நாட்கள் வந்து கொண்டிருந்தன. கனவுக் காட்சிபோல் எங்கும் பனி மொய்த்துக் கிடந்தது. கன்றுகளும், காளிகளும் முடங்கிக் கிடந்தன. வாய்க்கால் நீர் ஜில்லிட்டு ஓடிக் கொண்டிருந்தது. கரையோரங்களில் உள்ள ஆம்பல்களில் கிழிபட்டு நீர் செல்லும் போது விசித்திரமான நீண்ட சதுரக் கட்டங்களாக வரிகளை ஏற்படுத்திச் சென்றது.

தென்காசிக்கு இழுப்பு வந்து விட்டது. சுவாசத்தில் இழைப்பு ஏற்பட ஆரம்பித்து விட்டது. உலகத்தின் காற்றெல்லாம் மறைந்து சூன்யமாகி விட்டதோ என்று தோன்றியது. சுவாசத்தில் எழுந்த நோவில் உடலெல்லாம் இறுகி விட்டது.

நமச்சிவாயப் பண்டிதன் மருந்து. மேலே பூச்சும் உள்ளே கஷாயமும் கொடுத்து வந்தான். இரண்டு தினங்களில் நோய் இறங்கிக் கொண்டிருந்தது.

அன்று அவன் கஞ்சியை வைத்து விட்டுப் போய் விட்டான். தென்காசிக்கு இப்போது சற்று நடமாட முடிந்திருந்தது. மெள்ள எழுந்து நடைப் பக்கம் எட்டிப் பார்த்தார். நடை ஜன்னலைத் திறந்து கொண்டு சந்திரமதி வெளியே நோக்கிக் கொண்டிருந்தாள். குப்பென்று வீசிய காற்று அவள் நெற்றி ஓரங்களில் உள்ள பிசிர் இழைகளை வருடியவாறு ஓடிக் கொண்டிருந்தது. நடையில் இருட்டு குமைந்து கொண்டிருந்ததும், அவளது முகத்தில் மாத்திரம் வெளிச்சம் விழுந்திருந்ததும் ஒரு மாயத் தோற்றத்தை உண்டு பண்ணியிருந்தன. கொதி உலையைத் திறந்து பார்த்தாற் போல் அவள் முகம் ஜ்வாலை வீசிக் கொண்டிருந்தது.

''சந்திரமதி!''



தொழில் அதிபர்: இதோ! இந்தச் சமயத்தில்தான் எனக்குக் கல்யாணம் ஆச்சு!

அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். பிறகு சோர்ந்தவாறு அவள் முகத்தைச் சரித்துக் கொண்டாள்.

''உனக்கு என்ன சந்திரி?''

மெதுவாகப் போய் அவளைத் தொட்டுப் பார்த்தார். அவள் உடம்பு அனலாய்க் காய்ந்து கொண்டிருந்தது.

''எத்தனை நாட்களாய் இப்படி உடம்பு கடுகிறது?''

''இரண்டு நாட்களாய்.....''

''நல்லா இருக்கிறது. போய்ப் படுத்துக் கொள். உடம்பைக் கவனி!''

அவள் உள்ளே போய் விட்டாள். சமையலறையில் சென்று அவள் படுத்துக் கொள்வது தெரிந்தது.

''இவள் என்ன இப்படி இருக்கிறாள்?'' என்று முணு முணுத்துக் கொண்டார் தென்காசி. இப்போதெல்லாம் அவள் முன் போல் துள்ளித் துள்ளி நடப்பதில்லை. நடையில் ஒரு சாவதானம் விழுந்து விட்டது. பார்க்கும் பார்வையில் ஒரு தேக்கம் வந்து விட்டது. 'உடம்பு சரியில்லை; அவ்வளவுதான்'' என்று சொல்லிக் கொண்டார் தென்காசி.

அவர் பூரண குணமாகி விட்டார். அவளுக்கு ஜுரம் அதிகமாகி விட்டது. படுக்கையில் புரண்டவாறே படுத்திருந்தாள். கண்களை மூடியே வைத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் காலை அவள் முனகிக் கொண்டிருந்தாள். தென்காசி அவள் அருகில் அமர்ந்து கொண்டார்.

''வைத்தியனை அழைக்கக்கிட்டு வாருங்க! எனக்கு என்னவோ பண்ணுகிறது!'' என்றாள் சந்திரமதி.

தென்காசிக்கு நமசிவாயத்தை அழைத்து வர விருப்பமில்லை. உடனே வண்டியைப் பூட்டினார். அதில் சந்திரமதியைப் படுக்க வைத்துப் பாளையங்கோட்டை டாக்டரிடம் கொண்டு போய் விட்டார்.

''ரத்தம் குறைந்திருக்கு. உடம்பெல்லாம் வேறு வெளிறிக் கிடக்கிறது. எங்கேயாவது காற்றோட்டம் இல்லாத இடத்தில் இருந்தாளா?'' என்று கேட்டார் டாக்டர்.

தென்காசிக்கு மனம் அடித்துக் கொண்டது. பதில் பேசவில்லை; மருந்துகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்.

''சந்திரமதி! திண்ணையிலே வந்து அடிக்கடி காற்று வாங்கம்மா! டாக்டர் சொன்னார், பாரு!'' என்று கூறினார் தென்காசி.

இப்போது சந்திரமதி நன்கு தெளிந்து எழுந்து விட்டாள். வீட்டுக் காரியங்களையும் மேற்கொண்டு விட்டாள்.

சிறிது நாட்களில் அவளிடம் பழைய மதமதப்பும், ஜொலிப்பும் வந்து விட்டன. இருப்பினும் அவள் முகத்தைக் காணும் போதெல்லாம் அவருக்குத் 'திக்'கென்றிருந்தது. அவள் கண்களில் ஏன் அப்படிச் சோகம் தேங்கிக் கிடக்கிறது? ஜுரம் தெளிந்த பிறகும் ஏன் கண்களில் சோகம் தெளியாது நின்று விட்டது? புன்னகை பூத்தால் கூட அது உடனே ஏன் அவிந்து விடுகிறது? தென்காசி மனத்தைக் குழப்பிக் கொண்டார்.

மழை வெட்டி அடிக்க ஆரம்பித்தது. வண்டி வாணியர் குடி அருகில் ஓடிக் கொண்டிருந்தது. மின்னல்கள் சொடுக்கிப் பிளந்து கொண்டிருந்தன. பிரளய மழை வையத்தை மூடி விட்டது. இடிகளின் அதிர்ச்சி சுற்றி வரப் புகுந்தோடிக் கொண்டிருந்தது.

வண்டியினுள்ளே ஒழுக ஆரம்பித்து விட்டது. மாடு தொங்கிய முகத்துடன் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. மணிகளின் கிலுகிலு இசையை மழையின் 'சோ'வெனும் ஓசை மறைத்து விட்டது.

ஒரு கணம் வண்டியைத் திருவண்ணாதபுரத்தில் நிறுத்தி விடுவோமா என்று தோன்றியது. ஆனால் மறுகணம் சந்திரமதியின் நினைவு அவரை உலுப்பி எழுப்பியது.

''ராவு வீட்டுக்கு எப்படியாவது போயிட வேணும்.''

சட்டென்று மற்றொரு நினைவு மின்னல் போல் அவரைத் தாக்கியது. ''இந்தப் பயல் மாணிக்கம் அறுவடைக்கு வரேன்னு ஒரு வாரம் முந்திக் கடிதாசி போட்டானே! அவன் என்னிக்கு வருவான்?''

தென்காசி அன்றைய தினம் என்ன கிழமை என்பதை நினைவுபடுத்திக் கொண்டார். புதன் கிழமை என்று தெரிந்ததும் அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''இன்னிக்கில்லே வரேன்னு கடுதாசிபோட்டிருக்கான். தாழையூத்திலே வண்டி ஏழரை மணிக்கே வந்திருக்குமே! இதற்குள்ளே வீட்டுக்கு வந்திருப்பானே!''

''ஏலே, டாய்! சீக்கிரம் போடா!'' சாட்டையை எடுத்தார். மாட்டின் மீது சொடுக்கி விட்டார். 'சடார்' என்ற சத்தத்துடன் மாட்டின் மீது அடி விழுந்தது. மாடு நெளிந்து கொடுத்தது. பிறகு ரோசம் வந்தது போல் பருநடை போட ஆரம்பித்தது.

''ஓட்டம் போடுடா!'' என்று இரண்டாவது தடவை சாட்டையைச் சுண்டினார் தென்காசி. மாடு ஓட ஆரம்பித்தது.

'''வீட்டுக்கு வந்து சந்திரமதிகிட்டே ஏதாவது பேச்சுக் கொடுக்கப் போகிறானே, கடன்காரன்!''

வண்டி ஓடிக் கொண்டிருந்தது. திருவண்ணாதபுரத்துக் குளம் வந்து விட்டது. இரு பக்கமும் குளங்கள்; நடுவில் சாலை; மழை அடையாய்ப் பொழிந்து கொண்டிருந்தது. வண்டியெல்லாம் ஒரே ஒழுகல்! தென்காசியின் உடம்பு சில்லிட்டது. மின்னலொன்று தோன்றி, வானத்தில் சிறிது நேரம் தங்கி மறைந்தது. அந்த ஒரு கணத்தில் பூமியைக் கண்ணுற்ற தென்காசிக்குத் 'திக்'கென்று அடித்துக் கொண்டது. சுற்றிலும் மின்னல் குழம்பு போல், மழை நீர் வெள்ளை வெளேரென்று பூமியெங்கும் மின்னி மறைந்து விட்டது.

''ஏலே, போடா!''

அவர் மனக்கண் முன் சந்திரமதியும், மாணிக்கமும் பேசும் காட்சி புலப்பட்டது. அதைக் காணச் சகியாதது போல் தலையைச் சிலிர்த்து விட்டார் தென்காசி.

மாடு ஓடியது. தென்காசி இன்னும் சாட்டையைச் சொடுக்கினார். வண்டிக்கு வேகம் வந்து விட்டது. குலுங்கிக் குலுங்கி ஆடியது.

மஞ்சள் நாறி மரத்தைத் தாண்டியாகி விட்டது. 'டக்'கென்று பெரும் ஓசை கேட்டது. தென்காசி, தன்னை யாரோ அந்தரத்தில் தூக்கி எறிவதாக உணர்ந்தார். மறுகணம் அவர் தரையில், மழை நீரில் புரண்டு கொண்டிருப்பது தெரிந்தது. ஒரு கணம் சமாளித்து எழுந்தார். நடந்ததென்ன வென்று நோக்கினார். வண்டியின் அச்சு முறிந்து விட்டது. வண்டி குடை சாய்ந்து விட்டது. வண்டிக்கு அச்சுத் திரட்டி எவ்வளவோ நாட்களாகி விட்டன!

பூட்டாங் கயிறு இறுகி அவஸ்தைப்படும் மாட்டை உடனே அவிழ்த்து விட்டார். மாட்டை நுகக் காலில் கட்டினார். மெத்தைக்கடியிலிருந்த கைப்பையை எடுத்துக் கொண்டு, அருகிலிருந்த வீட்டை நோக்கி ஓடினார்.

மேலெல்லாம் சொட்டச் சொட்ட நனைந்து விட்டது. அந்த வீடு ராமையாவுடையது என்பது அவருக்குத் தெரியும். ஓலை இறக்கிய தாழ்வாரத்தில் சிறு சோடாக் கடை அவன் வைத்திருந்தான். ஆள் எப்போதும் தூங்கு மூஞ்சி போலவே இருப்பான். வாயில் எப்போதும் ஒரு சுருட்டு. இன்று தாழ்வாரமெல்லாம் மழை. கடைச் சாமான்களை உள்ளே எடுத்துப் போய் விட்டிருக்கிறான்.

தாழ்வாரத்தில் நின்றார். கூரை வெகு நாள் பட்டது. ஒரே ஒழுகல். மாறி மாறிப் புரளும் காற்றில் இடுப்பு வரை மழைத் தூவானம் அடித்துக் கொண்டிருந்தது. சுற்றி வர ஒரு மைலுக்கு வேறு கட்டடம் ஒன்றும் கிடையாது.

மின்னல் உதறியது. நுகக் காலருகில் மாடு படுத்து விட்டது. இப்போது காற்று வெறி பிடித்தாற் போல் வீச ஆரம்பித்தது. ''உய் உய்'' என்று மூங்கிற் கம்பங்களில் கிழிபட்டு இரைந்து கொண்டிருந்தது.

அவர் முகமெல்லாம் மழை அடிக்கத் தொடங்கி விட்டது. மின்னல்களில் அவர் கண்கள் திகைத்து நின்றன. அவருக்குப் பயம் ஏற்பட்டது. மின்னல்களின் வெள்ளை ஒளியைத் தாங்காது கண்கள் அவிந்து விடுமோ?

கூரை வேறு தென்னப்பட்டு மேலே ஏறி ஏறிக் கீழே விழுந்து கொண்டிருந்தது. ஓலைகள் எந்த நேரமும் பறந்து விழுந்து விடும் என்று தோன்றியது.

தென்காசிக்குக் கதவைத் தட்ட எண்ணம் முற்பட்டது. மெதுவாகக் கதவருகில் சென்

நம்பிக்கைக்குப் பாத்திரமான 'டெட்டால்'



கோடைக் கட்டிகளைத் தடுக்க உதவும்

வியர்வையே மென்மையான சருமத்தின் பரம விரோதி. அது வேர்க்குருவை உண்டாக்கி, அரிப்பையும் எரிச்சலையும் கொடுக்கும். சொறிவதன் மூலம் நன்மை இல்லை. தீமையே விளையும். ஆதலால், உலகிலேயே மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிருமிநாசினி 'டெட்டால்' கலந்த நீர் கொண்டு அதனைக் கழுவி, அரிப்பையும் எரிச்சலையும் தணியுங்கள். நீங்கள் குளிக்கும் நீரில் 'டெட்டால்' கலந்திருந்தால் வேர்க்குருவை ஆற்றுவதுடன் அது பரவுவதையோ அல்லது கோடைக் கட்டிகளாக மாறுவதையோ தடுக்க உதவும். உங்கள் சருமத்தில் வேர்க்குரு கண்டிருந்தால் அதனைக் குணப்படுத்தத் தவறாத கிருமிநாசினி 'டெட்டாலே.'



'டெட்டாலை' குளிக்கும் நீருடன் கலந்து உபயோகித்தால் நறுமணத்துடன் உற்சாகத்தையும் கொடுக்கும். தொண்டைப் புண்களைத் தடுப்பதற்கு 'டெட்டால்' கலந்த நீர் கொப்பளிக்க உதவும். தரைகளைக் கழுவும் போதோ அல்லது துடைக்கையிலோ நீரில் 'டெட்டாலை' கலந்து, உபயோகியுங்கள்.

DL 11 அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWTAEL 5163A

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான்
சிறந்த குணமும், பல வருடங்களாக நம்
பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம்
பெற்றிருக்கின்றன. இந்த நம்பிக்கையான தன்
மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75
வருடங்களுக்கு மேலாக சிபார்சு
செய்யப்பட்ட உலகமறிந்த
தாயரிப்பும் ஆகும்.

அதிகாரம்பெற்ற தயாரிப்பாளர்கள் :

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்

ஞர். ''ஐயா! ஐயா!'' என்று கதவைத் தட்டினார். பதில் இல்லை; ஓங்கித் தட்டினார்.

கதவு திறந்தது. ஒரு பெண் விளக்குடன் நிற்பது தெரிந்தது. உள்ளே காலெடுத்து வைக்க முயன்றவர் ஒரு கணம் தயங்கி விட்டார். அவளும் தயங்குவது தெரிந்தது.

''உள்ளே ஆண் பிள்ளை ஒருத்தரும் இல்லிங்க!'' என்று சொல்லி விட்டு, அவர் பதிலுக்குக்கூடக் காத்திராது கதவை மூடிக் கொண்டாள் அவள்.

தென்காசி திகைத்து விட்டார். அந்த மாதிரி நடக்கும் என்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

இப்போது மழை அவர் முகத்தில் அடித்தது. காற்றின் திசை மாறி விட்டது. காற்றில் தென்னை ஓலைகள் தென்னப்படுவதைப் பார்க்கும் போது வீட்டுக்கே இறக்கைகள் முளைத்துப் பறக்க முயலுவது போல் தோன்றியது. மின்னல்கள் உருக்கிய வெளிச்சத்தில் மழைத் தூறல்கள் நவரத்தினங்களைச் சொரிவது போல் தோன்றியது.

தென்காசிக்கு இழுப்பு வந்து விட்டது. மழையில் அவர் நன்றாக நனைந்திருந்தார். ''அம்மா!'' என்று கூறி மார்பில் கையை வைத்துக் கொண்டார். ''அம்மாடீ!''

அல்லப் போது மூங்கில் கம்பங்கள் பாரம் தாங்காமல் முனகிக் கொண்டிருந்தன. காற்று சற்றுப் பலமாக வீசியது. இடி போன்று சத்தம் ஏற்பட்டு, தென்காசி நடுங்கிப் போனார். தாழ்வாரக் கூரை ஒடிந்து கீழே சாய்ந்து விட்டது. அவர் மீது மூங்கிற் குச்சிகள் உரசியவிதமாகக் கீழே சாய்ந்தன.

''அம்மாடீ!''

தென்காசி தப்பித்து விட்டார். அப்போது முழு மழையும் அவர் மீது அடித்துக் கொண்டிருந்தது. இடுப்பின் வலி வேறு அதிகமாகி விட்டது.

''அம்மா!'' அவர் முனக ஆரம்பித்தார்.

மீண்டும் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. விளக்குடன் அந்தப் பெண்மணி தென்பட்டாள். நிகழ்ந்திருப்பதைப் பார்த்து அவள் விழிகள் அச்சத்தோடு விரிவது தெரிந்தது.

''அம்மா, தாயே!'' தென்காசி வாயெடுக்க முயன்றார். வாய் குழறியது.

''உள்ளே வந்து இந்த ஓரமாக நின்று கொள்ளுங்கள்!''

அவர் பதில் பேசாது உள்ளே சென்றார். கதவருகில் ஒதுங்கியவாறு நின்றார். ஒரே ஒரு நீண்ட அறைதான் வீடாக இருந்தது. அதிலே தான் சமையல், படுக்கை எல்லாம் என்று தோன்றியது. அவர் பார்வையை மறைக்க அந்தப் பெண் ஒரு புடவையைத் திரையாகத் தொங்க விட்டுக் கொண்டாள்.

வாசற் கதவை அவள் அடைக்கவில்லை. விர்ரென்று குளிர் உட்புகுந்து அவரைத் தாக்கியது. வலியோடு கீழே அமர்ந்தார். பிறகு சுருண்டு விழுந்து விட்டார்.

''ஐயோ, அம்மா!'' தென்காசி வாய் விட்டுக் கதறினார். அவர் கண்களில் நீர் நிறைந்து விட்டது. கைகளால் ஏதோ சமிக்ஞை செய்ய முயன்றார். அந்தப் பெண்மணி மீண்டும் விளக்குடன் வந்தாள். அவர் அருகில் ஓர் உலர்ந்த வேஷ்டியைப் போட்டு விட்டுப் போய் விட்டாள்.



நாகரிகப் பெண்மணி. பிறந்தால் இப்படி 'ஷோ ரூம்' பொம்மையாகப் பிறக்கணும்...அடடா! தினம் தினம் என்ன டிரஸ்....என்ன நகை நட்டு...!

தென்காசி அதை உடுத்திக் கொண்டு ஈரத்தைக் களைந்தார். உடம்பு வெட வெட வென நடுங்க, ஓரத்தில் சுருண்டு கொண்டார்.

வலி அதிகமாகி விட்டது. நமச்சிவாயத்தின் மருந்தைத் தடவ நினைத்தார். பையை நோக்கிக் கையை நீட்டினார். மருந்துப் புட்டி கையில் கிடைத்து விட்டது. புட்டியைத் திறக்க முனைந்தார். கைகள் இயங்க மறுத்தன. விரல்கள் விறைத்து நின்று விட்டன.

''கடவுளே!'' என்றார் தென்காசி.

மருந்தை மேலே பூசிக் கொண்டால், அரை மணி நேரத்தில் வலி நின்று விடும். ஆனால் மருந்தை எடுக்கவே முடியவில்லையே.

''அம்மாடீ!''

கை உதறலெடுத்தது. மருந்து இருந்தும் ஒன்றும் செய்ய வகையில்லாது துடித்தார்.

''இப்படியே இறந்து விடுவோமா?'' அந்த நினைவே அவரை உலுக்கி எடுத்தது. கண்கள் இருண்டு வந்தன. செவிகளில், மழையோசை குறைந்து வருவது போல் தோன்றியது. கண்கள் தாமாக மூடி விட்டன. எங்கோ பேரொளியை நோக்கிப் பிரயாணம் செய்வது போல் நினைவு!

எவ்வளவு நாழிகை மயக்கம் என்று தெரியவில்லை. எழுந்த பிறகுதான் மயக்கத்தில் இருந்தோம் என்று தெரிந்தது. மழையின் வெறி சற்று அடங்கி, மறுபாட்டுத் தொடங்குமுன் கேட்கும் தம்புரா இசைபோல் வெளியே புலம்பிக் கொண்டிருந்தது.

நெஞ்சில் சற்று வலி அடங்கியிருந்தது. கைகள் இப்போது அசைந்தன. உடம்பு சுவாதீனத்துக்கு வந்து விட்டதாகத் தோன்றியது. மார்பைத் தொட்டுப் பார்த்தார்! இது என்ன மருந்துப் பூச்சு? இதனால்தான் நெஞ்சு வலி அமிழ்ந்து விட்டதா? இதை யார் பூசியிருப்பார்கள்?

அவர் கண்களில் நன்றிக் கண்ணீர் ததும்பியது. ''அம்மா! புண்ணியவதி!'' என்று

மனத்துக்குள் கூறிக் கொண்டார். உலகமே மறுமுறை ஜனித்து விட்டது போல் அவருக்குத் தோன்றியது.

பிறகு எழுந்து உட்கார்ந்தார். நெஞ்சின் அடிவாரத்தில் வலி மறைந்து கொண்டிருந்தது. உடலில் பழைய தெம்பு அவருக்கு வந்து விட்டது. வெளியே மழை வெறிச்சிட்டுக் கொண்டிருந்தது.

அறையின் சமையல் பகுதி ஓரத்தில் புடவைத் திரைக்குப் பின்புறத்தில் அவள் குந்திட்டு அமர்ந்திருப்பது தெரிந்தது. அவர் நெஞ்சம் தழு தழுத்து விட்டது. அவள் இல்லாவிட்டால், அவர் உயிர் இத்தனை நேரத்தில்... தென்காசியின் இருள் நிறைந்த இதயத்தைக் கிறிக் கொண்டு மின்னலாக ஓர் எண்ணம் எழுந்தது.

சந்தர்ப்பத்தின் சூழ்நிலையில் தூய்மையில்லாத தன் மனத்தில்கூடத் தூய்மை எண்ணங்களை உதித்த விசித்திரத்தை நினைத்தார். சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் இப்படித்தான் ஆணும், பெண்ணும் தூய்மைச் சுடர்களாக மாறி விடுகிறார்களோ?

தூய்மை வாழ்வென்று நினைத்து, தான் சந்திரமதியிடம் எதிர்பார்த்த சட்ட திட்டங்களை இந்தப் பெண்மணி இங்கே அனுசரித்திருந்தால் அவர் உயிர் இது வரையில் நிலைத்திருக்குமா?

பெண்மையின் தூய்மை, வெளித் தோற்றத்துக்கும், செயல்களுக்கும் அப்பால், அவள் அந்தரங்கத்தில் வைத்துக் காக்கப்படுவதாக அவருக்குப் பட்டது.

தென்காசி எழுந்தார். வெளியே மழை நின்று விட்டது. காற்றும் ஒடுங்கிப் போய் விட்டது. எங்கும், உலகில் ஓசை உற்பவிக்கு முன் இருந்த பேரமைதி தோன்றிவிட்டது.

வெளியே எட்டிப் பார்த்தார். இருள் குறைய ஆரம்பித்து விட்டது. வானம் வெளுத்துக் குறுநகை காட்டிக் கொண்டிருந்தது.

தென்காசி வெளியே வந்தார். வீட்டின் உட்புறம் நோக்கி, 'மகராசி! நீ நீடூழி வாழ வேணும் அம்மா !'' என்று கூறிக் கும்பிட்டார். வண்டியருகில் சென்று படுத்துக் கிடந்த மாட்டை எழுப்பினார். பிறகு அதை ஓட்டிக் கொண்டு நடக்கலானார்.

'கலகல' வெனச் சிலம்பும் பறவை ஒலிகள் அவர் செவிகளில் ரம்மியமாய் வீழ்ந்தன. மனம் புரண்டு படுத்து, ஒரு புதுமைப் பகுதியைக் கண்டு விட்டது போல் அவருக்குத் தோன்றியது.

அவர் கண்களில் ஏனோ கண்ணீர் வந்தது. ''சந்திரமதி! சந்திரமதி!'' என்று மனத்துக்குள் அடிக்கடி கூறிக் கொண்டார்.

ஆற்றோரம் உள்ள திருப்பத்தில் அந்தத் 'தூங்குமூஞ்சி'க் கடைக்காரன் எதிரே தென்பட்டான். அவனும் மழைக்காக எங்கோ தங்கியிருக்க வேண்டும்!

தென்காசியின் நினைவு ஓடியது. அவன் மாத்திரம் அவர்கள் ஒரே அறையில் இருந்ததைப் பார்த்திருந்தால்... அவன் அதை எப்படிக் கருதிக் கொள்வான்?

தென்காசிக்குச் சந்திரமதியின் சந்திரவதனமே முன் தோன்றியது. சிறு குழந்தை போல் அவள் எவ்வளவு கபடமற்றவள்? சங்குப் பூப்போல் எவ்வளவு தூய்மையானவள்? அவளை இனி கலங்க விடலாமா? கடினமான சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தலாமா?

விரு விரென்று நடக்கலானார். கண்களில் அவ்வப்போது நீர் வந்து கொண்டிருந்தது. பெண்மையை அதன் சன்னதியிலே சென்று தரிசித்து விட்டு வருபவர் போல் அவர் உள்ளத்தில் ஒரு துப்புரவு விழுந்து விட்டது.

ஊர் சேரும் போது விடிந்து விட்டது. கொல்லைப்புற வழியாக வீட்டை நோக்கி நடந்தார். வீட்டின் எல்லை வந்ததும் அவருக்குத் 'திக்'கென்று விட்டது.

வீட்டையே காணவில்லை.

உற்று நோக்கினார். எல்லாம் மழையில் நொறுங்கி விழுந்து கூளமாகக் கிடந்தன. ஒருகணம் அவர் திக்பிரமையுடன் நின்றார். பிறகு மாட்டின் தலைக் கயிற்றைத் தூர எறிந்து விட்டு வீட்டை நோக்கிப் பாய்ந்தார்.

''சந்திரமதி! சந்திரமதி!''

கூட்டம் வழி விட்டது. சந்திரமதியைக் கிடத்தியிருந்தார்கள். அன்றலர்ந்த தும்பைப் பூ உதிர்ந்து கிடந்தாற் போல, வெண்மை கொழிக்கப் படுத்திருந்தாள்.

''சந்திரமதி!''

அவர் கண்களில் நீர் அடைத்துக் கொண்டு விட்டது.

''அவள் போய் விட்டாள். வீடெல்லாம் அவள் மேலே நொறுங்கி விழுந்து போச்சு!''

தென்காசியின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டார்கள். அவர் வெறித்துப் போய்ச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் அவரை இன்னும் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்றார்கள்.

''மாணிக்கம்!'' அவர் இரைந்து கத்தினார். அங்கே மாணிக்கத்தைக் கீழே கிடத்தியிருந்தார்கள்.

''நீயும் ராவிலே வந்து அகப்பட்டுக் கொண்டாயா, பாவி!''

தென்காசி கண்களை மூடியவாறு அப்படியே அசந்து நின்று விட்டார்.

''பார்த்துக்கிட்டு நிக்குது பாரேன். இந்த அநியாயம் எங்கே உண்டு! ஒரு பெண்ணும், ஒரு ஆணும் இப்படி... கடவுளுக்கே பொறுக்கல்லே தண்டிச்சுட்டாரு!''

அவர் காது கேட்கட்டும் என்று யாரோ பேசிக் கொண்டார்கள். ஆனால் அந்த மொழிகளை அவர் செவி கேட்டதேயன்றி ஆத்மா கேட்கவில்லை.

ஆனால் ஒருகணம் அவர்களது உடல்கள் எங்கெங்கேயிருந்து எடுக்கப்பட்டன என்று கேட்க வேண்டுமென எண்ணினார்.

ஆனால் அந்தக் கேள்வி, சந்திரமதியின் பவித்திரத் தன்மைக்குப் பங்கம் விளைவித்து விடுமோ என்று எண்ணி அதைக் கேட்காது இருந்து விட்டார்.

''என் சந்திரமதி தூய்மையானவள்! என் மாணிக்கம் தூய்மையானவன்!''

நன்றாக விடிந்து விட்டது. மழை நீர் உலகைத் துல்லியமாகக் கழுவியிருந்தது. வானம் மிக, மிக வெளுத்து விட்டது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.





நாள்முழுதும் உல்லாசமாயிருக்க...

ஹிமாலயா புக்கே

டால்கம் பவுடர்

பூமாரி பொழிந்த பூரிப்பு... நீராடி முடிந்த நேரத்திலே... ஹிமாலயா புக்கே டால்கம் பவுடரின் அணைப்பு... ஆஹாஹா, குன்றாத நறுமணம், குளித்தெழுந்த குதூகலம் நாள் முழுதும், நாள் முழுதும்!

இன்று
டீக்கான
புதிய
டப்பாவிலே

குடும்பத்திலுள்ள யாவருக்கும் சாலச் சிறந்த டால்கம்.

.னிலுள்ள இராஸ்மிக் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. HBP.5-X52 TM

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon